D
V211, 31 N65
N65 . 32.7
64927

R-R-295/20

Issued 28—1—1966]

236

# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

# OFFICIAL REPORT

## WEDNESDAY, 10TH NOVEMBER 1965

## VOLUME XXXII—No. 7

*CONTENTS*

PAGES

I Questions and Answers .. .. .. .. .. .. 673–707

II Calling Attention to shortage in supply of nylon yarn to fishermen. .. .. .. .. .. .. .. 707–708

III Announcements—
- (1) Election to the Board of Industries .. .. .. 708
- (2) Election to the Senate of the Annamalai University .. 708
- (3) The Madras Appropriation (No. 5) Bill, 1965 .. .. 779
- (4) The Madras Appropriation (No. 6) Bill, 1965 .. .. 780

IV Government Bills—
- (1) The Madras University (Amendment) Bill, 1965 .. 708–709
- (2) The Madras Land Revenue and Water-cess (Surcharge) Bill, 1965 (L. A. Bill No. 30 of 1965)—cont. .. 709–752
- (3) The Madras Appropriation (No. 5) Bill, 1965 .. .. 779
- (4) The Madras Appropriation (No. 6) Bill, 1965 .. .. 780

V Voting on Demands for Grants for Excess Expenditure in 1962-63—
- Demand No. II—Motor Vehicles Acts—Administration ..
- Demand No. X—Administration of Justice .. ..
- Demand No. XI—Jails .. .. .. .. .. ..
- Demand No. XIV—Medical .. .. .. .. .. ..
  } 752
- Demand No. XXII—Khadi .. .. .. .. .. ..
- Demand No. XXIII—Community Development Projects, etc. .. .. .. .. .. .. .. ..
- Demand No. XXVI—Irrigation .. .. .. .. ..
- Demand No. XXVII—Public Works—Works .. ..
- Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant .. .. .. .. .. ..
  } 753

[P.T.O.

©
GOVERNMENT OF MADRAS
1966

L... D... ...ssembly Department
...ge, Madras-9

PRICE 50

V211, 31 N65
N65·32·7
64927

## CONTENTS—cont.


| | PAGES |
|---|---|
| V Voting on Demands for Grants for Excess Expenditure in 1962-63—*cont.* | |
| Demand No. XXX—Road Transport Schemes .. .. ; Demand No. XXXII—Pensions .. .. .. ; Demand No. XXXVI—Other Miscellaneous Contributions and Assignments .. .. .. ; Demand No. XXXVIII—Capital Outlay on Public Health .. .. .. | 754 |
| VI Second Supplementary Statement of Expenditure for 1965 66 General Discussion .. .. .. | 755–772 |
| VII Voting on Demands for Grants for Further Expenditure in 1965-66— | |
| A. EXPENDITURE ON REVENUE ACCOUNT. | |
| Demand No. I—Land Revenue Department .. ; Demand No. II—Motor Vehicles Acts—Administration .. | 773 |
| Demand No. III—General Sales Tax and other Taxes and Duties—Administration .. ; Demand No. VII—Elections .. ; Demand No. VIII—Head of State, Ministers and Headquarters staff .. ; Demand No. IX—District Administration and Miscellaneous .. ; Demand No. X— Administration of Justice .. | 774 |
| Demand No. XII—Police .. ; Demand No. XIII—Education .. ; Demand No. XIV—Medical .. ; Demand No. XV—Public Health .. ; Demand No. XVI—Agriculture .. ; Demand No. XVII—Fisheries .. | 775 |
| Demand No. XVIII—Animal Husbandry .. ; Demand No. XIX—Co-operation .. ; Demand No. XX—Industries .. ; Demand No. XXV—Welfare of Scheduled Tribes, Castes and Other Backward Classes .. ; Demand No. XXVI—Irrigation .. ; Demand No. XXVII—Public Works—Works .. | 776 |
| Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant .. ; Demand No. XXIX—Public Works—Grants-in-aid .. ; Demand No. XXX—Road Transport Schemes .. ; Demand No. XXXIII—Miscellaneous .. ; Demand No. XXXIIIA—National Emergency .. | 777 |
| Demand No. XXXVI—Other Miscellaneous Conpensations and Assignments .. .. ; B. EXPENDITURE ON CAPITAL ACCOUNT. ; Demand No. XLI—Capital Outlay on Ind ustrial Development .. ; Demand No. XLII—Capital Outlay on Irrigation .. ; Demand No. XLIII—Capital Outlay on Public Works .. ; Demand No. XLIV—Capital Outlay on Road Transport Schemes .. | 778 |
| Demand No. XLVII—Capital Outlay on Schemes of Government Trading .. ; C. EXPENDITURE ON LOAN ACCOUNT. ; Demand No. XLVIII—Loans and Advances by the State Government .. | 779 |
| VIII Papers laid on the Table of the House .. .. .. | 780 |



64927


# THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

**Wednesday, 10th November 1965.**

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

### I.—QUESTIONS AND ANSWERS.

### STARRED QUESTIONS.

**தொழிற்சாலைகளில் விபத்துக்கள்**

*391 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து: க[illegible] முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் [illegible] பாரா—

தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: A statement[a] is placed on the Table of the House.

**திரு. து. ப. அழகமுத்து:** இந்தச் சபைமுன் வைக்கப்பட் டுள்ள அறிக்கையில் 30 தொழிற்பயிற்சி நிறுவனங்களிலிருந்து 9,000 மாணவர்கள் பயிற்சி பெற்று வந்துள்ளார்கள் என்று குறிப் பிடப்பட்டுள்ளது. அப்படிப் பயிற்சி பெற்ற மாணவர்கள் சர்க்கா ரால் நியமிக்கப்பட்டு, சர்க்காரால் சம்பளம் கொடுக்கப்பட்டு தொழிற்சாலைகளை மேற்பார்வையிடுவார்களா? அல்லது, வேறு எந்தவிதமாக அவர்கள் உபயோகப்படுத்தப்படுவார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இதுபற்றி தனிக்கேள்வி வேண்டும்.

**குறைந்த அளவுக் கூலி வீதச் சட்டம்**

*392 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பல்வேறு துறைகளிலும் குறிப்பாக விவசாயத் துறை யிலும் 1948-ம் ஆண்டு குறைந்தபட்சக் கூலி நிர்ணயச் சட்டம் அமுலாக்கப்பட்டு வருவதை பரிசீலனை செய்யும்படி, அண்மையில் மத்திய அரசாங்கத்திடமிருந்து உத்தரவு ஏதேனும் வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

---

a Printed as Appendix I on pages 781-782

[10th November 1965

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (a) & (b) The Government of India have asked the State Governments to take necessary action (i) to revise the minimum rates of wages, wherever they are below Re. 1 a day; and (ii) to tighten up the State wage-enforcement machinery for agriculture for enforcement of the Minimum Wages Act, 1948. The suggestions of the Government of India are under consideration.

*393 **கேள்வி.—திரு. கோ. சி. மணி:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விவசாய தினக்கூலித் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவுக் கூலி நிர்ணயச் சட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் பொருந்தும்படி சட்டம் கொண்டுவர அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நிச்சயித்த குறைந்த அளவுக் கூலிகள், 1952-ம் ஆண்டு தஞ்சாவூர் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம், 1958-ம் ஆண்டு திருச்சிராப்பள்ளி கைளர் வாரம், மாட்டு வாரம் சட்டம் அமலில் உள்ள பகுதிகள் நீங்கலாக தமிழ் நாட்டிலுள்ள மற்ற பகுதிகள் அனைத்திற்கும் பொருந்தும். வேளாண்மைத் தொழிலாளருக்கான குறைந்த அளவுக் கூலி விதங்களை மேற்படி பகுதிகளுக்குப் சேர்த்து விரிவுபடுத்த சட்டம் இயற்றும் நோக்கம் எதுவுமில்லை.

**திரு. கோ. சி. மணி:** தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட சட்டங்களில் பண்ணையாளுக்கான கூலியைத்தான் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், கேள்வி போடப்பட்டது தினக்கூலித் தொழிலாளர்களைப்பற்றியது. அதாவது, தொழிலாளர்களுக்கு தினமும் எவ்வளவு கூலி அத்துக் கூலியாகக் கொடுக்கப்பட்டது. அப்படிப்பட்டவர்களுக்கு கூலியை நிர்ணயிக்க அரசாங்கம் உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** விவசாயத்திலே வேலை செய்கின்றவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கும் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்திலே இடம் இருக்கிறது.

**திரு. கோ. சி. மணி:** பண்ணையாள் பாதுகாப்புச் சட்டத்திலே தினக்கூலி வேலை செய்பவர்களுக்கு கூலி நிர்ணயம் செய்யப்படவில்லை. அந்த தினக்கூலி அதாவது அத்துக் கூலி வேலை செய்பவர்களை வேண்டுமென்றால் வேலைக்கு வைத்துக்கொள்வார்கள் இல்லாவிட்டால் நீக்கி விடுவார்கள்—அப்படிப்பட்டவர்களுக்கு டெய்லி வேஜஸ் நிர்ணயம் செய்வார்களா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** அவர்களுக்கும் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. மாதவன்:** விவசாயிகளுக்கு குறைந்தபட்ச கூலி கொடுக்கவேண்டும் என்று கொள்கை அளவிலே அரசாங்கம் ஏற்றுக்கொண்டதா? அல்லது இதை மாகாணம் முழுமைக்கும்



10th November 1965]

சட்டம் என்ற அளவிலே கொண்டுவராவிட்டாலும் வேறு ஏதாவது ஏற்பாடு செய்வதன் மூலம் குறைந்தபட்ச கூலி அளவை நிர்ணயிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கொள்கை அளவிலே அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால் இருக்கிற நிலைமையைப் பார்த்தால் கண்டிப்பாக குறைந்தபட்சக் கூலியை நிர்ணயித்தால் அவர்கள் இப்போது வாங்குகிற ஊதியம் அதிகமாக இருக்கிறது—அதைக்கூடப் பாதிக்குமே என்ற அச்சம் இருக்கிறது.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன்:** குறைந்தபட்சக் கூலியை நிர்ணயிக்காவிட்டாலும், அவர்கள் வேலை செய்யும் நேரத்தை—இவ்வளவு நேரம்தான் வேலை செய்யவேண்டுமென்று—கட்டுப்படுத்துகின்ற நிலையை சர்க்கார் உருவாக்குமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படாவிட்டால் என்பதல்ல, குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது. நேரத்தைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று சொன்னால், நேரம் முக்கியம் அல்ல வேலைதான் முக்கியம்.

### அரசாங்க அலுவலர்கள் பிரயாணப்படிகள்

*394 **கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல்:**
**திரு. து. ப. அழகமுத்து:** } கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா:—

அரசினர் அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுவரும் பிரயாணப் படிகளை திருத்தி அமைக்கும் திட்டம் ஏதேனும் இம்மாநில அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: No. Sir.

**திரு. து. ப அழகமுத்து:** இப்பொழுது வாழ்க்கைச் செலவுகள் எல்லாம் அதிகமாகிக் கொண்டிருக்கின்ற காரணத்தால், முன்பு கொடுக்கப்பட்ட விகிதமே கொடுக்கப்பட்டு வருவதால் அது அவர்களுக்குப் போதுமானதாக இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? அப்படியானால், இந்த விகிதத்தை இனியாகிலும் மாற்றி அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இது அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்படுகின்ற விஷயம். ஆகையால், இது எல்லாம் அப்போதைக்கப்போது பரிசீலிக்கப்படுவதால் இப்போது உயர்த்துவதாக இல்லை என்று சொன்னேன்.

**திரு. வை. சங்கரன்:** அதிகாரிகளின் பிரயாணச் செலவு சம்பந்தப்பட்டவரை அதிகாரிகள் போகும் இடத்தில் சாப்பாட்டுச் செலவுகள், தங்கும் செலவுகள் அதிகமாகியிருக்கின்றன. மற்றச் செலவுகள் அதிகரித்துக்கொண்டுவருவதால்தான் டியூர்னல்

அலவன்ஸ் உயர்த்தப்பட்டது. அதைப்போல் இந்தப் பிரயாணப் படியையும் உயர்த்துவதற்கு உத்தேசம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** டியர்னஸ் அலவன்ஸ் அதிகப் படுத்தியதுபோல் இந்தப் பிரயாணப்படியை உயர்த்துவதற்கு உத்தேசம் இல்லை.

### *Family Pension Scheme*

* 395 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to liberalise the Family Pension Scheme extended to the widows and minor children of the deceased Government servants; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

**திரு. வை. சங்கரன் :** இப்பொழுது மத்திய அரசாங்கத்திலே ஊழியம் செய்து இறந்து போனவர்களுடைய மனைவிகளுக்கு— விதவைகளுக்கு ஆயுட்காலம் வரைக்கும், குழந்தைகளுக்கு—ஆண்களாக இருந்தால் மேஜர் ஆகும் வரைக்கும், பெண்களாக இருந்தால் திருமணம் ஆகும் வரைக்கும் குடும்ப ஓய்வு பணம் கொடுப்பதற்குத் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தை நம்முடைய சர்க்கார் இனியாகிலும் பரிசீலனை செய்து லிபரலைஸ்ட் பென்ஷன் கொடுக்க உத்தேசிக்குமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இவ்விஷயத்தில் மத்திய அரசாங்கத்தில் என்னென்ன மாறுதல் செய்யப்பட்டிருக்கிறதோ அதையெல்லாம் நமது அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

### பொற்கொல்லர்களின் புனர்வாழ்வு

* 396 *கேள்வி.*—**திரு. எம். எஸ் செல்வராஜன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மாகாணத்தில் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் எத்தனை பேர்?

(இ) செப்டம்பர் 1964 முடிய வேலை தேடிக்கொடுக்கும் ஸ்தாபனங்களில் பதிவு செய்து கொண்டவர்கள் எத்தனை பேர்?

(உ) இதுவரை எத்தனை பேருக்கு மாவட்டவாரியாக வேலை கிடைத்திருக்கிறது ?





(எ) குடியிருப்புக்கும், பயிர் செய்வதற்கும் நிலம் கோரியவர்கள் எத்தனை பேர்?

266

(ஐ) எத்தனை பேருக்கு குடியிருப்புக்கு நிலமும், பயிர் செய்வதற்கு நிலமும் கொடுக்கப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) *to* (*e*) A statement [a] is placed on the Table of the House.

Another statement [b] giving particulars of the loans sanctioned and disbursed to displaced goldsmiths up to 30th September 1965 is also placed on the Table of the House.

**திரு. சா. கணேசன் :** பொற்கொல்லர்களினுடைய நிலைமை மேலும் மேலும் சிரமமானதாகவும், கஷ்டமானதாகவும் ஆகிக் கொண்டு வருவதினாலே இன்று தங்க லோன்கள் வாங்கப்படுவதால், பல அளவுகளில் நகைகள் செய்வது தளர்த்தப்பட்டிருக்கிற காரணத்தினால் இன்றுள்ள நிர்ப்பந்தங்களைப் பொற்கொல்லர்களுக்கு நீக்கி சுதந்திரமாகவோ அல்லது எளிய அளவிலே உள்ள நிலையிலோ இதை மாற்றி அமைக்க சர்க்கார் முன்வருமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தங்கக் கட்டுப்பாட்டைத் தளர்த்துவது மத்திய சர்க்கார் செய்யவேண்டிய விஷயம்.

**திரு. ர. ஜீவரத்னம் :** கனம் தலைவர் அவர்களே, தங்கப் பத்திரத்திலே தங்க முதலீடு செய்யவேண்டுமானால் சிலரிடத்திலே தங்கம் இல்லை. பணம்தான் இருக்கிறது. பணத்தைப்போட்டுத் தங்கத்தை வாங்கவேண்டுமென்றால் தங்கக் கட்டுப்பாடு தடை செய்கிறது. இதை முன்னிட்டாகிலும் மத்திய அரசுக்கு நம்முடைய அரசு தங்கக் கட்டுப்பாட்டைத் தளர்த்த வேண்டுமென்று சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** தங்கப்பத்திரம் வாங்க வேண்டுமானால் தங்களிடத்திலே உள்ள தங்கத்தை பொதுமக்கள் கொடுக்க வேண்டுமென்று தான் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. மற்றவர்களிடமிருந்து இந்தத் தங்கத்தை வாங்கிக் கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனை இல்லை. தங்கக் கட்டுப்பாடு விதிகளைத் தளர்த்த வேண்டுமென்றால், இது பார்லிமெண்டில் கேட்கவேண்டிய விஷயம்.

**திரு. செ. மாதவன் :** கிட்டத்தட்ட 29,500 மனுக்கள் பெறப் பெற்றிருக்கின்றன. இதில் 19,000 மனுக்கள்தான் பரிசீலனை செய்யப்பட்டு கடன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாதிக்குப்பாதிக் குறைவாகக் கொடுக்கப்பட்டதன் காரணம் என்ன ? எமெர்ஜென்சி காரணமாக லோன் கொடுக்க முடியாது என்ற காரணமா ? அல்லது பணம் இல்லாத குறை நமது சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது என்ற காரணமா ?

a Printed as Appendix II on pages 783–784.

b Printed as Appendix III on pages 785–786.

[10th November 1965

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கனம் அங்கத்தினர் அவர்கள் ஸ்டேட்மெண்டைப் படித்துப்பார்த்தாலேயே புரிந்துகொண்டிருக்கலாம். 37,000 மனுக்களில் 8,000 மனுக்கள் தகுதியற்றவை என்று தள்ளுபடி செய்யப்பட்டது. பாக்கியிருக்கிற மனுக்களை 30,000 என்று வைத்துக்கொள்வோமானால், 20,000 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறோம். அதற்காக 2 கோடியே 8 லட்சத்தி சொச்சம் ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் குறை இருக்கிறதென்றோ, சர்க்கார் சரிவர கொடுக்கவில்லை என்றோ சொல்வதற்கு ஒன்றுமே இல்லை.

**திரு. வை. சங்கரன் :** பொற்கொல்லர்கள் பரம்பரை பரம்பரையாக அதிகப் படிப்பிற்குச் செல்லாது இந்தத் தொழிலை நடத்தி வந்தார்கள். தங்கக் கட்டுப்பாடுக்குப் பிறகு "எக்ஸ்சேஞ்ச் ஆபீசர்" மூலமாகச் செல்லும்போது கல்வி, தகுதி உத்தேசித்து அவர்களுக்கு வேலை கொடுக்காத காரணத்தால் கோவாப்பரேட்டிவ் மில்கள் மற்றும் புதிதாக ஆரம்பிக்கப்படும் தொழில்களில் பொற்கொல்லர்களுக்கு இடம் ஓரளவுக்காவது ஒதுக்கி அவர்களுக்கு வேலை கொடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** ஒவ்வொரு தொழில் ஆரம்பிக்கும்போதும் ஒரு பகுதி மக்கள் சம்பந்தமாக ஏற்படுத்தப் படுகிறது. உதாரணமாக, இப்போது கூட்டுறவு மில்களை எடுத்துக் கொள்வோமானால் கைத்தறி நெசவாளர் சங்கங்கள் இதற்கு பணம் போட்டு இருக்கின்றன. கைத்தறி நெசவாளருக்கு முதலிடம் கொடுத்து 50 சதவிகிதம் இடங்களை அவர்களுக்கு ஒதுக்கி இருக்கிறோம். பாக்கி உள்ள 50 சதவிகிதம் இடங்களுக்கு பொற்கொல்லர்களுக்கு 'ப்ரபரன்ஸ்' உண்டு.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** தலைவர் அவர்களே, 31—3—1965-க்கு முந்தி வந்த மனுக்களைத்தான் அரசாங்கம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதாக தெரிகிறது. அதைத் தளர்த்தி 31—3—1965-க்குப் பின் வந்த மனுக்களையும் பரிசீலனைக்கு எடுத்து அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்க வழிவகை செய்வார்களா ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** மனுக்கள் 7, 8 காரணத்திற்குப் போட முடியும். 31—3—1965-க்கு முன் வந்த மனுக்கள், கனம் உறுப்பினர் குறிப்பிடுவது, தாங்களே லைசன்ஸ் பெற்று நகைகள் செய்யவேண்டும் என்பதற்கு போடுகிற மனுக்கள். ஒரு தரம் இதற்கு தேதி நிர்ணயம் செய்தோம். மறுபடியும் அதை நீடிக்க உத்தரவு போட்டோம். மறுபடியும் நீடித்து மற்றொரு உத்தரவு போட்டோம். மூன்று முறை நீடிக்கப்பட்டு இருக்கிறது.

**திரு. டி. எல். சசிவர்ணத் தேவர் :** கிட்டத்தட்ட 8,000 மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதன் காரணம் என்ன ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** விதிகள் இருக்கின்றன. தகுதி இல்லை என்று தள்ளப்பட்டிருக்கிறது.



10th November 1965]

*Mineral Deposits*

* 397 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether any survey has been conducted by the State Geological Branch in the various districts of the State regarding deposits of oil, minerals, gypsum and limestone; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes, Sir. The State Geology Branch of the Industries Department has been carrying out detailed investigations for various minerals in this State except for oil. Investigation for oil is being carried out by the Oil and Natural Gas Commision, a Government of India undertaking; and

(*b*) Details are published in the Book entitled " Minerals of Madras ".

* 398 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether it is a fact that a vast stretch of area bearing limestone suitable for the cement industry has been discovered near Karur in Tiruchirappalli district and Dindigul in Madurai district; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. In 1959, the State Geological Branch investigated these areas for limestone and estimated the reserves to be in the order of 187 million tons of industrial grade. Later in 1963, the areas were investigated in greater detail by the State Geological Branch by mapping on enlarged scales and drilling at suitable intervals to infer the depth of persistence of limestone and its variation in quality at depths. This revealed the occurrence of limestone of cement grade to the extent of 95 million tonnes, admixed with impure limestones over a stretch of 18 miles in an ENE-WSW direction between Karur and Dindigul. Even if 50 per cent allowance is given to the Vagaries of nature, the reserves of limestone in the area would be 47;5 million tons. Further details can be had from the reports of the Geologists published in the *Fort St. George Gazette*, dated 11th October 1961 and 14th July 1965.

**திரு. வை. சங்கரன் :** இந்தக் கனிவளத்திலிருந்து நம் மாநிலத்தில் என்ன பலனுள்ள தொழில் ஆரம்பிக்க முடியும் என்று சர்க்கார் கருதுகிறது ?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** சிமெண்ட் தொழில் தான் ஆரம்பிக்க முடியும்.

(இ) டீ திட்டங்கள் மூன்ருண்டுக் காலம் அமுலில் இருக்கும். இவற்றிற்காகும் செலவை இந்திய அரசாங்கம் ஏற்கும். இத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக வேளாண்மை (இயந்திர) உதவிப் பொறியாளர் ஒருவரும் வேளாண்மை (சிவில்) உதவிப் பொறியாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

**திரு. வை. சங்கரன் :** இந்தத் திட்டத்திற்கு செலவாகும் உத்தேச மதிப்பு என்ன? இதனுல் எவ்வளவு பயன் கிடைக்கும் என்பதைச் சொல்ல முடியுமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 83,000 இதற்காக கொடுப்பதாக இருக்கிறது. கிணறு வெட்டுவதென்ருல், குறிப்பாக கட்டடச் செலவு நம்முடைய மாநிலத்தைச் சார்ந்தது. இதர செலவுகளை 100-க்கு 100 மத்திய சர்க்கார் கொடுக்கிறது என்பதைத் தெரிவித்து கொள்கிறேன்.

* 402 *Q.*—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether it is a fact that the scheme to construct common irrigation wells have not been executed in East Ramanathapuram district; and

(*b*) if so, the reasons therefor?

THE HON. SRI P. KAKKAN : (*a*) & (*b*) A site at A. Muraiyur village has been selected for the construction of an experimental well. The work on sinking the well has been taken up and the work is in progress. If the well is successful and the yield is adequate it may be possible to layout more wells in that area.

**திரு. செ. மாதவன் :** கனம் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே ஏற்கனவே கேட்ட கேள்விக்கு பதில் கொடுக்கும்போது திருப்பத்தூர் வட்டத்தில் 3 புது பாசன கிணறுகள் கட்டுவதற்கு வேலை ஆரம்பிக்கப்படும் என்று சொன்ஞர்கள். இப்போது ஒரு கிணறு வெட்டத்தான் வேலை மேற்கொள்ளப்படுகிறது என்று சொல்கிருர்கள். இந்தக் காலதாமதத்திற்கு காரணம் என்ன? திட்டத்தை கைவிடுகிற எண்ணம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன் :** முதலிலே அங்கே 6 கிணறுகள் வெட்ட யோசனை பண்ணிஞர்கள். பரிசீலனை செய்து பார்த்ததில் அதிகமாகக் கிணறு வெட்டிஞல், விவசாயிகள் கொடுக்கவேண்டிய 'ரேட்' அதிகமாகப் போய்விடுகிற காரணத்தால் தற்போது ஒரு கிணறு வெட்டிஞல் நல்லது என்று அரசாங்கம் நினைத்தது. நான்தான் அங்கே போய்ப்பார்த்ததில் "பணம் செலவாஞலும் பரவாயில்லை. கிணறு வெட்டுங்கள்" என்று சொன்னேன். மேலும் இங்கு தனிப்பட்ட நபர் இல்லாமல், பஞ்சாயத்து யூனியஞே, விவசாயிகள் கூட்டுசொஸைடி பார்ம் பண்ணியோ, முன் வந்தால், அரசாங்கம் நல்லபடியாக உதவி செய்யும்.



**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கைவிடப்பட்டதற்குக் காரணம், மத்திய சர்க்காரிலே போடப்பட்ட திட்டத்திற்கும் நம் சர்க்கார் திட்டத்திற்கும் வேறுபாடு இருப்பதுதான். மத்திய சர்க்காரிலே குழாய்க் கிணறு தோண்டிக் கொடுக்கும்போது எவ்வளவு தண்ணீர் எடுக்கிருர்களோ அதற்குத் தகுந்தபடி அதைப் பொறுத்து மக்கள் தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனுல், நம் சர்க்கார் திட்டத்திலே எவ்வளவு செலவு ஆகிறதோ அதை விதித்துக் கேட்கிருர்கள். அதன்படி ஏக்கருக்கு 45 ரூபாய் அளவுக்கு வருகிறது. மத்திய சர்க்கார் திட்டத்திலே குறைவாக இருக்கிறது. ஆகையால் தான் இந்தத் திட்டத்தை ஏற்க மறுக்கிருர்கள் என்று அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்கிறதா? ஆகவே, இந்தத் திட்டத்தை மாற்றி அமைக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன் :** இதிலே for running the pumpsets and the interest on capital outlay என்ற முறையில் தான் அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்கு உட்பட்டால் தான் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று இப்போது அரசாங்கம் எண்ணுகிறது.

* 403 கேள்வி.—**திரு. கோ. சி. மணி :** கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மூன்ருவது ஐந்தாண்டு திட்ட கால ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தஞ்சை மாவட்டத்தில் வேளாண்மைக்காக வழங்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கை என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** தஞ்சாவூர் மாவட்டத்திற்கு வேளாண்மைப் பணிக்காக ஒதுக்கப்பட்டுள்ள டிராக்டர்களின் எண்ணிக்கை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

(அ) டிராக்டர் வாடகைக்குவிடும் திட்டம்.

கருவிகளுடன் கூடிய டிராக்டர்கள்—1.

புல்டோசர்கள் (பரம்புப் பொறிகள்)—10.

(இ) டிராக்டர் வாடகைக் கொள்முதல் திட்டம் :

டிராக்டர்கள் (ஏற்றக் கருவிகளுடன்)—92.

(உ) மும்முர வேளாண்மை :

மாவட்ட வேலைதிட்டம் வாடகைக்கு விடுவதற்காக டிராக்டர்கள் (கருவிகள் மற்றும் தொடர் வண்டிகளுடன் கூடியவை)—26.

**திரு. கோ. சி. மணி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட டிராக்டர்கள் எந்த முறையில் பயன்படுத்தப்படுகின்றன? அவைகள் யார் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன? யார் யார் நிர்வாகப் பொறுப்பை ஏற்று இருக்கிருர்கள்?

**கனம் திரு. பூ. கக்கன் :** டிராக்டர்கள் எல்லாம் விவசாய இலாகாவிடம் இருக்கின்றன. அந்தந்த ஜில்லா விவசாய அதிகாரிகள் கண்காணித்து வருகிருர்கள்.

[10th November 1965

**திரு. எம். தண்டாயுதபாணி :** தீவிர சாகுபடித் திட்டம் அமல் செய்யப்படுகிற பகுதிகளில் பஞ்சாயத்து யூனியன் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு டிராக்டர் வழங்கப்பட்டிருக்கிறது. தனிப்பட்டவர்களுக்கு எவ்வளவு வழங்கப்பட்டிருக்கிறது, பஞ்சாயத்து யூனியனிடத்தில் எத்தனை டிராக்டர்கள் வழங்கப்பட்டிருக்கின்றன? விவசாய இலாகாவில் எவ்வளவு இருக்கின்றன?

**கனம் திரு. பூ. கக்கன் :** தீவிரச் சாகுபடித் திட்டம் இருக்கிற பகுதியில் ஒவ்வொரு பிளாக்கிலும் ஒவ்வொரு டிராக்டர் வைக்க ஏற்பாடு செய்திருக்கிறது. தனிப்பட்டவர்களுக்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற தகவல் இப்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. கரு. சீமைச்சாமி :** தலைவர் அவர்களே, சின்னச் சின்ன டிராக்டர்கள் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதா? போகப் போக உழுவது என்பது ஒரு பிரச்னையாகப் போய்விடக்கூடும். ஆகையால் சுமார் 5,000 ரூபாய் விலையில், நீண்ட கால தவணை அடிப்படையில் டிராக்டர்கள் கொடுக்க அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அநேகமாக டிராக்டர்களெல்லாம் அன்னிய நாடுகளிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. இப்போது நம் மாநிலத்திலேயே செய்யவேண்டும் என்று திட்டமிட்டு அதற்கான உதவிகளைச் செய்து கொண்டு வருகிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. சி. மணி :** தஞ்சை மாவட்டத்தில் எல்லா பிளாக்குகளிலும் தீவிர சாகுபடித் திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. எல்லா பஞ்சாயத்து யூனியன்களுக்கும் டிராக்டர் கொடுக்கப்பட்டிருக்கிறதா? கொடுக்கப்படாத பஞ்சாயத்து யூனியன்கள் உண்டா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. இருந்தாலும், தஞ்சை ஜில்லாவில் தான் டிராக்டர்கள் ஜாஸ்தியாக கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே 133 டிராக்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**திரு. சா. கணேசன் :** இப்போது சர்க்காரால் வழங்கப்பட்டிருக்கிற, அல்லது சர்க்கார் ஆதிக்கத்தில் இருக்கிற டிராக்டர்களில் எத்தனை வொர்க்கிங் ஆர்டரில் இருக்கின்றன? எத்தனை ஸ்பேர் பார்ட்ஸ் முதலியன இல்லாத காரணத்தினால் செயல்பட முடியாத நிலையில் இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் இப்போது என்னிடத்தில் இல்லை. வழங்கப்பட்ட டிராக்டர்களின் எண்ணிக்கையைப்பற்றித் தான் இந்தக் கேள்வி. ரிப்பேர் ஆன, நல்ல நிலையில் உள்ள டிராக்டர்கள் பற்றி தகவல் இப்போது என்னிடம் இல்லை.



10th November 1965]

**திரு. எம். தண்டாயுதபாணி :** தற்போது வழங்கப்படுகிற டிராக்டர் விலை அதிகமாக இருக்கிறது. 15-16 ஆயிரத்திலிருந்து 24 ஆயிரம் ரூபாய் வரையில் இருக்கிறது. தற்போது ஜப்பானிலிருந்து 'க்வெட்டா வாக்கிங் டிராக்டர்' வரவழைக்கப்பட்டு தஞ்சை மாவட்டத்தில் விவசாய இலாகாவினால் விவசாயிகளுக்குக் காட்டப்பட்டது. விலை கூட 4,000 ரூபாய் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த டிராக்டர்களை அதிகமாக இறக்குமதி செய்து நெருக்கடி நேரத்தில் விவசாய உற்பத்தியைப் பெருக்க விவசாயிகளுக்கு வழங்க உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** எவ்வளவு தூரம் கொடுத்து உதவி செய்ய முடியுமோ அவ்வளவும் செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் கனம் அங்கத்தினருக்கு முழு விவரம் கொடுக்கலாம்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்போது ஃபெர்குஸன் டிராக்டர் இருக்கிறது. விலை அதிகமாக இருக்கிறது. ரஷ்யன் டிராக்டர் வந்திருக்கிறது. அதுவும் நன்றாக வேலை செய்கிறது. இப்போது அரசாங்கம் அதை நிறுத்திவிட்டிருக்கிறார்கள். அதை, மீண்டும் வாங்க ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ரஷ்யன் டிராக்டர் வாங்க ஃபாரின் எக்ஸ்சேஞ் வேண்டியிருக்கிறது. மத்திய அரசாங்கத்தைக் கேட்டு வாங்கிக்கொண்டிருக்கிறோம். அன்னியச் செலாவணி நெருக்கடி காரணமாகத்தான் வேண்டிய அளவுக்கு வாங்க முடியவில்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் டிராக்டர்களின் விலை அதிகமாக இருக்கிறது. நமது நாட்டில் உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்வதாகச் சொன்னார்கள். இங்கே உற்பத்தி செய்யும்போது வெளி நாட்டு டிராக்டர்களை விட விலை அதிகமாக இருக்குமா? அல்லது குறைந்து இருக்குமா?

**கனம் திரு. பூ. கக்கன் :** பார்க்கப் போனால் செலவு கூடுதலாக இருக்கலாம்; செலவு குறைந்து இருந்தாலும் இருக்கலாம் (சிரிப்பு).

**கனம் சபாநாயகர் :** அன்னியச் செலாவணியைச் சாப்பிடாது; அவ்வளவு தான்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** பல பகுதிகளில் யூனியன்களுக்கு டிராக்டர்கள் கேட்டும் இன்னும் கொடுக்கப்படவில்லை. அதே மாதிரி தனிப்பட்டவர்கள் டிராக்டர்கள் கேட்டு, மூன்று மாதங்களுக்கு முன்பே கொடுக்கிறோம் என்று சொல்லியும், டெபாஸிட் கட்டியும் கூட இன்னும் கொடுக்கப்படவில்லை. அதற்கான காரணம் என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** பல விவசாயிகள் விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். ப்ரையாரிட்டி பேசிஸில் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

[10th November 1965

*Agricultural Development*

* 404 *Q*.—SRI C. M. AMBIKAPATHI: Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal before the Government to set up Village Level Action Committees with a view to step up production and quicker distribution of agricultural produces?

**கனம் திரு. பூ. கக்கன் :** இல்லை.

*Underground water*

* 405 *Q*.—SRI V. SANKARAN: } SRI A. DURAIYARASAN: } Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to set up an underground water cell with specialists to explore the underground water resources of Thanjavur delta area; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes; and

(*b*) A ground water cell consisting of one division and three subdivisions under one Superintending Engineer has been set up to investigate drinking water-supply schemes in select areas in and around Madras City and for exploration of ground water resources in other areas for irrigation purposes according to a phased programme to be drawn up with the approval of Government. A request for Special Fund Assistance from the U.N. for a ground water project for Madras State was also made to the Government of India and it has been sanctioned by the U.N. Special Fund Organisation. Under this project, it is proposed to investigate and evaluate the ground water potentialities in the region in and around Madras City, Palar River Basin, Neyveli area and Cauvery Delta in Thanjavur districts with the help of the U.N. Specialists. The Project Manager has just arrived and has to take up the work.

**திரு. வை. சங்கரன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இப்போது கனம் அமைச்சர் அவர்கள் 406-வது கேள்விக்கான பதிலைக் கொடுத்திருக்கிறார் என்று நினைக்கிறேன். ஆகையால் 405-வது கேள்விக்கான பதிலைக் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் அங்கத்தினர் எதையோ நினைத்துக்கொண்டிருக்கிறார். 405-வது கேள்விக்குத் தான் பதில் கொடுத்திருக்கிறேன். தஞ்சையையொட்டி மற்ற விவரங்களையும் கொடுத்திருக்கிறேன்.

**திரு. செ. மாதவன் :** ஊற்று நீரைப் பரிசீலிக்க இப்போது நம் மாநிலத்தில் பயன்படுத்தும் கருவிகள் போதவில்லை. மத்திய சர்க்காரிலே நவீன கருவிகளைப் பயன்படுத்துகிறார்கள். அந்தக் கருவிகளை நம் மாநிலத்திற்கும் பயன்படுத்திக்கொள்ளுகிறோம் என்று சொல்லியிருக்கிறார்களா ?



10th November 1965]

**கனம் திரு. வெ. ராமையா :** அந்த விவரங்களைத் தான் கேள்விக்குப் பதிலாகச் சொல்லியிருக்கிறேன். இன்னும் சொல்லுகிறேன். நம் மாநிலத்தில் இருக்கிற ஊற்று வசதிகளைக் கண்டு பிடிக்கும் அவசியம் இருக்கிறது. இதற்கு நம் அரசாங்கம் சென்ற வருஷம் ஒரு சூப்பரிண்டிங் இன்ஜினீயரை ஸ்பெஷலாகப் போட்டிருக்கிறது. அவர் வேண்டிய புள்ளிவிவரம் சேகரித்துக் கொண்டிருக்கிறார். முறையாகப் புள்ளிவிவரம் சேகரிக்க ஏராள புதிய கருவிகள் தேவைப்படுகின்றன. இந்த உதவியை நாடி மத்திய அரசாங்கம் மூலமாக யுனைடெட் நேஷன்ஸ் எமர்ஜென்ஸி ஃபண்டிலிருந்து உதவி கேட்டோம். அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். யந்திரங்கள் வரும். அதற்கென நிபுணர் ஒருவர் இங்கே வந்திருக்கிறார்.

* 406 *Q*.—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal under consideration of the Government to envisage a scheme for tapping underground and sub-soil water in and around Madras City to meet the growing demands for industrial and residential purposes; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) & (*b*) A ground water cell has already been set up to investigate the occurrence and potentialities in the State according to a phased programme. The cell is at present engaged in the production scheme for supply of 30 million gallons of water per day for the industries that are coming up in the Manali belt. A request for Special Fund Assistance from the U.N. for a ground water project for Madras State was also made to the Government of India and it has been santcioned by the United Nations Special Fund Organisation. The period of the project is three years. The type of assistance sanctioned includes services of experts, fellowships and equipment besides monetary assistance. The U.N. has also deputed a Project Manager and he has commenced work.

**திரு. வை. சங்கரன் :** இதனுடைய உபயோகமானது சென்னை
நகரத்திற்கு மட்டும் கிடைக்கும் வகையில் பயன்படுத்தப்படுமா ? 9-00
அல்லது பின்னாலே, இதே போன்று மற்ற நகரங்களின் தண்ணீர்த் a.m.
தேவையைப் பூர்த்தி செய்யும் அளவுக்குப் பயன்படுத்தும் முறையிலும் உபயோகப்படுத்தப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமையா :** அதற்குத்தான் கேள்வி 405-க்கு பதில் சொன்னேன். சென்னை நகரத்தில் குடி தண்ணீருக்கு 'ஹை ப்ரையாரிடி' கொடுக்கக்கூடிய நேரத்தில், ராஜ்ய அரசாங்கம் காவேரி டெல்டா ஊற்று வசதியைக் கண்டுபிடித்துச் சொல்லுவதற்கு நீர்ப்பாசனத் துறையிலும் முயற்சி எடுத்திருக்கிறார்கள். ஆகவே, குடி தண்ணீர் சம்பந்தமாக முயற்சி எடுக்கும்பொழுது, நீர்ப்பாசனத்திற்கும் ராஜ்ய அரசாங்கம் ஒரு முக்கியமான இடம் கொடுத்திருக்கிறார்கள். இந்த ஸ்பெஷல் பண்டு ஆர்கனைஸேஷன்

[10th November 1965

கீழ் வரக்கூடிய நிபுணர்கள் தஞ்சை ஜில்லா, பாலாறு பேஸின், நெய்வேலிக்கு அருகாமையில் இங்கெல்லாம் இருக்கக்கூடிய ஊற்று நீரைக் கண்டுபிடிப்பதிலும் கவனம் காட்டுவார்கள். அவர்களுடைய முயற்சி நமக்கு உதவியாக இருக்கும்.

### *Irrigation channels*

* 407 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there are any proposals formulating schemes for the removal of silt in irrigation channels, and for the sinking of filter points in Cauvery Delta Area; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes; and

(*b*) *Silt clearance of channels.*—The "Voikal Vettu Programme" for clearance of silt in irrigation and drainage channels other than those in charge of the Public Works Department in the Cauvery and Vennar deltas, sanctioned by Government in November 1962 is carried out every year through the agencies of the Panchayat Unions and Panchayats. So far as the 123 channels in charge of the Public Works Department are concerned, the silt clearance work has been ordered to be carried out by the Public Works Department from the year 1964.

*Sinking of filter points.*—A special scheme for sinking 2,000 filter point tube wells in Thanjavur district under the Crash Programme for Minor Irrigation has been sanctioned by Government in January 1965 with a view to enable the ryots of Thanjavur district to raise an additional crop during summer and early transplantation of Kuruvai. The scheme is in progress and steps have been taken to extend supply of electricity to about 461 filter points out of 700 which were expected to be ready by August 1965.

### *Supply of kerosene*

* 408 *Q.*—SRI V. SANKARAN :
SRI K. CHEEMAICHAMY :
SRI S. MADHAVAN :
SRI K. S. MANI :
SRI M. KALYANASUNDARAM : } Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government are aware of the short supply of kerosene oil in the State;

(*b*) if so, the reasons for the shortage; and

(*c*) the action taken to meet the normal requirements of the public?



10th November 1965]

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The answer is in the affirmative;

(*b*) There is no appreciable shortage in quantity. The short supply is due to various other factors (viz) transport bottlenecks, defective distribution and so on; and

(*c*) The Government of India have acquired powers under the Defence of India Rules to fix the prices, to inspect and direct the proper maintenance of accounts and to regulate the supply and distribution of kerosene. Necessary instructions have been issued to the Collectors in this regard. The representatives of the various oil companies have also been requested to co-operate in the supply and distribution of kerosene oil. The Government are closely watching the situation prevailing in all parts of the State and immediate action will be taken to rush supplies to the deficit pockets as and when scarcity is reported in any part of the State. The situation has improved considerably.

**திரு. செ. மாதவன் :** கிராமப்புறத்திலுள்ள விவசாயிகளுக்கு அவர்களுடைய வீடுகளிலே உபயோகப்படுத்தக் கூடிய அளவை யாவது அரசாங்கம் கணக்கிட்டு, அங்கே கட்டாயம் மண்ணெண் ணெய் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** கெரசின் விநியோகத்தைப் பொறுத்த வரையில் கிராமப்புறம், நகரப்புறம் என்பதல்ல. அத்தியாவசியமான தேவைக்கு, வீட்டு விளக்குக்காக வேண்டியதைக் கொடுப்பதற்கு வேண்டிய முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு ஜில்லாவுக்கும் போதுமான சப்ளை கொடுப்பதற்கு கம்பெனிகளும், அரசாங்கமும் சேர்ந்து முயற்சி எடுத்துக்கொண்டு வருகின்றன. நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்லும் பொழுது சில சந்தர்ப்பங்களில் மண்ணெண்ணெய் போய்ச் சேர்வதற்குத் தாமதம் ஏற்பட்டதால் சில இடங்களில் நெருக்கடி ஏற்பட்டது என்று சொன்னேன். 2, 3 மாதங்களுக்கு முன்பு திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் அதிகமாக நெருக்கடி இருந்தது. அங்கே கெரஸின் போய்ச் சேர்வதற்கு ஏற்பாடு செய்ததால் நிலைமை சீர்திருந்தியது பரிபூரணமாகக் கிடைக்கவேண்டுமென்பதற் கான முயற்சிகளைக் கலெக்டர்கள் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. சா. கணேசன் :** மண்ணெண்ணெய் விலை நிர்ணயம் செய்கிறபொழுது ஒவ்வொரு பிராந்தியத்திற்கும், அல்லது தலைமை நகரம் அல்லது ஜில்லா பிராந்தியம் என்றெல்லாம் தனித்தனியாக விலை நிர்ணயிக்கப்படவிருக்கிறதா ? அல்லது எங்கும் ஒரே விலை யாக இருக்கும்படியாக ஒரு பொது அளவிலே விலை நிர்ணயிக்க உத்தேசம் உண்டா ? அப்படிச் செய்யும்பொழுது எல்லா கம்பெனிகளுக்கும் ஒரே மாதிரியான விலை நிர்ணயிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** அது சம்பந்தமாக போதுமான விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை. அதுபற்றித் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

**திரு. வை. சங்கரன்:** நகர்ப்புறங்களில், குறிப்பாக என்போன்றவர்கள் கூட, லிட்டர் ஒரு ரூபாய்க்கு மேலே விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்பொழுது அந்த நிலைமை இருந்து கொண்டுவருகிறது என்று முறையிட்டுக்கொண்டு வருகிறோம். இருந்தபோதிலும், நிர்ணயிக்கப்பட்ட விலைக்குக் கண்டிப்பாக கெரஸின் கிடைக்கும்படி, சீக்கிரம் நல்ல முறையில் விநியோகத்தை ஏற்பாடு செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகளை கலெக்டர்கள் எடுக்கும்படி சர்க்கார் உத்தரவிடுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** மதுரை போன்ற பெரிய நகரங்களில் கெரஸின் விநியோகத்திற்குக் குடும்பக் கார்டு அடிப்படையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறை பரவலாகக் கிராமப்புறங்களுக்கு விஸ்தரிக்கப்பட வேண்டும். நான் தெரிந்துகொண்ட வரையிலே அதற்கு ஒவ்வொரு கலெக்டரும் போதுமான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் தீவிரமாக முயற்சி எடுக்கப்படும்.

**திரு. கரு. சீமைச்சாமி:** கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு கெரஸின் நிச்சயம் கிடைக்கவில்லை. அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்துவருவதாகச் சொல்லுகிறார்கள். பெரிய நகரங்களில் கெரஸின் அவ்வளவாகத் தேவையில்லை, மின்சாரம் இருக்கிறது. ஆனால், கிராமப்புறங்களில் கெரஸின் அவசியம் தேவை. கிராமப் புறங்களில் கெரஸின் வாங்கவேண்டுமென்றால், நான்கு மைல் களுக்கு அப்பால் லைசென்ஸ் கொடுக்கப்பட்ட கடை இருக்கிறது, அங்குதான் போய் வாங்கிக்கொண்டு வரவேண்டியிருக்கிறது. ஆகவே, கிராமப் புறங்களில் கெரஸின் சுலபமாகக் கிடைப்பதற்கு பஞ்சாயத்து போர்டு மூலமாக விநியோகம் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** நகரங்களில் இருக்கக்கூடிய எல்லோரும் மின்சார வசதி படைத்தவர்கள் அல்லர். சென்னை நகரத்தை எடுத்துக்கொண்டாலும், ஆயிரக்கணக்கான குடிசை வாசிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் கெரஸின் கொடுக்கவேண்டும். கிராமப்புறங்களிலும் கெரஸின் கிடைக்க வேண்டும். இப்பொழுது டிஸ்ட்ரிப்யூடர்ஸ் அல்லது ஏஜெண்ட்ஸ் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக் கிறது. அதை மறுபரிசீலனை செய்யும்படியாகக் கேட்டுக்கொண் டிருக்கிறோம். ஒவ்வொரு பஞ்சாயத்து ஏரியாவுக்கும் தேவையான கெரஸினை அவர்கள் மூலமாக விநியோகம் செய்ய முடியுமா என்று பரிசீலனை செய்து கொண்டிருக்கிறோம். எனக்குத் தெரிந்த வரையில், ஒன்றிரண்டு கலெக்டர்கள் அந்த அடிப்படையில் நட வடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து அது பற்றிப் பரிசீலனை செய்து கொண்டு வருகிறோம்.





**திரு. கோ. சி. மணி:** கிராமப்புறத்தில் தனியாக கெரஸின் விநியோகம் செய்வதற்கென்று யாரும் வியாபாரம் செய்யவில்லை; நிர்ணயிக்கப்பட்ட ஏஜெண்டுகள் இல்லை. ஆகவே, அரசாங்கம் கலெக்டர்கள் மூலமாக ஒவ்வொரு கிராமத்திலும் லைசென்ஸ்தார் ஏற்படுத்தி, அவர்கள் மூலம் கெரஸின் விநியோகிக்க ஏற்பாடு செய்வதற்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. வெ. ராமையா:** லைசென்ஸ்தார் ஏற்படுத்துவதா அல்லது கோவாபரேடிவ் சொசைடிகள் மூலம் விநியோகம் செய் வதா அல்லது பஞ்சாயத்துக்கள் மூலம் விநியோகம் செய்வதா என்பதெல்லாம் அங்காங்கு இருக்கிற நிலைமைக்குத் தகுந்தவாறு முடிவு செய்யப்பட வேண்டும். யார் மூலமாக விநியோகம் செய் தாலும் சரி, கொடுக்கிற கெரஸின் ஒழுங்காக மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும். அதைக் கண்காணிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

**திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம்:** கெரசின் ஒரு லிட்டர் விலை ஒவ்வொரு ஊருக்கும் ஒரு மாதிரியாக இருக்கிறது. எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருக்கிற சகோதரி அவர்கள் ஊரில் ஒரு லிட்டர் 56 பைசாவுக்கு விற்கிறது என்று சொல்லுகிறார்கள். சென்னையில் அதைவிடக் குறைவாக விலை இருக்கிறது. திருநெல்வேலியில் 60 பைசாவுக்கு விற்கிறார்கள். இதன் காரணம் என்ன?

**கனம் திரு. வெ. ராமையா:** காரணம் நன்றாகத் தெரியும். துறைமுகத்திற்கு அருகாமையில் சென்னை இருக்கிறது. திருநெல் வேலிக்கு இங்கிருந்து கெரசின் போய்ச் சேரவேண்டியிருக்கிறது. இது தான் காரணமாக இருக்கும். உறுதியாகப் பதில் சொல்ல வேண்டுமென்றால், அதற்குத் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

**திரு. எஸ். ஜே. ராமசாமி:** தலைவர் அவர்களே, ஒரு லிட்டர் கெரஸின் விலை மதுரை மாவட்டத்தில் ஒரு ரூபாய் என்று நண்பர் திரு. சங்கரன் அவர்கள் சொன்னார்கள். எங்கள் மாவட்டத்தில் ரூ. 1.25 அல்லது 1.50 கொடுத்தால் கூட அகப்படுவதில்லை. அந்த அளவுக்கு நிலைமை இருக்கிறது. இருந்தாலும், எஸ்ஸோ, கால்டெக்ஸ், பர்மா ஷெல் ஆகிய மூன்று கம்பெனிகளும் எண்ணெய் கொடுப்பதை நிறுத்திவிட்டன. அதனால்தான் கஷ்டம் ஏற்பட்டது என்று சர்க்கார் சொன்னார்கள். ஆகவே, வேறு எந்தக் கம்பெனிக்காவது ஆர்டர் செய்து, கெரசின் சுலபமாகக் கிடைக்க ஏற்பாடு செய்ய அரசாங்கம் உத்தரவிடுமா?

**கனம் திரு. வெ. ராமையா:** ஆம், ஒரு சிக்கல் இருந்தது. கனம் உறுப்பினர் சொல்வது போல, தனியார் கம்பெனிகளுக்கு டிஸ்ட்ரிப்யூட் செய்யக் கூடிய சக்தி இல்லை. பல இடங்களிலே அவர்களிடம் போதுமான மண்ணெண்ணெய் இல்லை. அதே சமயத்தில் தேவையான எண்ணெய் இந்தியன் ஆயில் கம்பெனியிடம் இருக்கிறது. போதுமான அளவுக்குக் கொடுக்க முடியும். ஆகவே இதற்கு வேண்டிய முயற்சிகள் எடுக்கிறார்கள். ஆனால், போக்குவரத்துத் தடை இருப்பதால் காமதம் ஏற்பட்டது. அது இப்பொழுது நிவர்த்தியாகும் என்பதில் சந்தேகம் இல்லை.

[10th November 1965

**திரு. இர. பொன்னப்ப நாடார்** : சார், தேவை அடிப்படையில் ஒரு ஜில்லாவிற்கு இவ்வளவு என்று கோட்டா நிர்ணயிக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா** : நமக்குக் கிடைக்கும் மண்ணெண்ணெய்யைப் பொருத்து, தேவையை அனுசரித்துக் கொடுக்க முயற்சி எடுக்கிறோம்.

*Distribution of sugar*

* 409 *Q.*—SRI V. SANKARAN :
SRI P. K. MOOKIAH THEVAR : } Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to adopt a new basis for the distribution of sugar in Madras City;

(*b*) if so, the details thereof; and

(*c*) whether the same basis would be extended to other districts also?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The distribution of sugar on card system has come into effect from 28th June 1965 onwards in Madras City. For the purpose of distribution, various income groups have been fixed. For classifying the family cardholders into different income groups, the highest income earned by any one member covered by the family card is taken into account. The issue of sugar on card system will be on a monthly basis; and

(*c*) The answer is in the affirmative. The Collectors have recently been instructed to introduce the card system in their districts in the urban areas, in the first instance, and gradually extend it to rural areas.

*ரொட்டி தயாரிப்பு*

* *410 கேள்வி.—திரு. எம். எஸ். மணி* : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆஸ்திரேலியா நாட்டின் உதவியுடன் நவீன சாதனங்களுடன் கூடிய ரொட்டி தயாரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The Government of India have approved a project for establishing six modern bakery units in selected urban centres in the country. One of them will be set up in Madras City within the campus of the Institute of Catering Technology at Adyar. The implementation of the Project will be entrusted to a Limited Company in the public sector and the Government of India are taking steps to form a Limited Company under the Indian Companies' Act; and



10th November 1965]

(*b*) It is understood that the Australian Government would be assisting this Project with finance under the Colombo Plan for purchasing equipment. The factory will produce bread on sound and scientific lines and economically. The capacity of the plant may be 30,000 loaves of 1 lb. per day of 24 hours.

**குடிநீர் வழங்குதல்**

* ***411 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு*** : கனம் செய்தி விளம்பரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

திண்டிவனம் வட்டத்திலுள்ள சாரம் கிராமத்தில் அரிஜன காலனிக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எந்த நிலையிலுள்ளது ?

**கனம் திரு. கோ. பூவராகன்** : தென் ஆர்க்காடு மாவட்டம் திண்டிவனம் வட்டத்தைச் சேர்ந்த ஒலக்கூர் பஞ்சாயத்து யூனியனில் உள்ள சாரம் கிராமத்தில் ராட்டினக் கிணறு ஒன்று இருக்கிறது. இக் கிணற்றிலிருந்து ஹரிஜனங்களுக்குத் தண்ணீர் வழங்கப்படும். மேற்சொன்ன கிணற்றிலிருந்து பரண் தொட்டி ஒன்றில் (overhead tank) நீரை நிரப்பிக்கொண்டு குழாய்கள் மூலம் தண்ணீர் வழங்குவதற்காக அத் தொட்டியைக் கட்டும் வேலை நடந்து வருகின்றது. இதன் கல் கட்டிட வேலைகளும் தொட்டியின் மேல் தளமும் கட்டி முடிக்கப்பட்டுவிட்டன. குழாய்களும் பொருத்தப்பட்டுவிட்டன. மோட்டார் பம்பு ஒன்று வாங்கி சீக்கிரம் தண்ணீர் வழங்குவதற்காக ஒலக்கூர் பஞ்சாயத்து யூனியனும் அவசியமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

*திரு. ஆ. தங்கவேலு* : கனம் தலைவர் அவர்களே, இந்த சாரம் ஹரிஜனக் காலனிக்கு இந்தக் குடிநீர் திட்டத்திற்கு, இன்றைய கனம் முதல் அமைச்சர் கனம் பக்தவத்சலம் அவர்கள் 5—7—1960-ல் கல்நாட்டு விழா செய்தார்கள். இப்பொழுது ஐந்தாண்டுக் காலமாக அதைச் செய்து முடிக்காததற்குக் காரணம் என்ன என்று அறிவிக்க முடியுமா ?

*கனம் திரு. கோ. பூவராகன்* : இந்தக் குடிநீர் திட்ட வேலை பஞ்சாயத்திற்கும் பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன் நிதி வசதியைப் பொருத்திருக்கிறது. அரசாங்கத்தில் ஒன்றும் காலதாமதம் இருப்பதாகத் தெரியவில்லை.

***Cultural Heritage of India***

*** 412 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—**

**(*a*) whether there is any proposal to publish copies of mural paintings and proto-type of sculptures and architects of important temples in the State with a view to acquaint the people of the cultural heritage of India; and**

**(*b*) if so, the details thereof?**

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. வை. சங்கரன் :** வட ராஜ்யங்களிலே அஜந்தா குகை போன்ற இடங்களில் உள்ள சித்திரங்களை எடுத்து வெளியிடு கிறார்கள். அதே போல நம்முடைய மாநிலத்திலுள்ள சித்தன்ன வாசல் மூரல் பெய்ண்டிங்குகளை வெளியிட்டு, எல்லோருக்கும் விநி யோகிக்க சர்க்கார் முயற்சியை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. கோ. பூவராகன் :** நம்முடைய ராஜ்யத்திலும் முயற்சி எடுக்கப்பட்டு, சிதம்பரம், ஸ்ரீரங்கம் கோவில்களில் சுவற்றில் இருக்கும் சித்திரங்களை எடுத்து மதராஸ் மியூசியத்தில் வைத்திருக் கிறார்கள். பல இடங்களில் வைக்கவும் ஏற்பாடு இருக்கிறது. போஸ்டல் கார்டுகளில் படங்கள் போட்டும் அவற்றை மக்களுக்கு விநியோகிக்கிறார்கள்.

### கிராம அபிவிருத்தித் திட்டங்கள்

* 413 கேள்வி.—**திரு. எஸ். ஆறுமுகம் :** கனம் செய்தி விளம் பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன்களுக்குக் கிராம அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்கென மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 15 கோடியை, தேசீய நெருக்கடி காரணமாக 1966-67 ஆண்டு வரை செலவு செய்ய வேண்டும் எனப் பிறப்பிக்கப் பட்ட உத்தரவை மறு பரிசீலனை செய்யும் உத்தேசம் உண்டா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** இல்லை.

### மானாமதுரை மண்பாண்டத் தொழிலாளர் சங்கம்

* 414 கேள்வி.—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் செய்தி விளம்பரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்வி களுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரையிலுள்ள மண் பாண்டத் தொழிலாளர் சங்கத்திடமிருந்து (பதிவு எண் 1425) மண்பாண்டம் சுடுவதற்காக சூளை ஆரம்பிக்க நில ஆர்ஜிதம் செய்யக் கோரி அண்மையில் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) ஆம்.

(இ) மானாமதுரை மண்பாண்டத் தொழிலாளர் சங்கத்திற் காகச் சூளை ஒன்று கட்டுவதற்குத் தேவையான நிலத்தை அரசாங் கச் செலவில் ஆர்ஜிதம் செய்ய உத்தேசம் உள்ளது. 1894-ம் ஆண்டு நில ஆர்ஜிதச் சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் அறிவிப்பு, தேவை யான நிதி ஒதுக்கீடு செய்துவிட்டு, வெளியிடப்படும்.



### புறம்போக்கு நிலங்களை அடைமானம் செய்தல்

* 415 கேள்வி.—**புலவர் கா. கோவிந்தன் :** கனம் செய்தி விளம் பரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தீர்வை விதிக்காத புறம்போக்கு நிலங்களை நிலமற்ற ஏழைகளுக்கு அடைமானம் செய்து வைக்கத் தடையாக உள்ள பஞ்சாயத்துச் சட்ட விதிப் பிரிவைத் திருத்தியமைக்கக் கோரி புலவர் கா. கோவிந்தன், எம்.எல்.ஏ., விடமிருந்து அரசாங்கத் திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

**புலவர் கா. கோவிந்தன் :** தலைவர் அவர்களே, இந்த விண்ணப்பம் வரவில்லை என்று அமைச்சர் சொல்லுகிறார்கள். நான் ரெவின்யூ துறைக்கு அனுப்பி அது ஆர்.டி.எல்.ஏ. துறைக்கு அனுப்பப் பட்டிருக்கிறது என்பதற்கு விவரம் என்னிடம் இருக்கிறது. வரவில்லை என்று சொன்னாலும், புறம்போக்கு நிலங்கள் ஏராளமாக இருப்பதால், அவற்றை எடுத்துக் கொள்வதால், வருவாய் துறைக் கும் நலம். அதில் என்ன கஷ்டம் என்று தெரியவில்லை. ஆகவே, பஞ்சாயத்துச் சட்டத்தைத் திருத்தினாலொழிய அதைச் செய்ய முடியாது என்பதால், உடனடியாக அதைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. கோ. பூவராகன் :** அரசாங்கம் பரிசீலனை செய்து, சட்ட இலாகா பரிசீலித்து, அட்வொகேட்-ஜெனராலுக்கு ஒபினிய னுக்காக அனுப்பியிருக்கிறார்கள், அது வந்த பிறகு இதெல்லாம் கவனிக்கப்படும்.

### *Pre-University Classes*

* 416 Q.—SRI S. J. RAMASWAMI : } Will the Hon.
SRI V. SANKARAN : }
the Chief Minister be pleased to state—

(a) the number of applications received for admission to the Pre-University Classes in the Government Arts Colleges for the year 1964–65;

(b) the number of students admitted; and

(c) whether there is any proposal to provide additional seats for the Pre-University Classes in view of the present rush for admission?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) 10,926;

(b) 4,642; and

[10th November 1965

(c) The University will be considering the question of providing additional seats for the Pre-University Classes. The Government have sanctioned the opening of 7 new Pre-University Class Colleges in various centres during 1965–66.

* 417 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the details of the procedure laid down for admission of students to Pre-University Course in the Colleges, under the management of private agencies, and the Government;

(*b*) whether any standard other than eligibility in the S.S.L.C. Examination is prescribed; and

(*c*) whether the principle of communal representation to backward communities and Scheduled Castes and Tribes is observed?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*c*) A statement [a] is laid on the Table of the House.

*Arts Colleges*

* 418 *Q.*—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any representations have been received recently from the public of Tiruvannamalai, North Arcot district, for the opening of an Arts College there, from the academic year 1965–66; and

(*b*) if so, the action taken thereon?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No.

(*b*) Does not arise.

* 419 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether Sri E. V. Ramasami (Leader of the Dravida Kazhagam) has made an offer of finance for opening a College at Tiruchirappalli; and

(*b*) if so, the details of the same?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes; and

(*b*) Rs. 3,50,000 in cash and property known as "Lanka House" which comprises of one building and 9.65 acres of land valued at about Rs. 2 lakhs.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இந்தக் கல்லூரிக்குப் பெரியார் பெயரை வைக்க வேண்டும் என்கிற கோரிக்கை வந்து, அது மறுக்கப்பட்டு, அது மறுபடியும் பரிசீலனைக்கு வந்ததா ? அதன்பேரில் என்ன உத்தரவு போடப் பட்டிருக்கிறது ?

a Printed as Appendix IV on page 787.



10th November 1965]

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவர்கள் 5½ லட்சம் ரூபாய் நன்கொடை கொடுத்திருக்கிறார்கள். கணிசமான தொகை கொடுப்பவர்களுடைய பெயரை வைக்கவேண்டுமென்றால், அது வைக்கப் படுகிறது.

**திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இவருக்கு கல்லூரி நிர்வாகத்தில் பங்கு உண்டா என்று அறிவிக்க முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அவ்வாறு ஒன்றும் இல்லை.

* 420 **கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் முதல் அமைச்சர்** தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரையிலுள்ள மீனாட்சி அரசினர் கல்லூரி நிதிக்காக அண்மையில் நடிகர்களின் கலா நிகழ்ச்சியும், கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மூலம் வசூலான தொகை எவ்வளவு ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes; and

(*b*) Variety Entertainment, Rs. 48,765.

Cricket Match, Rs. 63,430.

* 421 **கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) புதுக்கோட்டையில் பெண்களுக்கென ஒரு தனிக் கலைக் கல்லூரி நிறுவ வேண்டும் என்று அவ்வூர் மக்கள் அண்மையில் முதல் அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் ஏதேனும் கொடுத்துள்ளனரா ?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes; and

(*b*) It was decided that no Women's College at Pudukkottai need be opened since there is no immediate need for it.

**திரு. பி. முருகையன் :** தலைவர் அவர்களே, புதுக்கோட்டையில் பெண்களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி இல்லாததால், கலைக் கல்லூரியிலும் இடவசதி இல்லாததால், அடுத்த ஆண்டிலிருந்தாவது அங்கே ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்க முயற்சி எடுக்கப்படுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** புதுக்கோட்டையில் ஒரு நிகழ்ச்சிக்கு நான் போயிருந்தபோதே அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பெண்களுக்கு அப்படிக் கல்லூரி வேண்டுமென்றால், ஐந்து லட்ச ரூபாய் நன்கொடை வசூலித்துக் கொடுத்தால் யோசிக்கலாம் என்று அப்பொழுதே கூறியிருக்கிறேன்.

### சட்டக்கல்லூரிக்கு மாணவர்கள் தேர்வு

*** 422 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

*(அ) 1965-66-ம் ஆண்டில் சட்டக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்துக் கொண்டவர்கள் எத்தனை பேர் ?*

*(இ) அவர்களில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் ?*

*(உ) தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் ஹரிஜன வகுப்பினர் எத்தனை பேர் ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 1,235;

(*b*) 1,235; and

(*c*) 30.

**திரு. செ. மாதவன் :** சட்டக் கல்லூரியில் சேர எத்தனை பேர் விண்ணப்பித்துக் கொண்டாலும், அத்தனை பேர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டு வந்தார்கள். இப்பொழுது கட்டுப்பாடு செய்து, குறிப்பிட்ட எண்ணிக்கை தான் மாணவர்களைச் சேர்க்கவேண்டும் என்ற விதியை அரசாங்கம் ஏற்படுத்தி இருக்கிறது. பழைய முறையையே கடைப்பிடிக்க அரசாங்கம் முன்வருமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நான் இப்பொழுது அளித்த விடையின்படி, எவ்வளவு பேர் மனுப்போட்டார்களோ, அவ்வளவு பேர்களும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

**திரு. இரா. நெடுஞ்செழியன் :** நாட்டினுடைய தேவையைக் கருதி, மதுரையிலோ அல்லது கோவையிலோ வேறொரு சட்டக் கல்லூரியை வைத்து, அதன் மூலமாக அதிகமான மாணவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தரும் உத்தேசம் அரசாங்கத்திற்கு உண்டா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அத்தகைய உத்தேசம் ஒன்றும் அரசாங்கத்திற்கு இல்லை. மதுரைப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட பிறகு அந்தப் பல்கலைக்கழகம் இதைப்பற்றி யோசிக்கலாம்.

### பள்ளி இளநிலைத்துணை ஆய்வாளர்கள்

*** 423 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

*(அ) கல்வி இலாகாவில் ஜுனியர் டிப்டி இன்ஸ்பெக்டர்களுக்கு* (Junior Deputy Inspectors of Schools) *கடந்த 10 ஆண்டுகளாக அவர்களது ஊதிய விகிதத்தில் சம்பள உயர்வு அனுமதிக்கப்படவில்லை என்பதும், அவர்களது பணி முறைப்படுத்தப்படவில்லை* (Regularisation) *என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா ?*

*(இ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?*





THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes; and

(*b*) It was proposed to upgrade all the posts of Junior Deputy Inspectors of Schools into Deputy Inspectors, Grade II and hence the question of regularisation of services of the Junior Deputy Inspectors was held up for some time. However, instructions have since been issued to regularise their services.

### ஆசிரியர் பயிற்சி

*** 424 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

*தமிழ் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு சர்க்கார் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகின்றதா ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes; if the trainee belongs to Scheduled Caste or Backwar Classes.

*** 425 கேள்வி.—திரு. பி. முருகையன் :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

*(அ) 1963-64-ல் திருச்சி மாவட்டத்தில் உள்ள அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் புதுக்கோட்டை டிவிஷனிலிருந்து எத்தனை ஹரிஜன மாணவர்கள் பயிற்சி பெற விண்ணப்பித்தனர் ?*

*(இ) இதில் செகண்டரி கிரேடு, ஹையர் கிரேடு வகுப்பினர்களுக்காக தனித்தனியே எத்தனை விண்ணப்பங்கள் வந்தன ?*

*(உ) இரண்டு பிரிவுகளிலும் எத்தனை ஹரிஜன மாணவர்களுக்கு இடம் கொடுக்கப்பட்டது ?*

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 55;

| | | |
|---|---|---|
| (*b*) | Senior Basic Grade ... ... ... | 18 |
| | Secondary Grade ... ... ... | ... |
| | Junior Basic Grade ... ... ... | 36 |
| | Elementary Grade ... ... ... ... | 1 |
| | | **55** |
| (*c*) | Senior Basic Grade ... ... ... | 4 |
| | Secondary Grade ... ... ... | ... |
| | Junior Basic Grade ... ... ... | 4 |
| | Elementary Grade ... ... ... | 7 |
| | | **15** |

**திரு. பி. முருகையன் :** இந்தப் பயிற்சிப் பள்ளியில் சேர இரண்டு அரிசன மாணவர்கள் விண்ணப்பித்து இருந்தார்கள். அவர்களில் எஸ்.எஸ்.எல்.ஸி. தேறிய மாணவருக்கு ஹையர்

[10th November 1965

கிரேடும், ஃபெயில் ஆன மாணவருக்கு செகண்டரி கிரேடும் கொடுக்கப்பட்டது. அதுபற்றி முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் அனுப்பிய தகவலின் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டது?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

**திருமதி செகதம்பாள் வேலாயுதம் :** தலைவர் அவர்களே, ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்றை உடையார்பாளையம் தாலுக்காவில் ஏற்படுத்த கனம் அமைச்சர் அவர்களுக்கு உத்தேசம் உண்டா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** ஆசிரியர் பயிற்சிப் பள்ளி எந்தெந்த மாவட்டத்திற்கு என்ன என்ன தேவை என்பதைப் பார்த்து அப்போதைக்கப்போது முடிவு செய்யப்படுகிறது.

## திட்டக்குடிக்கு பஸ் மார்க்கம்

*426 கேள்வி.—**திரு. இரா. நாராயணன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில் திருமானூரிலிருந்து அரியலூர் வழியாக ஜெயங்கொண்டம் வரை செல்லும் பஸ் மார்க்கத்தையாவது அல்லது அரியலூரிலிருந்து மாத்தூர் வழியாக கோவில்பாளையம் வரை செல்லும் பஸ் மார்க்கத்தையாவது திட்டக்குடி வரை நீட்டக் கோரி அரசாங்கத்திற்கு விண்ணப்பங்கள் ஏதேனும் வந்தனவா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** (அ) & (இ) மெஸர்ஸ் அரியலூர் பி.ஆர்.எஸ். பஸ் சர்வீஸ் (தனியார்) லிமிடெட் திருமானூர்-ஜெயங்கொண்டம் (வழி அரியலூர்-கோவில்பாளையம்) மார்க்கத்தில் செல்லும் பஸ்களில் ஒரு பஸ் மட்டும் திருமானூர்-திட்டக்குடி வரை (மாவட்ட எல்லை வரை) செல்வதற்கு அனுமதி கேட்டுத் திருச்சிராப்பள்ளி பிராந்தியப் போக்குவரத்து அதிகார சபைக்கு விண்ணப்பித்துக் கொண்டது. பிராந்தியப்போக்குவரத்து அதிகார சபை இந்த மாற்றத்திற்கு அனுமதி வழங்கியது. இப்புதிய மார்க்கத்தில் விரைவிலேயே பஸ் ஓடத் தொடங்கும்.

## *Stopping of Express Buses at Swamimalai*

* 427 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to have a stop or at least a "Request Stop" at Swamimalai, for all State Transport Express Buses plying to and from Thanjavur?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

**திரு. வை. சங்கரன் :** சுவாமிமலையில் தினசரி நூற்றுக்கணக்கான பக்தர்கள் வந்து செல்வதால், அவர்களுடைய நன்மையைக் கருதியாவது, சுவாமிமலையில் எக்ஸ்பிரஸ் பஸ்ஸை நிறுத்த உத்தேசம் உண்டா? பிரயாணிகளே தேவைப்படும்போது கேட்டால், அந்தச் சமயமாவது பஸ்ஸை நிறுத்துவது பற்றி சர்க்கார் பரிசீலனை செய்யுமா?



10th November 1965]

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** கேட்ட இடத்தில் எல்லாம் எக்ஸ்பிரஸ் பஸ்ஸை நிறுத்துவது என்றால், அது ஆர்டினரி பஸ்ஸாகப் போய்விடும்; அது எக்ஸ்பிரஸ் பஸ்ஸாக இருக்காது.

## பீங்கான் தொழிற்சாலை

* 428 கேள்வி.—**எ. கோ. பாலகிருஷ்ணன் :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம், திண்டிவனம் வட்டம், திருவக்கரை கிராமத்தில் ஒரு பீங்கான் தொழிற்சாலை கட்டும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** திண்டிவனம் வட்டத்து திருவக்கரை கிராமத்தில் பீங்கான் தொழிற்சாலை நிறுவும் திட்டம் எதுவும் தற்சமயம் இல்லை.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, 1962-ம் ஆண்டு செப்டம்பர் அல்லது அக்டோபரில் இதே சட்டசபையில் அமைச்சர் அவர்கள் பதிலளிக்கும்போது, திருவக்கரையில் பீங்கான் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்த அபிப்பிராயம் இருப்பதாகத் தெரிவித்தார்கள். ரிகார்டிலும் அது வந்திருக்கிறது. ஆனால், இப்பொழுது 'இல்லை' என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். காரணம் என்ன?

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் :** அவ்வாறு ஒரு யோசனை இருந்தது. யோசனைகளெல்லாவற்றையுமே நிறைவேற்றிவிட முடியாது. அப்பொழுது யோசனை இருந்தது. இப்பொழுது அவசியம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டது. காரணம் என்னவென்றால், அங்கே ஐந்தாறு பீங்கான் தொழிற்சாலைகள் வர ஏற்பாடெல்லாம் ஆகி இருக்கிறது. Nevveli Ceramics and Refractories Limited, E.I.D. Parrys Ltd., Seshasayee Industries, W.S. Insualtors of India Co., ஆகியவை எல்லாம் வந்திருப்பதால் இப்பொழுது திருவக்கரையில் ஒரு பீங்கான் தொழிற்சாலை ஆரம்பிப்பது அவசியம் இல்லை என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மேலே குறிப்பிட்டவற்றைத்தவிர, சர்க்கார் யூனிட் விருத்தாசலத்தில் ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

## *Commercial Taxes Department at Madurai*

* 429 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to construct new building in Madurai City to house all the offices of the Commercial Tax Department at Madurai in the same premises; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes; and

[10th November 1965

(b) The matter is under the consideration of the Government in consultation with the Board of Revenue (Commercial Taxes).

Mr. Speaker, Sir, I wish to add that this may have to be reviewed in the light of the National Emergency.

### மதுவிலக்குக் குற்றங்கள்

*430 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி: கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1964–65-ல் எத்தனை மதுவிலக்குக் குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டன?

(இ) அவைகளில் தண்டனையடைந்த குற்றவாளிகள் எத்தனை பேர்?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) 1.37,714.

(இ) 1,27,166.

### உபகாரச் சம்பளம் வழங்குதல்

*431 கேள்வி.—திரு. எஸ். மணி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் திருச்சி மாவட்டம், மிளகுப்பாறை நலப்பள்ளி விடுதியின் தலைமையாசிரியர் மீது மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் வழங்கிய விஷயமாக புகார் ஏதேனும் அரசாங்கத்திற்கு வந்ததா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். மணி :** தலைவர் அவர்களே, அந்தத் தலைமை ஆசிரியர் மாணவர்களுக்குரிய உதவித் தொகையை ஆள் மாறாட்டம் செய்து வாங்கினதாகக் கூறப்படுகிறது. அப்படியானால், அவர் பேரில் என்ன நடவடிக்கை அரசாங்கம் எடுத்திருக்கிறது?

**கனம் சபாநாயகர் :** "கூறப்படுகிறது" என்றால், அதை வைத்துக் கேள்வியாகக் கேட்க முடியாது. குறிப்பாக ஏதாவது 'கம்ப்ளெயின்ட்' இருந்தால், கனம் அங்கத்தினர் கேள்வி கேட்கலாம். எங்கோ கேள்விப்பட்ட வதந்தியை வைத்துக் கொண்டு இங்கே கேள்வி கேட்பது கூடாது.

**திரு. எஸ். மணி :** கம்ப்ளெயின்டின் நகல் அமைச்சரவைக்கு அனுப்பப்பட்டது. அம்மாதிரி கம்ப்ளெயின்ட் வந்ததா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன் :** அந்தத் தகவல் என்னிடம் இல்லை.



10th November 1965]

### போலீசார்களுக்குக் குடியிருப்பு

*432 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பேரளத்தில் மத்திய சர்க்காருக்குச் சொந்தமான கட்டடத்தைப் போலீசாரின் குடியிருப்புக்காக வாங்க நமது மாநில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது?

**கனம் திரு. பூ. கக்கன் :** (அ) ஆம்.

(இ) ரூ. 7,757.

### கள்ளக்குரிச்சியில் தீயணைக்கும் படை நிலையம்

*433 கேள்வி.—திரு. தா. சின்னசாமி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குரிச்சியில் ஒரு தீயணைக்கும் படையை ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கின்றதா?

**கனம் திரு. பூ. கக்கன் :** ஆனால் தற்போது பிரையாரிட்டி லிஸ்டின்படி வேறு சில இடங்களில் தியணைக்கும் நிலையங்கள் ஏற்படுத்திய பிறகுதான் கள்ளக்குரிச்சியில் ஒரு நிலையத்தை ஏற்படுத்த வேண்டும். இதனால் இதை ஏற்படுத்த இன்னும் கொஞ்ச காலம் செல்லும்.

**திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் :** தென்னாற்காடு மாவட்டத்தில் கள்ளக்குரிச்சியிலும், திண்டிவனத்திலும் அடிக்கடி தீ விபத்துக்கள் ஏற்படுகின்றன. அந்தக் காரணத்தினால் கனம் அங்கத்தினர்கள் பலர், "திண்டிவனத்தில் எப்பொழுது தீ அணைக்கும் படை ஏற்படுத்தப்படும்? கள்ளக்குரிச்சியில் எப்பொழுது தீ அணைக்கும் படை ஏற்படுத்தப்படும்?" என்று கேள்விகள் கேட்ட வண்ணமாக இருக்கிறார்கள். இந்த இரண்டு இடத்தைப் பொறுத்தும், எப்போதுமே சரியான பதில் வருவது இல்லையே, அதற்கு என்ன காரணம்?

**கனம் திரு. பூ. கக்கன் :** அடுத்து வரும் லிஸ்டில் திண்டிவனம் இடம் பெறுகிறது. கள்ளக்குரிச்சி பத்தாவது எண்ணிக்கையில் இருக்கிறது. இப்பொழுது அங்கே தீ அணைக்கும் படை வருவதற்கில்லை.

### *New Railway Line*

*434 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) whether any recommendations have been made to the Central Government for providing a new railway line between Salem and Madurai (via) Karur and Dindigul; and

[10th November 1965

(b) if so, the reply received therefor?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The laying of a new broad guage line from Salem to Dindigul (via) Karur and conversion of Dindigul-Tuticorin (via) Madurai line into broad guage including the short link from Maniyachi to Tirunelveli have been recently recommended to the Government of India for implementation during the Fourth Plan period. Their decision is awaited.

**திரு. சா. கணேசன் :** அப்படியானல் திண்டுக்கல்லிலிருந்து கோவை போகிற லைனையும்—இதோடு இணைந்ததாக இருப்பதால்—பிராட் கேஜ்ஜாக மாற்றுவதற்கான ஏற்பாடு ஏதாவது இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** அது இப்பொழுது இல்லை.

**திரு. ர. ஜீவரத்னம் :** வேலூரிலிருந்து ஆற்காடு, கலவை, செய்யாறு வழியாகக் காஞ்சீபுரத்திற்கு ஒரு ரயில் பாதை போட சர்வே செய்யப்பட்டு, பின்னல் அது நிறுத்தப்பட்டது. நெருக்கடியை முன்னிட்டாவது அதை அவசரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் சிபாரிசு செய்ய முன்வருமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** தனியாகக் கேள்வி போட்டால், கவனித்துப் பதில் சொல்லலாம்.

*** 435 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

9-30 a.m. (அ) திண்டிவனம் ரயில்வே நிலையத்தை விரிவுபடுத்த வேண்டுமென்று கோரி இம்மாநில அரசு மத்திய அரசுக்கு விண்ணப்பம் ஏதேனும் செய்ததா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. ஆ. தங்கவேலு :** திண்டிவனம் பெரிய முனிசிபல் நகரம். கிழக்கிந்தியக் கம்பெனி காலத்தில் கட்டப்பட்ட திண்டிவனம் ரயில்வே நிலையம் இதுவரை எந்த வித வசதியும் செய்யப்படாமல் இருக்கிறது. ஆகவே, அதை உடனடியாக விரிவு படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமைய்யா :** ரயில்வே நிர்வாகம் தங்களிடம் உள்ள நிதி நிலைமைக்கேற்ப எந்த எந்த ரயில்வே நிலையங்களை விரிவுபடுத்த வேண்டுமோ அவற்றை விரிவுபடுத்தி வருகிறார்கள். நாமும் இன்ஃபார்மலாக இந்த இடங்களுக்குச் சில வசதிகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம்.



10th November 1965]

**புலவர் கா. கோவிந்தன் :** செய்யாறு, வந்தவாசி ஆகிய தாலுக்காக்களில் இருக்கிற மக்கள் திண்டிவனம் வந்துதான் ரயில் ஏற வேண்டிய நிலை இருக்கின்றன. இங்கே போட்மெயில், தூத்துக்குடி ரயில்கள் தான் நிற்கின்றன. திருநெல்வேலி, திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ்கள் நிற்பதில்லை. அவற்றையும் நிறுத்த வேண்டும் என்பதாக மத்திய அரசுக்குச் சிபார்சு செய்யப்படுமா ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** எல்லா ஸ்டேஷன்களிலும், எல்லா ரயில்களும் நிற்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. சில வண்டிகள் வேகமாகச் செல்லவேண்டியிருப்பதால் அடிக்கடி பல ஸ்டேஷன்களில் நிற்க முடியாது.

*** 436 கேள்வி.—திரு. ஆ. தங்கவேலு :** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து விழுப்புரம், திருச்சிராப்பள்ளி வழியாக திருநெல்வேலி செல்லும் ரெயில் பாதையை அகலப்பாதையாக (Broad gauge) மாற்ற வேண்டுமென்று கோரி மத்திய அரசுக்கு மாநில அரசு ஏதேனும் விண்ணப்பம் செய்ததா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. வெ. ராமைய்யா :** (அ) & (இ) மதுரை வழியாகத் திருச்சியிலிருந்து தூத்துக்குடிக்கும், திருநெல்வேலிக்கும் பிராட் கேஜ் ரயில்பாதை அமைக்கும் வேலையை உடனடியாக எடுத்துக் கொள்ளும்படியும், சென்னையிலிருந்து திருச்சிக்குச் செல்லும் மீட்டர் கேஜ் பாதையை ப்ராட் கேஜ் பாதையாக மாற்றி அமைக்கும் வேலைக்கு அதற்கடுத்தாற்போல் முக்கியத்துவம் அளிக்கும்படியும் இந்திய அரசாங்கத்திற்கு எழுதப்பட்டது. தற்போதுள்ள மீட்டர் கேஜ் பாதையை பிராட் கேஜ் பாதையாக மாற்றுவது பற்றி, வண்டிப் போக்குவரத்துத் திறனுக்கேற்ப அவ்வப்போது ஆலோசிக்கப்படும் என்று இந்திய அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி-தூத்துக்குடி மார்க்கம் சம்பந்தமாக இந்திய அரசாங்கம் முன்னோடித் திட்ட ஆய்வை மேற்கொண்டுள்ளது.

### *Irrigation Projects*

* 437 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(a) the details of Irrigation Projects that are under negotiations with the neighbouring State Governments; and

(b) the present stage of the negotiations?

THE HON. SRI V. RAMAIAH : (a) & (b) The question of utilisation of the West flowing rivers in Madras State was discussed between the Ministers of the Madras and Kerala States in July 1963, when it was agreed that the Engineers of the two States should examine the availability of supplies. The Chief Engineer (Irrigation) carried out his preliminary investigation and submitted his proposals. Copies of this report have been sent to the Government of Kerala.

The reply of the Government of Kerala in the matter is awaited

[10th November 1965

**திரு. வை. சங்கரன் :** மேற்கே ஓடும் நதிகளின் தண்ணீரைப் பாசனத்திற்குப் பயன்படுத்திக்கொள்வது சம்பந்தமாக நமது அரசாங்கத்திற்கும், மத்திய அரசாங்கத்திற்கும் சமீபத்தில் ஒரு உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அது உண்மையா ? அப்படியானால் அதன் விவரம் என்ன ?

**கனம் திரு. வெ. ராமையா :** நீர்ப்பாசனம் சம்பந்தமாக இல்லை. மின்சாரத் திட்டம் சம்பந்தமாகத்தான் நமது தொழில் அமைச்சர் அவர்களுக்கும், கேரள அரசாங்க அதிகாரிகளுக்கு மிடையே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

### மேம்பாலங்கள்

** 438 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :* கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டத்தில், முசிரிக்கும் குளித்தலைக்கும் இடையே ஓடும் காவிரியாற்றின் மீது பாலம் கட்ட வேண்டுமென்று திருச்சி மாவட்டக் கலெக்டரிடமிருந்து சர்க்காருக்கு அண்மையில் சிபாரிசு ஏதேனும் வந்ததா ?

(இ) ஆம், எனில் அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) No such recommendation appears to have been received from the Collector of Tiruchirappalli. However, there is a proposal for construction of a bridge across the Cauvery between Musiri and Kuzlithalai at a cost of Rs. 55 lakhs. The work is proposed for being taken up during the Fourth Plan period, if the Government of India approve the proposal and give grants-in-aid for it under the Scheme for Development of State roads of Economic or Inter-State Importance.

** 439 கேள்வி.—திரு. இரா. நாராயணன் :* கனம் உணவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம், மாத்தூர்-திட்டக்குடி சாலைக்கும், தென்னாற்காடு மாவட்டம், திட்டக்குடி சாலைக்கும் இடையே செல்லும் வெள்ளாற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் வேலையை நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

(இ) ஆம் எனில், அவ்வேலை எப்போது துவங்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The work of constructing a bridge across Vellar on Mathur-Thittagudi road has been proposed in the draft Fourth Five-Year Road Plan. The actual execution of the work in the Fourth Plan period will depend upon availability of funds.



10th November 1965]

**** 440 கேள்வி.—திரு. மு. செல்லையா :*** கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தாலுகா வத்திராயிருப்பிலிருந்து மதுரை போகும் போக்குவரத்து ரோட்டில் கல்லணை ஆற்றில் மேம்பாலம் கட்டும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதற்கான எஸ்டிமேட் தொகை எவ்வளவு, அவ்வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) A bridge at mile ½ of Watrap-Maharajapuram Alagapuri road at a cost of Rs. 3 lakhs has been proposed in the draft Fourth Five-Year Road Plan. The work will be taken up for execution during the Fourth Plan period, subject to the availability of funds.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

## II.—CALLING ATTENTION TO SHORTAGE IN SUPPLY OF NYLON YARN TO FISHERMEN

SRI M. S. SELVARAJAN : Sir, I wish to call the attention of the Hon. Minister for Information and Publicity to a matter of urgent public importance, namely, distress of the fishermen in the State at large, especially in Tirunelveli district, due to shortage in supply of nylon yarn.

THE HON. SRI G. BHUVARAHAN : Mr. Speaker, Sir, I wish to make the following statement :—

Nylon twine is now manufactured in India by Messrs. Garware Nylons, Bombay, since about 5 years and their " Garnyl " nylon twine is available in the open market. Their agent in Madras City is Messrs. Beardsell and Company (Private) Limited, Second Line Beach, Madras. There is therefore no dearth of nylon twine in the State.

The Fisheries Department is supplying nylon twine at 25 per cent subsidised cost to groups of fishermen to whom mechanised boats are allotted at the rate of 200 lb. per 30 feet boat and 300 lb. per 32 feet boat. So far, 332 numbers of mechanised boats together with the required quantity of nylon have been supplied to the fishermen in the State. Of these boats, 31 numbers have been allotted to the fishermen of the Tirunelveli district.

In genuine cases of loss, these groups of fishermen are supplied with a second lot of 100 lb. of nylon twine at full cost.

Under the Crash Programme, nylon twine is being given to fishermen owning indigenous crafts such as catamaran and Vallam, at the rate of 50 lb. per fisherman on 75 per cent loan and 25 per cent subsidy on cost of nylon. A total quantity of

[Sri G. Bhuvarahan] [10th November 1965

60,000 lb. of nylon is thus being distributed under this scheme. Of these, 11,620 lb. of nylon are being distributed to fishermen of Tirunelveli district.

The Federation of Fishermen Co-operatives and some dried fish merchants at Tuticorin are importing foreign made nylon under the Export Incentive Scheme and this nylon is made available by them to the local fishermen.

I am to point out in this connection that in certain centres centres like Karikattukuppam, Covelong, Sathankuppam and Sadras in Chingleput district, the fishermen are against the use of nylon in spite of efforts of the Fisheries Department to introduce the nylon nets in their areas.

Thus, there is no distress among the fishermen in the State in general and in Tirunelveli district in particular due to shortage in supply of nylon yarn.

## III—ANNOUNCEMENTS.

### (1) ELECTION TO THE BOARD OF INDUSTRIES.

MR. SPEAKER: I have to announce to the House that I have received two nominations for election to the Board of Industries. As the number of candidates duly nominated is equal to the number of vacancies to be filled, viz., two, I declare the following two candidates to have been duly elected to the Board of Industries—

1. Sri R. Jeevarathnam.
2. Sri V. R. Nedunchezhiyan.

### (2) ELECTION TO THE SENATE OF THE ANNAMALAI UNIVERSITY

MR. SPEAKER: I have to announce that the following candidates were validly nominated for the election of three members to the Senate of the Annamalai University—

1. Sri K. Parthasarathy.
2. Sri G. Rajaram.
3. Sri K. A. Mathialagan.

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., three, I hereby declare them to have been duly elected to the Senate of the Annamalai University.

## IV.—GOVERNMENT BILLS

### (1) THE MADRAS UNIVERSITY (AMENDMENT) BILL, 1965.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Mr. Speaker, Sir, I move for leave to introduce the Madras University (Amendment) Bill, 1965.



10th November 1965]

MR. SPEAKER: The question is—

"That leave be granted for the introduction of the Madras University (Amendment) Bill, 1965".

The motion was put and carried, and leave was granted.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, I introduce the Bill.

MR. SPEAKER: The Bill is introduced.

### (2) THE MADRAS LAND REVENUE AND WATER-CESS (SURCHARGE) BILL, 1965 (L.A. BILL NO. 30 OF 1965)—*cont.*

* **திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத்தலைவர் அவர்களே, நிலவரி நீர்வரி கூடுதல் பற்றிய வரி மசோதா கனம் அமைச்சர் அவர்களால் இந்த மன்றத்தின் ஆய்வுக்கு விடப்பட்டு இருக்கிறது. இந்த மசோதாவை பொது மக்களுடைய கருத்துரைக்குவிட வேண்டுமென்ற ஒரு திருத்தத்தையும், பொறுக்குக் குழுவின் பரிசீலனைக்கு விடவேண்டுமென்ற மற்றொரு திருத்தத்தையும் எதிர்க்கட்சியின் சார்பில் கொண்டு வந்துள்ளார்கள். நாட்டின் நெருக்கடி நிலைமையை ஒட்டி வரி விதிக்க வேண்டியது இன்றியமையாதது என்றாலும் உழவர் பெருங்குடி மக்கள் மீது வரி விதிப்பது, எல்லோரிடத்திலும் இருக்கிறது என்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்கும், திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் கூடுதலான நிதி தேவைப்படுகிறது என்ற முறையில் வரிப் பிரேரணைகள் நான்கு வகைகளில் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றன. மின்சாரக் கட்டணங்களின் உயர்வு மூலமாகவும், டீசல் ஆயில் எண்ணெய்களின் மீது வரி போடுவதன் மூலமாகவும் நிதி திரட்டும் முயற்சிக்கு பொதுவாக சிலபல திருத்தங்கள் செய்து ஏற்றுக்கொள்ள சம்மதித்தோம்; அவற்றை அடியோடு மறுக்கவில்லை. அவைகள் எல்லாம் பொதுமக்களுடைய நிலைகளைப் பாதிக்கும் என்றாலும்கூட, நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பதற்காக அவை எல்லாம் இருந்துதீர வேண்டியவைகளாக அமைந்திருக்கின்றன, என்ற அளவுக்குத்தான் அவைகள் வரவேற்கப்பட்டன. ஆனால், இந்த நிலவரி, நீர்வரி இவைகளைப் பொறுத்த வரையில், இது தாங்கமுடியாத நிலையில் இருக்கின்ற ஒன்று; தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று. ஆகவே, அரசினர் இதன்மூலம் எதிர்பார்க்கின்ற நிதியை உழவர் பெருங்குடி மக்கள், கிராமத்திலே இருக்கின்ற பொது மக்கள் இவர்கள் மூலம் பெறுகின்ற நிலையைத் தவிர்த்து, வேறு பல வகைகளிலே திரட்டுவதற்கான முயற்சிகளிலே ஈடுபட வேண்டுமென்பதை நான் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதா அடியோடு கைவிடப்படவேண்டும். இங்கே பலரும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த அத்தனைபேர்களும் ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலரும் எடுத்துத் தெரிவித்த கருத்தை அறிந்தால், இந்த மசோதாவை அடியோடு கைவிடவேண்டுமென்ற

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th November, 1965

கருத்தைத்தான் அரசு கொள்ள முடியும். ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள், இந்த மசோதாவைக் கைவிட வேண்டுமென்று சொல்லவில்லையென்றாலும், இந்த மசோதாவின் அடிப்படையான நோக்கம் உழவர் பெருங்குடி மக்களை, கிராம மக்களைப் பாதிக்கக் கூடியதாக இருக்கின்றது என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். நிலவரியும் நீர்வரியும் 1963-ஆம் ஆண்டிலே ஓரளவு உயர்த்தப் பெற்றது. உயர்த்தப்படவேண்டுமென்ற கருத்து அப்பொழுது தெரிவிக்கப்பட்டபொழுது, அதை பொறுக்குக் குழுவுக்கு விட வேண்டுமென்ற கருத்தும் தெரிவிக்கப்பட்டு. அதன் பிறகு அது பொறுக்குக் குழுவுக்குவிடப்பட்டு, பொறுக்குக் குழு தெரிவித்த யோசனையின் பேரில்தான் அப்பொழுது அந்த மசோதா வந்தது. இருபது ஆண்டுகளுக்குப் பிறகு முதன்முறையாக 1963-ஆம் ஆண்டிலே அந்த மசோதா வந்தபோதிலும்கூட இந்த மன்றத்திலே உள்ள பலரும் அப்பொழுது அதை எதிர்த்திருக்கிறார்கள். அப்பொழுதே அந்த மசோதா தவிர்க்கப்படவேண்டுமென்ற வகையிலே அதை எதிர்த்திருக்கிறார்களென்றால், 1963-ஆம் ஆண்டைவிட 1965-ஆம் ஆண்டு உழவர் பெருங்குடி மக்கள், கிராம மக்கள், இவர்களுடைய நிலைமை மிகவும் மோசமாகி இருக்கிறது, என்பதை நாம் உணரவேண்டும்.

பாதுகாப்பு முயற்சிக்கும், திட்ட வளர்ச்சிக்கும் நிதி தேவைப் படுகிறது என்பதை நாம் உணர்கிறோம். இந்த மன்றத்திலே குறிப்பிடப்பட்ட மற்றைய வரிகளைப் பொறுத்தவரையில் நாங்கள் சிலபல திருத்தங்களை எடுத்துச் சொன்னோம். இந்த வரியைப் பொறுத்தவரையில், இது பெருமளவுக்கு பாதிக்கக்கூடிய நிலையில் அமைந்திருக்கிறது என்ற கருத்தைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம். 1962-ம் ஆண்டுக்கு முன்னால், நிலவரி, நீர்வரி இவைகள் எல்லாம் கூடுதலாக்கப்படுவதற்கு முன்பு, தஞ்சை மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், எக்கர் ஒன்றுக்குச் சராசரி 20 ரூபாய் வரி செலுத்தி வந்தார்கள், பிறகு 1963-ம் ஆண்டிலே கூடுதலாக வரி விதித்ததற்குப் பிறகு அவர்கள் ஏக்கர் ஒன்றுக்கு 29 ரூபாய் என்ற அளவில் வரி செலுத்தவேண்டிய நிலையிலே இருந்துகொண்டிருக்கிறார்கள். அதற்குப் பிறகு இப்பொழுது அரசினர் கொண்டுவந்திருக்கின்ற இந்த மசோதாவைப் பார்க்கிறபொழுது, அவர்கள் இன்னும் 25 சத விகிதம் கூடுதலாக வரி செலுத்த வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். அதாவது 34 ரூபாய் வரி செலுத்தக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். 1963-ம் ஆண்டிலே 20 ரூபாய் வரி செலுத்திக் கொண்டிருந்தவர்கள் 1963-ம் ஆண்டிற்குப் பிறகு 29 ரூபாய் வரி செலுத்தக்கூடிய நிலைக்கு உள்ளாகி, இப்பொழுது—இந்த மசோதாவை ஏற்றுக்கொண்டால்—34 ரூபாய் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே, மொத்தமாகப் பார்த்தால் ஏக்கர் ஒன்றுக்கு 14 ரூபாய் அதிகமாகக் கொடுக்கவேண்டிய நிலையிலே அவர்கள் இருக்கிறார்கள்.

1963-ம் ஆண்டிலே இந்த மசோதா கொண்டுவரப்பட்டபொழுது, இது உழவர்பெருங்குடி மக்கள், கிராம மக்கள் ஆகியோரைப் பாதிக்கக்கூடியது என்ற கருத்து அப்பொழுதே தெரிவிக்கப்பட்



10th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

டிருக்கிறது. அதைவிட இப்பொழுது இருக்கின்ற நிலை இன்னும் மோசமாக இருக்கிறது. அதற்குப் பிறகு விலைவாசிகள் அதிகமாகி இருக்கின்றன. உழவர் பெருங்குடி மக்களைப் பொறுத்த வரையிலும், அவர்களுடைய வரவினங்களை எடுத்துக் கொண்டால், அவைகள் செலவினங்களின் விகிதாசார அளவில் வளர்ந்ததாகவும் தெரியவில்லை.

அது மாத்திரமல்ல, பருவநிலையும் மோசமாக இருந்துகொண்டிருக்கின்றது. பருவ மழை பெய்யாத காரணத்தால், நீர்த்தேக்கங்களிலே நீர் இல்லை. நீர்ப்பாசனம் குறைந்துவிட்டது. விளைவு என்ன ஆகுமோ என்ற அச்சத்திலே, உழவர் பெருங் குடி மக்கள் கிராம மக்கள், எல்லோரும் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்த ஆண்டு அவர்களுடைய வருமானம் போதுமான அளவுக்கு அமைய முடியாது என்ற அச்சம் இருக்கிறது. இந்த நிலையில் காலமும் கெடுதலாக அமைந்திருக்கிறது. செலவினங்களும் அதிகமாக ஏறிக்கொண்டே போகின்றன. செலவினங்கள் இப்போதைவிட அதிகமாக இல்லாத நிலையிலேயே இதுபோன்ற மசோதா எதிர்க்கப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் இப்பொழுது 25 சத விகிதம் அளவுக்கு நிலவரி, நீர்வரி இவைகளை ஏற்றுவது என்றால், இன்னும் அதிகமான அளவில் உழவர் பெருங்குடி மக்கள் பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே, இந்த வரி தவிர்க்கப்படவேண்டும் என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே, இதைப்பற்றித் தெளிவாக ஆராயும்பொருட்டு, இதைப் பொது மக்களுடைய பரிசீலனைக்கோ அல்லது பொறுக்குக் குழுவுக்கோ விட்டு அவர்கள் இதிலுள்ள சாதக பாதகங்களையெல்லாம் ஆராய்ந்து முடிவு செய்வதற்கான வழிவகைகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை விவசாயிகள் கூறுவதைப்போல், 1963 ஆம் ஆண்டிலே ஏக்கர் ஒன்றுக்கு 18 கலம் விளைகிறது என்றால், 180 ரூபாய்க்கு விற்கப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது சர்க்கார் எந்த விலைக்கு விற்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறதோ அந்த விலையின் அடிப்படையில் பார்த்தால், ரூபாய் 220 க்குத்தான் விற்கப்படுகிறது. ஆகவே, வருமானம் அதிகமாகியிருக்கிறது என்ற கருத்தின் அடிப்படையில் அவர்களுக்குக் கூடுதலாக வரி விதிக்கலாம் என்ற நோக்கத்தையுடையதாக இது அமைந்து இருக்கிறது. வரி 14 சத விகிதம் ஏற்றப்படுகிறது என்றால், வருமானம் 10 சத விகிதம் அல்லது 11 சத விகிதம் என்ற அளவுக்குத்தான் ஏறியிருக்கிறது. எனவே, செலவினத்தின் விகிதாசாரத்தைக் காட்டிலும்; வரவினத்தின் விகிதாசார அளவு குறைவாக இருக்கிறது.

இது மட்டுமல்லாமல், வாழ்க்கைச் செலவினங்களும் அதிகமாகியிருக்கின்ற தன்மையில் உழவர் பெருங்குடி மக்களும், கிராமத்திலே வாழ்க்கை நடத்துகின்ற மக்களும் நிச்சயமாகப் பாதிக்கப்படுவார்கள். 1963-ஆம் ஆண்டைவிட, 1965-ஆம் ஆண்டில் வேறு பல செலவினங்களும் அதிகமாக உயர்ந்திருக்கின்றன. உழவரின்

வருமானமும் அதற்கு விரிவடையும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை. அவர்களுடைய வருமானம் எல்லாம் குறிப்பிட்ட அளவிலேதான் இருக்கும். அத்துடன், எதிர்பாராத நிலையில், பருவ நிலையும் நெருக்கடியாகி இருக்கிறது. எனவே அரசு இந்த வரியின் மூலம் திரட்ட எண்ணுகின்ற நிதியை, வேறு வழிகளிலே திரட்டுவதற்கான வழிவகைகளைக் காணவேண்டுமென்பதையும். இந்த வரியைத் தவிர்க்கவேண்டுமென்பதையும் மீண்டும் மீண்டும் வற்புறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

1959-60 ஆம் ஆண்டிலே நம்முடைய மாநிலத்தினுடைய நிலைமைகளைப்பற்றியும், உழவர் பெருங்குடி மக்களுடைய நிலைமைகளைப்பற்றியும் ஆராய்ந்து பார்த்து தொழில் நுட்பப் பொருளாதாரக் குழு அறிக்கை சமர்ப்பித்திருக்கிறது. அந்தக் குழுவினுடைய தலைவர் திரு. பி. எஸ். லோகநாதன் அவர்கள் அரசுக்குச் சமர்ப்பித்திருக்கின்ற அறிக்கையில், இதைப் பற்றித் தெளிவுபட எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். 1962-ஆம் ஆண்டு நிலைமை மிக மோசமாக இருந்தது, குறைந்த வருமானம் பெறக்கூடிய நிலையில் தான் உழவர் பெருங்குடி மக்களும், கிராமத்து மக்களும் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களைப் பாதிக்கக்கூடிய வரிகளைப் போடக் கூடாது, அப்படியே போட்டாலும் கூடியவரை வரியைத் தாங்கக் கூடிய சக்தியுள்ளவர்களுக்கும், அதிகமான நிலம் வைத்திருக்கின்றவர்களுக்கும் தான் போடவேண்டும், ஐந்து ஏக்கர் நிலத்திற்கு உட்பட்ட நிலம் வைத்திருப்பவர்கள்மீது வரி போடக் கூடாது என்று தெளிவாக எடுத்துத் தெரிவித்து இருக்கிறார்கள். அவருடைய அறிக்கையின்படி பார்த்தால், 1960-ம் ஆண்டு நிலைமை மோசமாக இருந்திருக்கிறது. ஆகவே, அந்த ஆண்டை விட இப்பொழுது 1965-ஆம் ஆண்டில் இன்னும் நிலைமை மோசமாகியிருக்கிறது என்பதை நாம் அறிகிறோம். வரியின் மூலம் நிதி திரட்ட வேண்டுமென்று எண்ணுகின்ற போதெல்லாம் கிராம மக்கள், உழவர் பெருங்குடி மக்கள் இவர்களிடம் நிலவரி, நீர்வரி இவைகளின்மூலம் நிதி திரட்டலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் அரசு பணியாற்றுகிறது என்றும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.

In many ways, the central problem of state finances is to tap the rural sector, on which Union taxation is found to impinge but lightly. However, it must be remembered that the ability of this sector to contribute additional revenue at the existing low level of incomes is limited and that any increase in its contribution can be expected only out of the additional income that is expected to be generated from the development of agriculture. Any tax measure adopted in the future should allow for a rise in the overall level of consumption in the sector.

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும் அவர்களுடைய வாழ்க்கை வருமானத்தைப் பெருக்கிவிட்டு, அவர்கள் வரிபோட்டால் தாங்கக் கூடிய நிலையில் இருக்கிறார்கள் என்ற நிலை வந்தபிறகு, [illegible]த்தின் வளர்ச்சியின் மூலம் அவர்களுடைய வருமானம்





பெருகியிருக்கிறது, அவர்கள் வரி கொடுக்க முடியும் என்ற நிலை ஏற்பட்டதற்குப் பிறகு, வரி போடலாமே தவிர, இப்பொழுது குறைந்த அளவு வருமானம்தான் அவர்களுக்குக் கிடைப்பதால் வரி போடக் கூடாது என்ற கருத்தைச சொல்லியிருக்கிறார்கள்.

" A considerable proportion of rural consumption is outside the pale of the cash economy and such consumption is beyond the reach of the sales-tax. Therefore, it is necessary to retain and improve the system of land revenue, though this source of revenue is often attacked as an unjust and rigid form of taxation."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதைத் தவிர எதிர் காலத்திலே இந்தத் தரப்பினர் மீது வரி போடுவது என்றாலும்கூட அவர்களுடைய வருமானம் போதுமான அளவுக்கு உயர்ந்திருக்கிறதா என்பதையும் பார்க்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியே அரி போடுவதாக இருந்தாலும், ஐந்து ஏக்கர்களுக்கு மேல் நிலம் உடையவர்களுக்குப் படிப்படியாக உயர்ந்து செல்லும் முறையில் வரி விதிக்க வேண்டுமே அல்லாமல், எல்லோருக்கும் ஒரு விதமான வரி விதிப்பு முறையை மேற்கொள்ளக்கூடாது என்ற கருத்துரையையும் வழங்கியுள்ளார்.

" An alternative that avoids some of the drawbaks of wholesale resettlement consists in the levy of a progressive surcharge on land revenue in respect of larger holdings, say, holdings above five acres."

என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அடிக்கடி இந்தத் துறையில் இருக்கிறவர்களுக்கு வரியைச் சுமத்துவதன் மூலம் அவர்கள் தாக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. அவர்களுடைய கையிலே பொருளாதார வசதி இருந்து வரி செலுத்தக் கூடிய நிலைமை மிக மிகக் குறைவாக இருக்கிறது. இவர்கள்மீது வரி போடுவதில் மிக மிகக் கவனம் செலுத்த வேண்டுமென்பதை டாக்டர் பி. எஸ். லோகநாதன் அவர்கள் 1960-ம் ஆண்டிலேயே சொல்லியிருக்கிறார்கள். 1960-ம் ஆண்டிலேயே உழவர் பெருங்குடி மக்கள் வரியைச் செலுத்த முடியாதவர்களாக இருந்திருக்கிறார்கள் என்றால், 1965-ம் ஆண்டிலே பல்வேறு நெருக்கடி நிலைமையில், நாட்டு நெருக்கடியின் காரணமாகப் பல்வேறு சூழ் நிலைகளைத் தாங்க வேண்டியவர்களாக இருக்கிற உழவர் பெருங்குடி மக்களால் எவ்வாறு புதிய புதிய வரிகளைக் கட்ட முடியும் என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

நிலத்தின் விலை உயர்ந்திருக்கிற காரணத்தால் அவர்கள் வரி செலுத்துகிற வாய்ப்பைப் பெற முடியும் என்ற ஒரு காரணத்தைக் கூறுகிறார்கள். நிலத்தின் விலை உயருகிறது என்றால் நிலத்தை விற்று, விற்று வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் நிலைமை இந்தத் துறையிலே இல்லை. ஒரு காரை ஆறாயிரத்திற்கு வாங்கி எட்டாயிரத்திற்கு விற்கிறார்கள்; பத்தாயிரத்திற்கு வாங்கி பன்னிரண்டாயிரத்திற்கு விற்கிறார்கள். பதினாறாயிரத்திற்கு வாங்கி இருபத்திமூன்றாயிரத்திற்கு விற்கிறார்கள். அப்படி லாபம் சம்பாதிக்கிற ஒன்றாக நிலத்தைப் பொறுத்து இல்லை. விவசாயிகள் நிலத்தை

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th November 1965

அடிக்கடி விற்கவும் வாங்கவும் முன் வர மாட்டார்கள். அவர்கள் தான், தன்னுடைய பரம்பரை அனுபவிக்க வேண்டுமென்ற முறையில் நிலத்தை உழுது உணவு உற்பத்தி செய்கிறார்கள். ஆகவே, நிலத்தின் விலை உயருகிற காரணமாக அவர்களுடைய பொருளாதாரம் ஏறிவிட்டது என்று கூற முடியாது. கடன் வாங்குவதற்கு வேண்டுமென்றால், நிலத்தை ஒத்தி வைத்து, அடகு வைத்துக் கடன் வாங்க வேண்டுமென்றால், இந்த நிலத்தில் விலை உயர்வு சாதகமாக இருக்கலாம். விவசாயிகளுக்கு நிலவரி போட்டே தீர வேண்டுமென்றால் அதற்கும் திரு. பி. எஸ். லோகநாதன் அவர்கள் யோசனை சொல்லியிருக்கிறார்கள்.

"There is no justification in terms of equity or of revenue for revising the tax payable by the very small holders. On the other hand, very large holdings will be abolished by land reforms that are expected to be implemented soon. Thus we are left with the group of landholders, whose holdings range between, say, 5 and 30 (or 40) acres. It is recommended that a surcharge on land revenue should be introduced, which would be payable by this group of landholders and would be progressive in relation to the size of the holdings."

அப்படியே நிலவரி போட வேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டாலும்கூட, ஐந்து ஏக்கருக்கு மேற்பட்டவர்களுக்கு, விகிதாசார அடிப்படையில் அதிகமான நிலம் வைத்திருப்பவர்களுக்கு வரி போட வேண்டுமென்று சொல்லுகிறார். குறைவாக நிலம் வைத்திருக்கக் கூடியவர்களைப் பாதிக்கக் கூடிய அளவுக்கு நில வரியைப் போடக்கூடாது என்று சொல்லுகிறார்.

"There is no justification in terms of equity or of revenue for revising the tax payable by the very small holders."

ஆகவே, குறைந்த நிலம் வைத்திருப்பவர்களுக்கு, குறைந்த வருமானம் உள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு நிலவரி, தண்ணீர்த் தீர்வை அவர்களைப் பாதிக்கக்கூடிய அளவுக்கு போடுவதைத் தவிர்க்கவேண்டும். இதைப் பரிசீலனை செய்யும் அளவிலாவது பொதுமக்கள் கருத்தை அறிந்தோ அல்லது பொறுக்குக் குழுவுக்கு அனுப்பிப் பரிசீலனை செய்தோ முடிவு எடுக்கவேண்டும். 1962-ம் ஆண்டிலே இது போன்ற வரி விதிப்பு மசோதாவைப் பொறுக்குக் குழுவுக்கு அனுப்பிப் பரிசீலனை செய்ததன் காரணமாக, அரசாங்கம் நிர்ணயித்த வரியின் விகிதாசாரத்தைக் குறைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இதைப் பொறுக்குக் குழுவுக்கு இப்போது அனுப்பினால் அப்படிப்பட்ட ஒரு வாய்ப்புக்கூட ஏற்படலாம். இப்போது நிலைமை சரியாக இல்லை என்று விற்பனை வரி மசோதாவை ஏகோபித்த எண்ணத்துடன் வாபஸ் பெற்றோம். இந்த வரியிலிருந்து எதிர்பார்க்கக்கூடிய 1½ கோடி ரூபாயை வேறு பல வழிகளில் பெற முடியும். நில வரித் துறையிலே வரி போட்டு அதன் மூலம் அதிகமாக வசூலிக்க வாய்ப்பு இல்லாத நிலையிலே வேறு எந்தெந்த வகையில் வரி போடலாம் என்று தொழில் நுட்ப பொருளாதாரக் கழகத்தின் ஆய்விலே தெரிவித்திருக்கிறார்கள். 'புதிய புதிய தொழில்களை நடத்துவதன்



10th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

மூலம் பொருளாதாரத்தைப் பெருக்க வாய்ப்பு இருக்கிறதா என்றால் இல்லை. பஸ்களை மேலும் தேசிய மயமாக்குவதன் மூலம் ஓரளவு வருமானத்தைப் பெருக்க முயற்சி செய்யலாம். வேறு பல வாகன வசதிகள் ஆகியவற்றுக்குப் போடுகிற வரியை ஏற்றுவதன் மூலம் வருமானத்தைப் பெருக்க வசதி செய்யலாம். பெரிய பெரிய ரெஸ்டாரெண்டுகள், லாட்ஜிங் வைத்திருக்கிறவர்கள், ஹோட்டல் நடத்துகிறவர்கள் ஆகியோருக்கு வரி போடுவதன் மூலம் வருமானத்தைப் பெருக்கலாம். ஆனால் இந்த நிலவரியைப் பொறுத்தவரை, தண்ணீர்த் தீர்வையைப் பொறுத்தவரை இப்போதே தாங்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, அதைக் குறைப்பதற்கு முயற்சியை எடுத்துக் கொள்ளவேண்டும்' என்று டாக்டர் பி. எஸ். லோகநாதன் தெளிவுபட எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"All in all, the total receipts from State enterprises are not considerable."

'அரசாங்கம் தொழில் மூலம் வருமானத்தைப் பெருக்க வாய்ப்பு இருக்கிறதா என்று ஆராய்ந்தால் இயலாத நிலைதான் இருக்கிறது.

"Further nationalisation of passenger transport may bring in some extra revenue."

"மேலும் கொஞ்சம் பஸ்களைத் தேசிய மயமாக்குவதன் மூலந்தான் வருமானத்தை எதிர்பார்க்க முடியும்".

இந்த இனத்தின் மூலந்தான் பெற வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டால் கனம் உறுப்பினர் திரு. கோ. சி. மணி அவர்கள் எடுத்துத் தெரிவித்ததைப் போல் உச்ச வரம்புக்கு உட்படாத 8 லட்சம் ஏக்கர் நிலங்கள் மீதும், தாங்கக் கூடியவர்கள் மீதும் இந்த வரியைப் போடலாம். இந்த வரியைப் போடுவதன் மூலமாக மடங்கள் போன்றவைகளின் வாழ்வு கெட்டு விடாது. ஐந்து ஏக்கருக்குக் குறைவாக வைத்திருப்பவர்களுக்கு விதி விலக்குத் தரவேண்டும். கனம் உறுப்பினர் திரு. நாராயணசாமி அவர்கள் பேசும்போதுகூட, பாரிடத்தில் நிலம் இருக்கிறது, சிறிய மிராசுதார்கள் எப்படி இருக்கிறார்கள். பெரிய மிராசுதார்கள் என்ன சொல்கிறார்கள் என்பதெல்லாம் தெரிந்த அவர்கள்கூட, 'சாதாரண உழவர் பெருங்குடி மக்களை இந்த வரி பாதிக்காது, பெரிய மிராசுதார்களைத்தான் பாதிக்கும்' என்று கூறினார்கள். அவர்கள் வாழும் இடங்களைச் சுற்று திருப்பனந்தாள் மடம் திருவாடுதுறை மடம் போன்ற மடங்கள் இருப்பதால் அங்கு சிறிய அளவில் நிலம் வைத்திருக்கக்கூடிய, ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என்ற அளவில் நிலம் வைத்திருக்கக் கூடிய உழவர்கள் இல்லாமல் இருக்கலாம். வாழ்க்கையை ஈடேற்றுவதற்குப் பெருஞ் செலவாகிக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் சிறிய நிலச் சொந்தக்காரர்கள் நிலைமை, நிலத்தையே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களுடைய நிலைமை மிகவும் கஷ்டமானதுதான். அதுவும் குத்தகைக்கு விட்டு விட்டால் 60 பங்கு குத்தகைகாரருக்குப் போக 40 பங்கை வைத்துக் கொண்டு வாழ வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறு குறைந்த நிலம் வைத்திருக்கிறவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இன்று மிக

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th November 1965

அதிகமான அளவுக்கு நிலம் வைத்திருப்பவர்கள்கூட நிலத்தின் மூலம் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பு இல்லையென்று வேறு பல முயற்சிகளிலே ஈடுபட்டு தொழிற்துறையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையே இருக்குமானால் சிறு நிலச் சொந்தக்காரர்களுடைய நிலைமை எப்படி இருக்கும்? ஆகவே, சிறு நிலச் சொந்தக்காரர்களுக்காவது இந்த வரியிலிருந்து விதி விலக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போதுள்ள நிலைமை மிக நெருக்கடியாக இருக்கிறது. நீர்ப்பாசன அமைச்சர் அவர்கள் மேட்டூரில் தண்ணீர் இல்லையென்று சொன்னார்கள். நூற்று இருபது அடி, நூற்று முப்பது அடி தண்ணீர் இருக்கவேண்டிய இடத்தில் 22 அடி, 23 அடி தான் இருக்கிறது. அடுத்த மே மாதம் வரை தண்ணீர் விடுவது பருவ மழையைப் பொறுத்திருக்கிறது. பல நீர்த்தேக்கங்களில் போதிய தண்ணீர் இல்லை. கிருஷ்ணகிரி நீர்த்தேக்கம் ஒன்றுதான் கொஞ்சம் சமாளிக்கும் நிலைமையில் இருக்கிறது. உழுது விதை விதைத்துவிட்டு, அறுவடைக் காலம் வரை தாங்குமா என்ற அளவுக்கு வருந்தத்தக்க நிலைமையில் விவசாயிகள் இருக்கிறார்கள்.

10-00 a.m. அப்படியே இந்த வரி கொண்டு வருவது என்றாலும் அதற்கு இது நேரம் இல்லை. இது தண்ணீர் இல்லாத நேரம், இது பருவம் கெட்டிருக்கிற நேரம், இது பாதுகாப்பிற்காகப் பணம் செலவழிக்கப்பட வேண்டிய நேரம், இது வேறு பல நெருக்கடிகளுக்கு ஆளாக வேண்டிய நேரம். விற்பனை வரி உயர்வு வரப்போகிறது. அதன் மூலம் பண்டங்களின் விலையை ஓரளவு ஏற்றத்தான் போகிறார்கள். அதுவும் உழவர் பெருங்குடி மக்களை, ஒரு குறிப்பிட்ட வருமானம் உள்ளவர்களை, நிரந்தரமான வருமானம் இல்லாதவர்களை அது பாதிக்கத்தான் போகிறது. ஆக, எல்லாச் சூழ்நிலைகளையும் வைத்துப் பார்க்கும்போது வேறு வகையில் இந்த வரியைக் கொண்டு வரலாம். நிதி தேவை இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. எட்டரை கோடி ரூபாய் அரசாங்கத்திற்குச் செலவு இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. மின்சாரக் கட்டணத்தைப் பற்றி சில பல திருத்தங்கள் சொன்னோமேதவிர, வேண்டாம் என்று சொல்லவில்லை. பெட்ரோல் வரி, டீஸல் வரி என்பது குறிப்பிட்டவர்களை மட்டும் பாதிக்கக் கூடியது. அதைக்கூட இந்த மன்றம் எதிர்க்கவில்லை. ஆனால், இந்த வரி இருக்கிறதே இது தாங்க முடியாது இருப்பதால் இதைக் கொண்டுவர இது நேரம் இல்லை. ஆகவே, இந்த வரியைப் போடாத அளவிற்குத் தகுந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அமைச்சரவையை நான் மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். இதன் சாதக பாதகங்களை அறிந்த அத்தனை பேர்களும் சேர்ந்து மீண்டும் உட்கார்ந்து எந்த அளவிற்குக் கூட்டலாம், இதில் ஏதாவது சீர்திருத்தம் செய்ய முடியுமா என்று கண்டு ஆராய இதை ஒரு பொறுக்குக் குழுவிற்கு விடுவதால்கூட ஆலோசனை செய்ய முடியும். எனவே திருத்தத்தை ஏற்று தீர ஆலோசித்துப் பார்க்கலாம் என்ற முயற்சியை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். வணக்கம்.



10th November 1965]

SRI M. KALYANASUNDARAM : Sir, if the Chair permits me I shall speak on the Bill.

MR. SPEAKER : During the question-hour the hon. Member was here and he could have given his name then.

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, we have adopted a convention in this House that after the hon. the Leader of the Opposition speaks, only the Government reply.

MR. SPEAKER : Yes, now the Hon. the Chief Minister will speak.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, என்னுடைய சக உணவு அமைச்சர் அவர்கள் இந்த விவாதத்திற்கு விடை அளிப்பதற்கு முன்பு நான் சில கருத்துக்களை, சில விளக்கங்களைக்கூற விரும்புகிறேன். நேற்று முன் தினம் நடைபெற்ற விவாதத்தின்போது நான் இந்த மன்றத்தில் இருக்கமுடியவில்லை. இந்த நில வரியை ஒட்டுமொத்தமாக 25 சதவிகிதம் உயர்த்துவது பற்றி இந்த மசோதா இந்த நேரத்தில் கொண்டு வரப்படவேண்டியிருக்கிறது என்பது பற்றி நான் நிதிநிலைமை பற்றி ஒரு அறிக்கை இந்த மன்றத்தில் சமர்ப்பித்தபோது சுருக்கமாக விளக்கியிருக்கிறேன். நெருக்கடி நிலையையொட்டித்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை நான் மீண்டும் நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆனால், இதற்கு முன்பு இந்த மன்றம் நிறைவேற்றிய மசோதா மின்சாரக் கட்டணத்தை உயர்த்தும் மசோதா. அதைப் பொறுத்தமட்டில் முன்பே ஓரளவிற்கு உயர்த்த வேண்டும் என்பது பல காரணங்களை ஒட்டி அரசாங்கம் கருதி வந்த விஷயம்; முடிவு செய்த விஷயம். அவ்வாறே அதை உயர்த்துவதில்கூட இந்த மன்றத்தில் தெரிவித்ததுபோல், சில ஆண்டுகளாகவே மத்திய அரசாங்கம் விவசாயத்திற்குக் கொடுக்கிற மின்சக்திக்குள்ள விகிதம் ஒரு யூனிட்டிற்கு 9 பைசாவிற்கு மேல் போகக் கூடாது என்று விதித்திருந்தார்கள். வேறு மாநிலங்களில் 12 பைசா, 15 பைசா என்றிருந்தபோதிலும் நாம் குறைவாகவே வைத்துக் கொண்டிருந்தோம். ஒரு பக்கத்தில் மின்சார உற்பத்தியைப் பெருக்க வேண்டியிருக்கிறது. அதற்கு உலக பாங்க் போன்ற ஸ்தாபனங்களிடமிருந்து நாம் கடன் வாங்க வேண்டியிருக்கிறது. கடன் இல்லாமல் மின்சார உற்பத்தியைப் பெருக்க முடியாது. கடன் கொடுக்கிற உலக பாங்க் போன்ற ஸ்தாபனங்கள் இவ்வளவு தூரம் வட்டி கட்ட வேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். மொத்தத்தில் விவசாயத்திற்கு நாம் குறைந்த கட்டணமாகவே வசூலித்துக் கொண்டு வருகிறோம். இதை உயர்த்தியபோதிலும் அது சப்ஸிடைஸ்தான். மின்சார உற்பத்திச் செலவைப் பார்த்தால்—கஷ்டம் இல்லாமல் லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று இல்லை. லாபம் சம்பாதிக்கவேண்டுமென்று எலெக்ட்ரிசிட்டி போர்டார் கருதுவார்கள். மற்றவர்களும் வற்புறுத்துவார்கள்—ஆனால், விவசாயத்திற்குக் கொடுக்கப்படுவது, இந்த மசோதா நிறைவேற்றப்பட்ட பிறகும் 9 பைசா 9¼ பைசா தான் தேறும். அப்படியும் கூட 14 பைசா ஆகிறது விவசாயத்திற்குக் கொடுக்கிற மின்சாரச் செலவு. அந்த அளவில், 4½ பைசா

விற்கு மேல் சப்ஸிடைஸ் செய்துதான் விவசாயிகளுக்கு நாம் மின்சாரம் கொடுக்கிறோம். ஆகவே முன்பே இந்த அளவிற்கு உயர்த்த வேண்டும் என்பது அரசாங்கம் யோசித்த விஷயம்தான்.

ஆனால், நில வரி உயர்வு அவ்வாறு அல்ல. இப்போது ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலையில் நாம் என்ன செய்யவேண்டும், எவ்வளவு தூரம் திட்டங்களைத் தள்ளிப் போடலாம், எவ்வளவு தூரம் செலவினங்களைக் குறைத்துக் கொள்ளலாம் என்பதை எல்லாம் ஆராய்ந்து தவிர்க்கக் கூடாத செலவினங்களைச் செய்வதற்கு, எந்தெந்த இனங்களில் வருவாய் கிடைக்கிறது என்றெல்லாம் ஆராய்ந்து தவிர்க்கக் கூடாத வகையில்தான் இந்த நெருக்கடி நிலையையொட்டி இந்த நிலவரி உயர்வு மசோதா கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசாங்கம் பாதுகாப்பிற்காகப் பெரும் அளவில் செலவினங்களுக்கு நிதி ஒதுக்க வேண்டிய ஒரு நிமித்தம் ஏற்பட்டிருப்பதால், மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கங்களுக்கும் கொடுக்கக்கூடிய உதவி, திட்டங்களை நிறைவேற்றிக் கொள்ள கொடுக்கக்கூடிய உதவி, பெருமளவிற்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை முன்பே தெரிவித்தேன். அதோடு நம் மாநிலத்தைப் பொறுத்தமட்டில் மத்திய அரசாங்கத்தில் இருந்து வரும் தொகை கணிசமான அளவிற்கு குறைக்கப்பட்டிருக்கிறது என்றாலும் தவிர்க்கக் கூடாத செலவினங்களும் இருக்கின்றன. ஒரு பக்கத்தில் சிக்கன முறையைக் கையாள்வதில் தீவிர கவனம் செலுத்தி வருகிறோம். அதை ஓரளவு கடைப்பிடிக்கலாம் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதோடு வேறு சில செலவினங்களையும் தள்ளிப் போட்டிருக்கிறோம். பெரிய கட்டடங்கள் கட்டுவது, திட்டத்திற்கு உட்படாத செலவினங்கள் உள்ள சில திட்டங்கள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் தள்ளிப் போட்டுக் கொண்டுதான் வருகிறோம். ஆனால், தவிர்க்கக் கூடாத வகையில் சில செலவினங்கள் ஏற்படுகின்றன. அவற்றை எந்த வகையில் சமாளிப்பது என்று யோசித்துத்தான் சில உயர்வுகள் ஏற்படுத்தப்படுகின்றன. விற்பனை வரி உயர்வு வரப் போகிறது. மசோதா சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. பெட்ரோல், டீஸல் வரி உயர்வு, நில வரி உயர்வு எல்லாம் இப்போது எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. நெருக்கடி நிலையை யொட்டி இவ்வாறு நில வரியை உயர்த்த முன்வந்திருக்கிறோம் என்றால், நெருக்கடியை இந்த அரசாங்கம் பயன்படுத்திக் கொள்கிறது, தங்களுக்கு வேண்டியதைச் செய்வதற்கு பயன் படுத்திக்கொள்கிறது என்று சில கனம் அங்கத்தினர்கள் நினைப்பார்களேயானால், அது முற்றிலும் தவறு என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நெருக்கடியைச் சமாளிப்பதில் தான் நாம் எல்லோரும் அக்கறை கொண்டிருக்கிறோமே தவிர, நெருக்கடி வந்துவிட்டது, அதை எவ்வாறு பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற எண்ணம் அரசாங்கத்திற்குச் சிறிதுகூட இல்லை. அப்படி தவறுதலான எண்ணம் அரசாங்கத்திற்கு இருக்கும் என்று சிலர் நினைக்கிறார்கள் என்றால் அதைப் பயன் படுத்திக் கொண்டு விவசாயிகளுக்கு மேலும் அதிக வரியைச் சுமத்த அவ்வளவு தெரியாத்தனமாக அரசாங்கம் இல்லை என்பதை எதிர்க்கட்சியில் உள்ள அங்கத்தினர்கள் ஒப்புக் கொள்வார்கள் என்று



நினைக்கிறேன். விவசாயிகள்தான் நம் நாட்டின் முதுகெலும்பு, அதை அரசாங்கம் உணராமல் இல்லை. விவசாயிகள் மேலும் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும். இப்போதுள்ள நெருக்கடி நிலையை தவிர்ப்பதற்குக் கூட விவசாயிகள் மேலும் மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்பதை அரசாங்கம் நன்கு உணர்ந்திருக்கிறது. ஆகவே பாதுகாப்பிற்குரிய திட்டம் என்று இந்த ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கி நிறைவேற்றுவது இருக்க அடுத்து ஒரு வருடத் திட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது பாதுகாப்பிற்குரிய ஒரு திட்டம் என்றால் அத்திட்டத்தில் விவசாயத்திற்குத்தான் முதல் இடம் அளிக்கப்பட்டிருக்கிறது. விவசாயப் பெருங்குடி மக்களுக்கு எவ்வாறு உதவி அளிப்பது, அவர்களுக்கு எவ்வாறு வசதிகளைப் பெருக்கித் தருவது, எவ்வாறு அவர்களுக்குச் சலுகைகள் காட்டுவது என்று வார்த்தை அளவில் அல்ல, இவ்வாறெல்லாம் யோசித்து விவசாயிகளை ஊக்குவித்து அவர்களுக்கு மேலும் நன்கு உழைப்பதற்கு உற்சாகம் கொடுத்து உற்பத்தியை எவ்வாறு பெருக்குவது என்பதுதான் இன்று முதன்மையாகக் கவனிக்கப்பட்டு வருகிற விஷயம். ஆகவேதான் எவ்வளவு ஒதுக்கப்பட்டிருந்தாலும், மேலும் தாராளமாகக் கொடுக்கிறோம். பத்தாயிரம் கிணறுகள் என்றால் இருபதாயிரம் கிணறுகள் குறிப்பிட்ட காலத்திற்குள் நிறைவேற்ற முடியும் என்றால் அவைவற்றிற்கெல்லாம் வசதி செய்துதந்து உற்பத்தியைப் பெருக்குவது என்பதுதான் திட்டம். விவசாயிகளுக்கு அதனால் கிடைக்கும் பலன், நாட்டுக்குக் கிடைக்கும் பலனாகும். அது நெருக்கடி நிலையைச் சமாளிக்க உதவும் என்று உணர்ந்துதான் சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள், மற்றும் பல வசதிகளை அளிக்கக் கூடிய திட்டங்கள் இவற்றை எந்த அளவிற்கு நிறைவேற்ற முடியுமோ அந்த அளவிற்கு நிறைவேற்றிக் கொண்டு வருகிறோம் என்பதைக் கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். ஆனால், 'விவசாயிகளுக்கு வரி எதற்காக, அவர்கள் கஷ்டப்பட்டு உழைக்கின்றார்களே, அவர்கள் வரி எதற்காக கொடுக்க வேண்டும்? என்று கேட்கலாம். அவர்களுடைய உழைப்பு இல்லாவிட்டால்—அவர்களுடைய தொழில் வளம் இல்லாவிட்டால்—வேறு எந்த வளம் இருந்தாலும் நாடு முன்னேற்றம் அடையமுடியாது. ஆகவே விவசாயிகள் முன்னேற்றம் அடையவேண்டும் என்பதற்காக பல திட்டங்களை எல்லா நாடுகளும், இந்த நாடும் போட்டுவருகின்றன. அதிலும் முக்கியமாக, நம்முடைய நாடு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டுதான் வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதை நாம் உணராமல் இல்லை. இந்த நாட்டை எடுத்துக்கொண்டால் தொன்று தொட்டு இங்கு விவசாயம் தான் சிறந்த தொழிலாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் அப்போதும்கூட எல்லோருக்கும் சோறுபோடுகின்ற தொழிலாக இருந்து வந்த வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர்கள், விவசாயிகள், தொன்றுதொட்டு அந்த காலத்திலிருந்து அரசாங்கத்திற்கும் வரி கொடுப்பது என்ற ஒரு முறையை வைத்திருந்தார்கள். ஆறில் ஒன்று கொடுப்பது என்று வைத்திருந்தார்கள். அது அவர்களுடைய பொறுப்பு, அவர்களுடைய கடமை, அவர்களுடைய உரிமை என்று பண்டை காலத்திலிருந்து இருந்து வந்திருக்கிறது என்பதை நாம் பார்க்

கின்றோம். இன்றைக்குப் பார்த்தாலும், நாம் போட்டிருக்கின்ற வரி உயர்வை எல்லாம் எடுத்துப் பார்த்தாலும் அதற்கு மேலே போகாது என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன். அந்த அளவிற்கு அப்போது நிலத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு தேவைப் படுகிற அளவுக்கு உழுது பயிரிட்டு வேளாண்மை செய்து வந்தார்கள். எல்லோரும் வேளாண்மை தொழிலில் ஈடுபட்டிருந் தார்கள். அதே நேரத்தில் நாட்டின் வளத்திற்காக ஆறில் ஒரு பங்கு என்று ஏற்படுத்தியிருந்தார்கள்.

ஆனால், அப்போது இன்றைக்கிருக்கிற வசதிகள் கிராமங்களில் கிடையாது. அந்த அவசியமும் அன்றைக்கு இருக்கவில்லை. இன்றைக்கு நில வரியோடு நாம் நீர்வரியையும் போட்டிருக்கிறோம். ஏனென்றால், கோடிக்கணக்கான ரூபாய்களை செலவு செய்து புதிய தாகத் தண்ணீரைக்கொண்டு வந்து, இதுவரை இல்லாத வசதிகளை எல்லாம் இப்பொழுது அரசாங்கம் அளித்துக் கொண்டு வருகிறது. அந்த வகையில்தான் நீர் வரி தொன்று தொட்டு நமது நாட்டில் இருந்து வருகிறது. பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் கிராமங்களில் பள்ளிகள் ஏற்படுத்த வேண்டும் என்பது இருக்கவில்லை. ஏதோ திண்ணைப் பள்ளி இருக்கும், அதற்கு அங்குள்ள ஒரு பெரியவர் அரிசி கொடுப்பார், ஒருவர் மிளகாய் கொடுப்பார், இன்னொருவர் புளி கொடுப்பார்: இப்படியாகத் திண்ணைப் பள்ளி நடந்து கொண் டிருக்கும். இப்போது எங்கு பார்த்தாலும் எந்தக் கிராமத்தை எடுத்துக் கொண்டாலும் பள்ளிகள் வேண்டும் என்ற தேவை வரும் போது கல்வி வரி என்று போட்டிருக்கிறோம். இது நாம் மட்டும் போட்ட வரி அல்ல. எஜுகேஷன் செஸ் என்று தொன்று தொட்டு பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலிருந்தே ஏற்பட்டது. கிராமங் களில், ஜில்லா போர்டுகளில், தாலூக்கா போர்டுகளில் பள்ளிகள் அமைப்பதற்காக இந்த செஸ் ஏற்படுத்தப்பட்டது. அதே போன்றுதான் அந்த காலத்தில் இப்போது தேவைப்படுவது போல் ரோடுகள் தேவைப்படவில்லை. மாட்டு வண்டி இருந்தது, அதோடு அப்போதிருந்த மக்கள் பல இடங்களுக்கும் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். ரோடுகளினுடைய அவசியம் இல்லாமல் இருந்தது. இப்போது கிராமங்களில் எல்லாம் ரோடு போட வேண்டும் என்ற அவசியத்தின் நிமித்தம் ரோடு செஸ் என்று போடப்பட்டிருக்கிறது.

ஆனால் பஞ்சாயத்து யூனியன்கள் ஏற்பட்ட பின்னால், அதற் காகச் சில பொறுப்புகள்—ஏற்பட்ட பின்னால் கிராமங்களில் பல வசதிகளையும் ஏற்படுத்த வேண்டியிருக்கிறது. நகரங்களில் இருக் கின்ற வசதிகள் எல்லாம் கிராமங்களில் இருக்க வேண்டும் என்று காந்தியடிகள் நமக்குச் சொல்லிவிட்டுப் போனார்கள். அந்த அடிப் படையில் இப்போதுள்ள பஞ்சாயத்துக்கள் கிராமங்களுக்குப் பல வசதிகளை அளித்துக் கொண்டு வருகின்றன. இதற்காகப் பல செஸ்கள் வசூலிக்கப்படுகின்றன. இதற்கெல்லாம் நிலவரியை யொட்டித்தான் பல செஸ்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்த செஸ்கள் எல்லாம் அந்தந்த கிராமங்களிலுள்ள விவசாயிகளுக்குப் பயன்பட வேண்டியிருக்கிறது. அவ்விதம் பயன்படவில்லை என்றால்



செஸ் போட வேண்டிய தேவையில்லை. அவ்விதம் செஸ் போடுவது நியாயமும் இல்லை. அவ்விதம் செஸ் பணத்தை வசூல் செய்து வைத்துக் கொண்டு ஒன்றும் செய்யாமல் இருந்தால் அந்த கிராமத் தில் செஸ் வசூலிக்க வேண்டிய தேவையில்லை என்று கலெக்டர் களிடத்தில் நான் சொல்லியிருக்கிறேன். அவ்விதம் வசதிகள் ஒன்றும் செய்து கொடுக்காத கிராமத்தில் செஸ்-ஸை குறைத்து விட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறேன். இல்லாவிட்டால் அதைக் குறைத்துவிடுவதற்குச் சட்டம் கொண்டு வருவதற்கு அரசாங்கம் அனுமதிக்கும் என்றும் சொல்லியிருக்கிறேன். செஸ் ஸை கலெக்ட் செய்து விட்டு செலவு ஒன்றும் செய்யாமல் இருக்கக் கூடாது. இல்லாவிட்டால் செஸ் ஒன்றும் வசூல் செய்யக் கூடாது, அதை நிறுத்திவிட வேண்டும் என்பது தான் என்னுடைய கருத்து. அது தான் இந்த அரசாங்கத்தினுடைய கருத்துமாகும்.

அதற்கு மேல், நிதி நிலைமையைச் சீர்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தோடு சில ஆண்டுகளுக்கு முன்பு நீர்வரி உயர்த்தப் பட்டது. அதை ராஷனலைஸ் பண்ண வேண்டும் என்பது தான். நம்முடைய முக்கியமான நோக்கம். முன்பெல்லாம் பொதுவாக 20, 25 ஆண்டுகளுக்கொரு முறை ரீ-செட்டில்மென்ட் நடத்துவது வழக்கம். அவ்விதம் ரீ-செட்டில்மென்ட் பண்ணும்போது வரி உயர்ந்து கொண்டேயிருந்தது. அவ்விதம் இருக்க வேண்டாம் என்று அது நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னால் வரி அப்படியே இருந்தது. இப்போது மொத்தத்தில் அரசாங்கத்தின் வருமானத்தை எடுத்துக் கொண்டு பார்த்தால் வருமானம் அதிகரித் துக்கொண்டே வருகிறது. ஆண்டுதோறும் நம்முடைய திட்டங்கள் எல்லாம் வளர்ந்து கொண்டே போகின்றன. என்பதை கனம் அங்கத்தினர்கள் உணருவார்கள். இந்த ஆண்டில் 170 கோடி வருமானம் என்றிருந்தது. அதற்கேற்ற வகையில் நிலவரி உயர வில்லை என்பதையும் கனம் அங்கத்தினர்கள் ஒப்புக் கொள்வார்கள். செஸ்கள் எல்லாவற்றையும் சேர்த்துப் பார்த்தால் எனக்கு இருக் கின்ற நினைவில்—12½ கோடி சில்லரை வருமானம் வருகிறது. நூற்று எழுபது கோடியில் 12½ கோடி தான் நிலவரியின் மூலமாகக் கிடைக்கிறது. ஆனால், இந்த 12½ கோடியும் எதற்காகக் கொடுக்க வேண்டும், இதைக் கொடுக்கின்ற விவசாயிகள் உழுது பாடுபடு கின்றவர்கள், இவர்கள் எதற்காக வரி கொடுக்கவேண்டும் என்று கேட்கலாம். இவ்விதம் வரி அதிகப்படுத்த வேண்டியதில்லை, பள்ளி களை வேறு விதத்தில் போட்டுக் கொள்ளலாம், ரோடுகளை வேறு விதத்தில் போட்டுக் கொள்ளலாம், நிலவரியை மட்டும் எடுத்து விடுவது என்பது பொருந்தாத விஷயம். வசதிகளை ஏற்படுத்த வேண்டும் என்பதற்கும், நிலவரியை எடுத்துவிடுவது என்பதற்கும் சம்பந்தம் இல்லை. உற்பத்தியைப் பெருக்குவது என்றால் விவசாயி களுக்கு பல வழிகளில் ஊக்கம் அளிக்க வேண்டும். இன்றைக்கு விவசாயிகள் நிலவரி கொடுக்கிறார்கள் என்றால், அதை வைத்துக் கொண்டு மேலும் அவர்கள் அதிக லாபம் சம்பாதிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தினுடைய கருத்து. அவர்களுடைய செல்வ நிலை உயர வேண்டும், அவர்கள் நிலத்தில் மேலும் கவனம் செலுத்தி உற்பத்தியைப் பெருக்கவேண்டும் என்பது தான்

நம்முடைய நோக்கம். அவர்கள் உற்பத்தியைப் பெருக்குகின்றார்கள் என்றால் அவர்கள் மட்டும் பலன் அடையப்போவதில்லை. அரசாங்கம் அவர்களுக்கு என்னென்ன வசதிகளை பெருக்கிக் கொடுக்க முடியுமோ, என்னென்ன சலுகைகளைக் கொடுக்க முடியுமோ அவற்றையெல்லாம் செய்து கொடுத்து, அவர்கள் மேலும் உயர வேண்டும், மேலும் வளர்ச்சி பெற வேண்டும் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம்.

நிலவரியை எடுத்து விட்டால் உற்பத்தி பெருகுமா, என்று பார்த்தால் பெருகாது என்று தான் சொல்வேன். நிலவரி இல்லாமல் இருந்தால், இப்போது இருக்கின்ற அளவிற்கே விளைந்தால் போதும் என்று கவனம் செலுத்தாமல் இருந்துவிடுவார்கள். இந்த ஒப்புயர்வற்ற இந்த வேளாண்மைத் தொழிலில் தான் முன்னோர்கள் இருந்தார்கள். அவர்கள் ஓரளவுக்குத் தான் விவசாயம் செய்து வந்தார்கள். அவர்களுக்கு நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற ஆசை அப்போது இல்லாமல் இருந்தது. விவசாயிகளுக்குப் பேராசை இல்லை. அவர்களுக்கு வேண்டியதை மட்டும் பயிரிட்டுக் கொண்டு இருந்தார்கள். அப்போது அவர்களுடைய தேவைக்கேற்றபடி வேளாண்மை செய்து கொண்டிருந்தார்கள். இப்போது தேவை பெருகியிருக்கின்ற காரணத்தால் நிலத்தில் நாம் அதிகம் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. முன்பெல்லாம் ஒரு போகம் மட்டும் போதும் என்றிருந்தார்கள். இரண்டு போகம், மூன்று போகம் எதற்காக என்று நினைத்துக் கொண்டிருந்தார்கள். ஆகவே, மேலும், மேலும் ஊக்குவிப்பது என்பதும், நிலவரியை உயர்த்துவது என்பதும் விவசாயிகளுக்கு இருக்கின்ற ஊக்கத்தைக் குறைத்துவிடும் என்று சொல்லும் வாதத்தை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை நான் தாழ்மையோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்போது உயர்த்துவது கூட, கிராமங்களிலுள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகச் செலவிடப்படும். தவிர்க்க முடியாத பல செலவினங்கள் இருக்கின்றன. வேண்டுமென்றால் சில செலவினங்களைக் குறைக்கலாம். ஆனால், மக்களுக்கு வேண்டிய சில அடிப்படையான தேவைகளை நாம் புறக்கணிக்க முடியாது. நெருக்கடியான நிலை இருக்கிறது. ஆகவே, இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாது என்று அவர்களிடம் சொல்வது சரியல்ல என்பதை கனம் அங்கத்தினர் அவர்களே ஒத்துக்கொள்வார்கள். எப்படி செஸ்கள் எல்லாம் பஞ்சாயத்துக்களால் வசூலிக்கப்பட்டு, கிராமங்களுக்கு வேண்டிய அடிப்படையான தேவைகள் பூர்த்தி செய்யப்பயன்படுகின்றனவோ, அதே மாதிரி தான் இந்த உயர்வும் செய்யப்பட வேண்டியிருக்கிறது. முக்கியமாக, கிராமங்களுக்கு அடிப்படையான தேவைகளை நாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டியதாக இருக்கிறது. மத்திய அரசாங்கத்திலிருந்து நமக்கு வருவாய் குறைந்திருக்கிறது. அதே சமயத்தில் நமக்கென்று சில பொறுப்புக்கள் இருக்கின்றன. பாதுகாப்பைப் பொறுத்தவரையில் மாநில அரசாங்கத்திற்கும் சில பொறுப்புக்கள் இருக்கின்றன. அவற்றைச் செய்யும்போது அடிப்படையான சில



தேவைகள் தவிர்க்க முடியாதவையாக இருக்கின்றன. அவற்றிற்கு இந்த நிதி பயன்படும். கிராமங்களில் முக்கியமாக உணவு உற்பத்திக்காக அதிகமாகச் செலவு செய்யப்படும் என்று நான் ஏற்கனவே தெரிவித்திருப்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள்.

இப்போது நிலம் வைத்துக்கொண்டு இருக்கிறவர்கள் எல்லோரும் பெரும்பாலும் குறைந்த அளவு நிலம் உள்ளவர்கள் தான். சிலருக்கு அது அன்இக்கனாமிக் ஹோல்டிங் என்று கூடச் சொல்லலாம். உச்ச வரம்பு ஏற்படுத்தும்போது கூட, கட்டுபடியாகும் அளவுக்கு உச்ச வரம்பு ஏற்படுத்தினோமே தவிர, குறைந்த பட்சம் இவ்வளவு நிலம் இருக்க வேண்டும் என்று சட்டம் செய்யவில்லை. அப்படிச் சட்டம் செய்வதாக எனக்கு உத்தேசம் இல்லை. இந்த மன்றமும் ஏற்றுக்கொள்ளாது என்று நினைக்கிறேன். இன்றைக்கு ஒருவனிடம் ½ ஏக்கர் நிலம் இருக்கலாம். ¼ ஏக்கர் நிலம் இருக்கலாம். அவன் அதைப் பெரிதும் மதிக்கிறான். அரை ஏக்கராக இருந்தாலும் அவனுடைய வாழ்க்கைக்கு வசதி அளிக்கிறது என்று அவன் நினைக்கிறான். 'அரை ஏக்கர் இருக்கிறது, ¼ ஏக்கர் இருக்கிறது; எனக்கு இது வேண்டாம்; ஐந்து ஏக்கர் இருக்கிற அளவுக்கு ஒருவருக்குக் கொடுங்கள்; நிலம் இல்லாதவர்கள் கூட்டத்தில் நாங்களும் சேர்ந்து கொள்ளுகிறோம்' என்று யாரும் சொல்ல மாட்டார்கள். ஒரு ஏக்கர், ½ ஏக்கர் இருந்தாலும், அது பலன் அளித்துக் கொண்டு தான் இருக்கிறது. விவசாயிகள் உழைப்பைப் பொறுத்து பலன் அளித்துக் கொண்டு தான் இருக்கிறது. அப்படிப் பார்த்தால், இன்றைக்கு நம் மாநிலத்தில் நிலம் உள்ளவர்கள் எண்ணிக்கையைப் பார்த்தால் 60 லட்சத்து சில்லரை பட்டாக்கள் இருக்கின்றன. பட்டா என்றால், ஏதாவது ஒரு பட்டா—மனைக்கட்டு வைத்திருக்கலாம்; மரத்திற்குப் பட்டா வைத்திருக்கலாம். அரை ஏக்கர் வைத்திருக்கலாம்; கால் ஏக்கர் வைத்திருக்கலாம்; முப்பது ஏக்கர் வரையில் வைத்திருக்கலாம். எல்லாவற்றையும் சேர்த்தால் 60 லட்சத்துச் சில்லரை இருக்கிறது. குறைந்த அளவு உள்ளவர்கள் தான் அதிகமாக இருக்கலாம். இன்றைக்கு ஒருவன் ½ ஏக்கர் வைத்திருப்பான், ¼ ஏக்கர் வைத்திருப்பான்; அதோடு ஏதோ ஒரு இடத்தில் அட்டெண்டர் வேலை பார்த்துக் கொண்டு அதிலே 60 ரூபாய் சம்பளம் வரும்; இரண்டையும் வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பான். எல்லாவற்றையும் சேர்த்தால் 60 லட்சம் தானே !

நகரத்தை விட்டுப் பார்த்தால், கிராமங்களில் 3 கோடி மக்கள் அல்லவோ வாழ்கிறார்கள். கொஞ்ச நிலம், அது, இது என்று வைத்துக் கொண்டிருக்கிறவர்கள், தன்னுடைய நிலம் என்று வைத்துக் கொண்டிருக்கிறவர்கள் 60 லட்சம் பேர்கள் என்றால், 240 லட்சம் பேர்கள் அது கூட இல்லாமல் இருக்கிறார்களே. அதை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுக்கும் சேர்த்துத் தான் வசதிகளைச் செய்கிறோம். பட்டா வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு மட்டும் தானா வசதிகளைச் செய்கிறோம்? 'அவர்களுக்கு நிலம் இல்லை, ஆகையால் அவர்களைப் பிரஜைகளாகக்

கருத முடியாது' என்று சொல்ல முடியுமா? குடிசை கட்டிக் கொள்ளலாம் என்றால் மனைக்கட்டு கூட இல்லாது எத்தனை பேர்கள் இருக்கிறார்கள்? ஆகையால் தான் எல்லோருக்கும் மனையாவது வழங்கிவிட வேண்டும் என்று திட்டத்தை உருவாக்கினோம். திட்டத்தை உருவாக்கி நிறைவேற்ற முற்பட்டோம். ஹரிஜனங்களுக்குக் கொடுப்பதிலே சில பேருக்குத் தான் கொடுக்கிறோம்---அது போதாது. மனைக்கட்டு ஏதோ கொடுக்கிறோம்—அது போதாது. ஏழைகளாக இருக்கிறவர்களுக்கு, ஹரிஜனங்களாக இருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும், மனையாவது கொடுக்க வேண்டுமென்று திட்டத்தை உருவாக்கினோம். ஆனால் நெருக்கடி நிலை வந்தது. எந்த அளவுக்கு நிறைவேற்ற வேண்டும் என்று நினைத்தோமோ அது முடியாது என்றாலும், நெருக்கடி நிலையில் கூட அதைக் கைவிடுவதாக இல்லை. இந்த ஆண்டு தொடக்கமாக இருக்கட்டும், இந்த ஆண்டு ஆரம்பம் செய்யக் கூடிய முறையில் இதையாவது செய்வோம், 'நிலம் இல்லாதவர்களுக்கு ஒரு மனைக்கட்டாவது கொடுத்து, அதில் அவர்கள் வீடு கட்டிக் கொள்ளட்டும்' என்று திட்டம் போட்டிருக்கிறோம்.

திருஷ்டாந்தமாக இன்னொன்று கூற விரும்புகிறேன். இன்றைக்குப் பள்ளிகள் வைத்திருக்கிறோம். மதிய உணவு வைத்திருக்கிறோம். மூன்றில் ஒரு பங்கு பேர்களுக்குத் தான் மதிய உணவு கொடுக்கிறோம். இதற்கு மேலும் கொடுக்கப்பட வேண்டியவர்கள் இருக்கிறார்கள். மதிய உணவுத் திட்டத்திலே 6 பைசா சர்க்காரிலிருந்து கொடுக்கிறோம், 2 பைசா பஞ்சாயத்திலிருந்து கொடுக்கிறார்கள், ஊர் மக்கள் 2 பைசா கொடுக்கிறார்கள், மொத்தம் 10 பைசா செலவில் செய்யப்படுகிறது. இதன் மூலம் அரசாங்கத்திற்கு 186 லட்சம் ரூபாய் செலவு ஆகிறது. இப்போது பள்ளிகளுக்குப் போகும்போது பிள்ளைகளுக்குப் புத்தகம் இல்லை. அவர்கள் எங்கே போய் வாங்குவார்கள்? ஆரம்பப் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளுக்குப் பாடப் புத்தகங்கள் இனமாகக் கொடுக்க வேண்டுமென்று திட்டம் போட்டோம். நெருக்கடி நிலை வந்துவிட்டது. எப்படி உத்தேசித்தோமோ அந்த மாதிரி நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. அடியோடு இதை நிறுத்துவதாக உத்தேசம் இல்லை. இந்த ஆண்டு தொடக்கமாக வைத்துக் கொள்வோம் என்று தான் எண்ணியிருக்கிறோம். இன்றைக்கு எல்லோரும் ஆரம்பப் பள்ளிகளில் படித்து உயர் நிலைப் பள்ளிகளுக்குப் போக நினைக்கிறார்கள். பாடப் புத்தகங்கள் என்றால், நான் உத்தேசிப்பது என்ன என்றால், முதல் இரண்டு வகுப்புகளில் உள்ள ரொம்ப ஏழைகள்—அதிலும் இன்னும் ஏழைகள் இருக்கலாம்---மதிய உணவு மூன்றில் ஒரு பங்கினருக்குக் கொடுக்கிறார்களே, அவர்களுக்கு இந்த ஆண்டு பாட புத்தகம் கொடுக்கத் தொடங்கலாம் என்பது தான். பாடப் புத்தகங்கள் இலவசமாகக் கொடுப்பதை ஆரம்பம் செய்யலாம் என்று தான் உத்தேசித்திருக்கிறோம். நெருக்கடி நிலை வந்து விட்டது, இப்போது செய்ய முடியாது என்று சொல்லலாம். அப்படிச் சொல்லுவது நியாயம் இல்லை என்பது தான் எங்கள் எண்ணம். ஆகவே, அதைச் செய்கிறோம்.



இன்னொன்று குறிப்பிட விரும்புகிறேன். இப்போது ஆரம்ப உயர் நிலைப் படிப்பு குறைந்த பட்சப் படிப்பு என்று எல்லோராலும் கருதப்படுகிறது. எல்லோரும் இப்போது படிக்கிறார்கள். புதிதாக 2,000 பள்ளிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் மேல் வகுப்பினர் இந்த உயர் நிலைப் பள்ளிகளுக்கு வருவதில்லை. இந்த உயர் நிலைப் பள்ளிகளுக்கு நடுத்தர வகுப்பினரும், ஏழைகளும் தான் வருகிறார்கள். அவர்களுக்கு மாதா மாதம் சம்பளம் கொடுப்பது என்பது கஷ்டம். ஆகையால் தான் சென்ற ஆண்டிலே உயர் நிலைப் பள்ளிகளுக்குச் சம்பளம் இல்லை என்று வைத்தோம். சென்ற ஆண்டு முடிவு செய்யாது இருந்தால் இந்த ஆண்டு கஷ்டப்பட்டு இருப்போம். பக்கத்தில் இருக்கிற ஆந்திர அரசாங்கத்திலே இந்த ஆண்டு நிறைவேற்றுவது என்று முடிவு செய்திருந்தார்கள். நெருக்கடி நிலை வந்து விட்டது. தள்ளிப் போடுகிறோம் என்று சொல்லுகிறார்கள். படிப்பு ரொம்ப அவசியம். நெருக்கடி நிலை வந்து விட்டது என்று படிப்பை நிறுத்துவதா? நெருக்கடி நிலையைச் சமாளிக்கவே படிக்க வேண்டும்.

விவசாயிகளைப் பொறுத்த மட்டில் ஏதோ கொஞ்சம் நிலம் வைத்திருக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். இரண்டு ஏக்கர் நிலம் இருக்கிறது என்று வைத்துக்கொள்வோம். இரண்டு ஏக்கர் வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால் இந்த அதிக வரியினால் ஒரு ஆண்டில் 10 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும் அல்லது 12 ரூபாய் என்று வைத்துக்கொள்ளலாம். நல்ல நிலம், நல்ல நீர்ப்பாசனம், காவிரிப் பாசனம் அல்லது காளிங்கராயன் சானலை எடுத்துக் கொண்டால் நல்ல பாசனம் இருக்கிறது---இரண்டு ஏக்கருக்கு காளிங்கராயன் சானலை எடுத்துக்கொண்டால் என்ன வரி கொடுக்கிறார்கள்? கனம் அங்கத்தினர் தட்சிணாமூர்த்தி கவுண்டர் இருக்கிறார், கேட்டுப் பாருங்கள் என்ன வரி கொடுக்கிறார்கள் என்று—அந்த மாதிரி இடத்தில் 10 ரூபாய் வரும். அங்கே கொடுப்பது இருக்கட்டும். தஞ்சையில் 30 ரூபாய் கொடுக்கிறார்கள் என்று கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னபோது எனக்குக் கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கிறது. (திரு. இரா. நெடுஞ்செழியன் குறுக்கீடு.) காளிங்கராயன் சானல் பகுதியில் 10-12 ரூபாய் இருக்கும். அங்கே மூன்று போகம் சாகுபடி. தஞ்சை ஜில்லாவைப் பொறுத்த வரையில் நீர் வரியை உயர்த்தும் போது கணக்குப் பார்த்தேன்—இன்றைக்கு நினைவில் வரவில்லை—சாதாரணமாக 10 ரூபாய்க்கு மேல் இல்லை. முதல் தரம், இரண்டாம் தரம் என்று அப்போது பரிசீலனை செய்தது ஞாபகம் இருக்கிறது. சாதாரணமாக 10 ரூபாய் வரி. செஸ் போடுகிறோம் என்றால் அது கிராமத்திற்குப் பயன்படுகிறது. இரண்டு ஏக்கர் சராசரி வைத்திருக்கிறவர்களுக்கு இது ஒன்றும் பிரமாதம் இல்லை. ஆனால் இப்போது வரி உயர்வால் வருஷத்துக்கு 10 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும். அல்லது 12 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும். இரண்டு ஏக்கர் வைத்திருக்கிற விவசாயிக்கு ஒரு குழந்தை உயர் நிலைப் பள்ளியில் படிக்கும் குழந்தை இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். தஞ்சை ஜில்லாவிலே எனக்குத் தெரியும். 5 ஏக்கர் 10 ஏக்கர் வைத்திருக்கிறவர்களுக்கு 5 குழந்தைகள் இருந்தால்

4 குழந்தைகள் உயர்நிலை பள்ளிகளுக்குப் போகும், இந்த ஒரு குழந்தைகளுக்குச் சம்பளம் கட்டி ஆக வேண்டுமென்று சொன்னால் மாதத்திற்கு 5 ரூபாய் ஆகாதா? எட்டு மாதங்களுக்கு 40 ரூபாய் ஆகாதா? நாற்பது ரூபாய் கொடுத்துத்தான் ஆகவேண்டும். இப்போது படிப்பின் அருமையைக் கிராம மக்கள் உணர்ந்திருக்கிறார்கள். கொடுத்துத்தான் படிப்பார்கள். இரண்டு ஏக்கர் நிலம் இருந்தாலும் கூட அதிலும் வருமானம் வருகிறது. ஏன் 1,500 ரூபாய் வருமானத்திற்கு உட்பட்டவர்களுக்குச் சம்பளம் இல்லை என்று வைக்க வேண்டும்? ஏழை என்று இருந்தால் சர்ட்டிபிகேட் ப்ரொட்யூஸ் செய்யட்டும்; நிலம் இல்லாதவர்களுக்குக் கொடுப்பது என்று வைத்துக்கொள்ளலாம். நிலம்
10-30 a.m. இல்லாதவர்கள், வீடு இல்லாதவர்கள் இவர்களுடைய குழந்தைகளும் படிக்கிறார்கள். அவர்களுக்கு சம்பளம் கொடுக்கும் விஷயத்தில் நாம் பூரணமாக சலுகை கொடுக்கிறோம். நிலம் ஏதாவது இருந்தால், சரி தான் படிக்கட்டும், சம்பளம் கொடுக்க வேண்டும் என்று சொன்னால் எப்படியாகும்? ஒரு குழந்தைக்கு ரூ. 40 ஆகும். ஒரே ஒரு குழந்தைக்கு ரூ. 40 ஆகும். இப்பொழுது இரண்டு ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ரூ. 10, 12 வரி கொடுக்கவேண்டியிருக்கும். ஐந்து ஏக்கர் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு, 5 × 5 = 25, 30 ரூபாயாகும். ஒரு வருஷத்திற்கு ரூ. 30 கொடுக்க வேண்டியிருக்கும். ஐந்து ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு, மூன்று குழந்தைகள் உயர்நிலைப் பள்ளியில் படிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளலாம். சாதாரணமாக இரண்டு ஆண் பிள்ளைகள், ஒரு பெண் பிள்ளை இருப்பார்கள். இப்பொழுது ஹாங்கேரியிலிருந்து அமைச்சர் வந்திருக்கிறார். அவர் அந்த நாட்டிலே ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தைக்கு மேலே இல்லை என்று சொன்னார். நம்முடைய நாட்டில் நிலைமை அப்படியில்லை. சாதாரணமாக நடுத்தரக் குடும்பத்தினரை எடுத்துக் கொண்டால் 3 குழந்தைகளுக்குக் குறைவு இல்லை. சில குடும்பத்தில் 5, 6 குழந்தைகள்கூட இருக்கின்றன. இரண்டு ஆண் பிள்ளை, ஒரு பெண் பிள்ளை என்று வைத்துக்கொள்ளலாம். இப்போது பெண் பிள்ளைகளும், உயர் நிலைப் பள்ளியில் படிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். ஐந்து ஏக்கர் நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களிடம் நாம் இப்பொழுது கேட்பது வருஷத்திற்கு ரூ. 30. அவர்கள் 3 பிள்ளைகள் படித்தால் மாதத்திற்கு ரூ. 15-க்கு குறையாமல் சம்பளம் கொடுக்க வேண்டும். ரூபாய் 15 × 8 ஆக வருஷத்தில் ரூ. 120 சம்பளம் கொடுக்க வேண்டும், உயர் நிலைப் பள்ளி படிப்புக்கு. அதற்காக அவர்கள் படிப்பை நிறுத்திவிட முடியுமா? இப்பொழுது அவர்கள் ரூ. 120 கொடுப்பதில்லை. அந்தப் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது. 'ஆசிரியர்கள் முழுச் சம்பளத்தையும் நாங்கள் கொடுக்கிறோம். மாணவர்களுக்குச் சம்பளம் கிடையாது' என்ற அளவில் ஏற்பாடு செய்திருக்கிறோம். இதை ஒரு திருஷ்டாந்தமாகத்தான் சொல்லுகிறேன்.



யோசித்துப் பார்த்தால், அரசாங்கம் செய்கிறது அநியாயம் அக்கிரமம் என்று யாரும் நினைக்க மாட்டார்கள். வரியே இல்லாமல் அரசாங்கத்தை நடத்த முடிந்தால் நல்லது தான். மாணவர்களைக் கேட்டால் பரீட்சையே இல்லாமல் படிப்பது நல்லது என்று தான் சொல்லுவார்கள். பரீட்சையே இல்லாமல் படித்துக்கொண்டே போய், சர்டிபிகேட் வாங்கிவிடலாம், டிப்ளமா வாங்கிவிடலாம், டிகிரி வாங்கிவிடலாம் என்று தான் அவர்கள் சொல்லுவார்கள். வரியே வாங்காமல் இருப்பது அரசாங்கத்திற்கு ரொம்ப சந்தோஷம் தான். பெயருக்கு அதிகாரத்தைச் செலுத்திக் கொண்டு போகலாம். வரியே இல்லை என்று சொன்னால், அதற்கு மேலே 'நீங்கள் செய்து தான் ஆகவேண்டும்' என்று சொல்ல முடியுமா? இவ்வளவுதான் முடியும், வரி கிடையாது என்று சொல்லிவிட்டால் போகிறது. பிறகு எதற்காக நாம் அரசாங்கத்தை வைத்து நடத்துவது? கிராம மக்கள் எவ்வளவு தூரம் எதிர்பார்க்கிறார்கள்? இப்பொழுது மக்களுக்குப் பல வசதிகளை, இதே விவசாயிகளுக்குப் பல வசதிகளை பெருக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம்.

அது மாத்திரம் அல்ல. நிலம் இல்லாதவர்கள், வீடு இல்லாதவர்கள், மனைக்கட்டே இல்லாதவர்கள் எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள். குடி தண்ணீர் திட்டம் நிறைவேற்றுகிறோம் என்றால், அது அவர்களுக்கு வேண்டாமா? நிலம் வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு மாத்திரம் தான் குடி தண்ணீர் திட்டமா? எப்படியாவது சமாளித்துக் குடிதண்ணீர் வசதி இல்லாதவர்களுக்குக் குடிதண்ணீர் கொடுப்பதற்கு முதல் கவனம் செலுத்துகிறோம். கொஞ்சம் சௌகரியமாக இருப்பவர்களிடம், பட்டா நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களிடம் தான் வரி கேட்கிறோம். அதுவும் புஞ்சை நிலம் வைத்திருப்பவர்களிடம் இப்பொழுது என்ன கொடுக்கிறார்களோ அதில் கால் பங்கு தான் வரி கேட்கிறோம். மொத்தத்தில் கால் பங்கு கேட்கிறோம். ஏக்கருக்கு ரூ. 2 ஆக இருந்தால் ரூ. 1/4, ரூ. 3 ஆக இருந்தால் ரூ. 3/4 இப்படித் தான் கேட்கிறோம். இவ்வளவுதான் நாம் கேட்கிறோம். புஞ்சை நிலம் வைத்துக்கொண்டிருப்பவர்களுக்கு நல்ல வருமானம் இல்லாமல் இல்லை. இதெல்லாம் கொடுப்பது எதற்கு? இது கூட இல்லாமல் இருக்கிறவர்கள், ஏழைகள், அவர்களும் விவசாயப் பெருங்குடி மக்கள் தான், அவர்களுக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்குத் தான்.

இன்று காலையில் கூட கேள்வி நேரத்தின் போது ஒரு உப கேள்வி கேட்கப்பட்டது. அவர்களுக்குக் குறைந்தபட்ச கூலி நிர்ணயம் செய்யவேண்டிய ஒரு நிமித்தம் இருக்கிறது. அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் வருமானம். சில பேர்கள் அதிகமாக வாங்குகிறார்கள், பெறுகிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள், விவசாய வேலை செய்கிறவர்கள், தொழிலாளிகள் பெறுகிறார்கள் என்றாலும், மொத்தமாகப் பார்க்கும்பொழுது அவர்களுடைய நிலைமை என்ன? அவர்களுக்குப் பல வசதிகள் செய்து கொடுக்க வேண்டியிருக்கிறது. அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதி

[திரு. எம். பக்தவத்சலம்] [10th November 1965

வேண்டியிருக்கிறது, பள்ளிக்கூட வசதி வேண்டியிருக்கிறது, அவர்களுக்கு மனைக்கட்டுகள் வழங்க வேண்டியிருக்கிறது. இவ்வளவு வசதிகளையெல்லாம் செய்யவேண்டும் என்றால், அதற்குப் பணம் வேண்டும். 'நமக்கு எத்தனை இருந்தாலும் நமக்கு எவ்வளவு குறை இருந்தாலும், நம்மைவிட ஈன ஸ்திதியில் இருக்கிறவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வசதி செய்வதற்காகக் கொஞ்சம் ஓரளவுக்கு நாம் தியாகம் செய்து, அவர்களுக்கு உதவி அளிப்போம்' என்றவகையில், விவசாயிகள் நிலத்திற்குச் சொந்தக்காரர்கள் எவ்வளவு குறைந்த நிலையில் உள்ளவர்களாக இருந்தாலும், எவ்வளவு பொருளாதார நிலையிலே நல்ல நிலையில் இல்லாதவர்களாக இருந்தாலும், அவர்கள் இந்தப் பொறுப்பை பகிர்ந்து கொள்ளவேண்டியிருக்கிறது என்ற வகையிலே விவசாயப் பொருங்குடி மக்கள் இந்த உயர்வை அவ்வளவாகப் பெரியதாகக் கருதமாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

மற்றொன்று, இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரையிலே உணவு நெருக்கடி நிலை இருந்து கொண்டே இருந்தது. தமிழ் நாட்டில் ஓரளவுக்கு நாம் நிறைவு கண்டிருக்கிறோம் என்றாலும், பக்கத்திலுள்ள கேரள மாநிலத்தில் அதிகப் பற்றாக்குறை இருந்தது. சாதாரணமாக போக்குவரத்து இருந்தபோது இங்கிருந்து அதிகமாக உணவு தானியங்கள் அங்கே சென்றன. அதனால் இங்கே கஷ்ட நிலை ஏற்பயடது. அதைச் சமாளித்துக்கொள்கிற நிலையிலே ஏழைகளுக்காக நியாய விலைக் கடைகளை ஏற்படுத்தினோம். அப்பொழுது ஒரு குறைந்த விலையை நிர்ணயித்தோம், அந்த விலையில் எங்களுக்குக்கொடுக்க வேண்டியது என்று சொன்னோம். கட்டாயமாக, வரி மாதிரி எங்களுக்குக் குறைந்த விலையில் தான் கொடுக்கவேண்டும் என்று விதித்து, அம்மாதிரி ப்ரொக்யூர்மெண்டு செய்து, நியாய விலைக் கடைகளை வைத்து உணவுப் பொருள்களை விற்றோம். அதனால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. ஆனால், சென்ற ஆண்டில் என்ன செய்தோம்? அந்த விலையை அடியோடு எடுத்துவிட்டோம். சாதாரணமாக நியாயமாக எந்த விலை இருக்க வேண்டும். எந்த அளவிலே விவசாயிகளுக்குக் கட்டுபடியாகும் என்பதையெல்லாம் ஆராய்ந்து, நிபுணர்களை வைத்து, அவர்களுடன் கலந்து ஆலோசித்து, அந்த அளவுக்கு நாம் விலையை நிர்ணயம் செய்திருக்கிறோம். விலையை நிர்ணயம் செய்தது மட்டுமல்ல, அந்த விலைக்குத் தான் வாங்கவேண்டுமென்பது மட்டுமல்ல, சப்போர்ட் பிரைஸ், குறைந்த பட்ச விலை வைத்திருக்கிறோம். பத்து ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்திலுள்ளவர்கள் என்னிடம் வந்து சொன்னார்கள். 'விலை குறைந்து விட்டது, எங்கேயாவது ஏற்றுமதி செய்யுங்கள், நாங்கள் நஷ்டப்படுகிறோம், வியாபாரிகள் எங்களைப் பயன்படுத்திக் கொண்டு, எல்லோரும் கட்டுப்பாடாக இருந்து குறைந்த விலைக்குக் கேட்கிறார்கள், அரசாங்கம் தான்' வாங்கவேண்டும், நீங்கள் தான் இதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யவேண்டும்' என்று சொன்னார்கள். பத்து ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிலை தஞ்சாவூர் ஜில்லாவிலேயே ஏற்பட்டது. அம்மாதிரி விவசாயிகளைச் சுரண்டவிடாமல், விலை எப்படியாவது ஓரளவுக்கு மேலே குறைந்தால், அதனால் விவசாயிகள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக் கூடாது



10th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

என்று கருதி, 'ஸப்போர்ட் பிரைஸ்' என்று வைத்து, அரசாங்கத்திற்கு நஷ்டமானாலும் நாங்களே அதை வாங்கிக்கொள்ளுகிறோம் என்ற ஒரு முறையை இன்றைக்கு ஏற்படுத்தியிருக்கிறோம். அது கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பது மட்டுமல்ல, அதை நிறைவேற்றிக்கொண்டு வருகிறோம் என்பது அங்கத்தினர்களுக்குத் தெரிந்ததே. இந்த விலையைப்பற்றி விவசாயிகளுக்கு நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் ஒன்று சொன்னார்கள். அதை நானும் ஊர்ஜிதப்படுத்த விரும்புகிறேன். ப்ரொக்யூர்மெண்ட் போது கேட்கிறார்கள், விலை ஏறுமா என்று. இந்த ஆண்டுக்கு விலை மாற்றம் இல்லை என்று உணவு அமைச்சர் அவர்கள் நேற்று சட்டசபையில் தெரிவித்தார்கள் என்று நினைக்கிறேன். அதை நானும் இப்போது ஊர்ஜிதம் செய்ய விரும்புகிறேன். ஆனால், சில ரகங்களுக்கு விலை குறைத்து நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். தாராள மனதோடு, விவசாயிகளுக்கு உதவ வேண்டும், விவசாயிகளுக்கு சலுகை காட்ட வேண்டும் என்ற எண்ணத்தோடு இதெல்லாம் பரிசிலனை செய்ய வேண்டிய விஷயம் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இந்த ஆண்டு போக, அடுத்த ஆண்டுக்கு எப்படி தாராள மனதோடு எந்தெந்த ரகத்தை எப்படி குரூப் செய்யவேண்டும், எப்படிச் சேர்ப்பது, எப்படி விலையை நிர்ணயிப்பது என்பதையெல்லாம் பரிசீலனை செய்யலாம். இதற்கெல்லாம் 'அக்ரிகல்சர் பிரைஸ் கமிட்டி' என்ற ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டு, அவர்கள் விலையை நிர்ணயித்துக்கொண்டு வருகிறார்கள். என்றாலும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த மட்டில் எவ்வளவு தாராளமாக இதிலெல்லாம் கவனம் செலுத்தி, விவசாயிகளுக்குக் கொஞ்சம் சலுகை கொடுக்கக் கூடிய அளவிலே பொது மக்களும் பாதிக்கப்படாத அளவிலே, விவசாயிகளுக்குப் பலன் ஏற்படக்கூடிய அளவிலே, இந்த விலையை எவ்வாறு நிர்ணயம் செய்வது, குறிப்பிட்ட ரகத்திற்கு விலை குறைவு என்று சொல்லுகிறார்கள், அதிலே எந்த ரகத்தை எதில் சேர்ப்பது, அப்படிச் சேர்ப்பதிலே எத்தகைய ஒரு சலுகை அளிப்பது என்பதிலெல்லாம் கவனம் செலுத்த வேண்டும் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன். இந்த மாநில அரசாங்கத்தைப் பொறுத்த மட்டில், இந்த மாநிலத்தைப் பொறுத்த மட்டில் தொடர்ந்து இதில் கவனம் செலுத்தி, அடுத்த ஆண்டு நிர்ணயிக்க வேண்டிய விலையை எவ்வளவு தாராள மனதோடு விவசாயிகளுக்கு உதவி அளிக்கக்கூடிய அளவுக்கு, விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய அளவுக்கு, சலுகை காட்டக்கூடிய வகையில் எவ்வாறு நிர்ணயிப்பது என்பதை நாம் கவனித்துக் கொண்டிருக்கிறோம்.

இரண்டு நாட்களுக்கு முன்பு டெல்லியில் மத்திய அரசாங்க நிதி அமைச்சர் முதல் அமைச்சர்களோடு பேசிக்கொண்டிருந்தார்கள். நம்முடைய தேவைகளை, விவசாயத்தைப் பெருக்கும் வகையிலே நம்முடைய தேவைகளைப் பற்றியெல்லாம் நாம் எடுத்துக் கூறினோம். மத்திய நிதி அமைச்சர் அவர்கள் சில விஷயங்களில் புதிய சில சலுகைகள். கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், மாநில அரசாங்கம் அந்தச் சலுகைகளில் பாதி ஏற்றுக்

[திரு. எம். பக்தவத்சலம்] [10th November 1965

கொள்ள வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். தனிப்பட்டவர்களுக்கு நாம் டிராக்டர்கள் கொடுக்கிறோம், பம்பு செட்டுகளுக்கு ஏற்பாடு செய்கிறோம். போதிய அளவு இல்லை என்று சொல்லுகிறார்கள். நேற்று முன்தினம் டெல்லியில் இதைப்பற்றி ஆலோசித்து நமது உள்நாட்டில் எங்கெங்கே நமக்குத் தேவையான பொருள்கள் உற்பத்தியாகின்றனவோ அவைகளையெல்லாம் துரிதமாக வேண்டிய அளவுக்குக் கிடைக்கச் செய்யவேண்டிய பொறுப்பை அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறேன். பம்பு செட்டுகள், டிராக்டர்கள், பிளாண்டு ப்ரொடெக்‌ஷனுக்கு வேண்டிய சில இயந்திரங்கள்—ரசாயன உரம் வேறு இருக்கிறது. அதுவும் ஓரளவுக்கு ஸப்ஸிடைஸ் செய்யப்பட்டுத்தான் கொடுக்கப்படுகிறது—இவைகளெல்லாம் நமக்கு வேண்டிய அளவுக்கு, நம்முடைய தேவையை மீண்டும் உறுதியாகத் தெரிவிக்கச் சொல்லியிருக்கிறார்கள். இன்னும் 5, 6 நாட்களில் அவர்களுக்கு தெரிவிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். நம்முடைய தமிழ்நாடு மாநிலத் தேவைகளைப் பொறுத்து மன்ற உறுப்பினர்கள் கருத்துகள் ஏதாவது இருந்தால் அவற்றை என்னிடம் வந்து தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எப்படி வேண்டுமோ அப்படிச் செய்கிறோம் என்றும், உற்பத்தியைப் பெருக்கிக் கொடுக்கிறோம் என்றும் மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள்.

அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் ஒன்று வைக்க வேண்டும் என்று மத்திய நிதி அமைச்சர் வற்புறுத்திக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன்படி சில இயந்திரங்களை நம் மாநிலத்திலேயே செய்ய வேண்டும். அதற்குச் சலுகை கொடுக்கிறோம் என்கிறார்கள். இந்த மாநில அரசாங்கம் அதில் கவனம் செலுத்தி வருகிறது. புதிதாக அவர்கள் ஒப்புக்கொண்ட ஒரு சலுகை என்னவெனில், அரசாங்கம் வாங்குவதாக இருந்தாலும், தனிப்பட்ட விவசாயிகள் வாங்குவதாக இருந்தாலும் இந்த இயந்திரங்களைப் பொறுத்த மட்டில், நீங்கள் 50 சத விகிதம் சப்ஸிடியும் நாங்கள் 50 சத விகிதம் சப்ஸிடியும் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இன்றைக்குத் தனிப்பட்ட விவசாயிகளுக்கு வாங்கிக் கொடுக்கிறோம். டிராக்டர் பற்றி இன்று காலைகூட கேள்வி நேரத்தில் குறிப்பிட்டார்கள். இயந்திரங்கள் வாங்கிக் கொடுப்பதில், மத்திய சர்க்கார் 50 சத விகிதம் சப்ஸிடி கொடுக்கிறோம் என்று அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் திருஷ்டாந்தத்திற்காகச் சொல்கிறேன். விவசாயிகளுக்கு எப்பொழுது சலுகை கொடுக்க வேண்டும் எப்படி வசதி செய்து கொடுக்க வேண்டும் என்றெல்லாம் பார்த்து, செய்து கொண்டு வருகிறோம். இது நிலம் உள்ளவர்களைப் பொறுத்தது. நிலம் இல்லாதவர்களுக்கு அதனால் பாதகம் என்றாலும் அவர்களுக்குக் கடன் வசதிகள் செய்து கொடுக்கிறோம்.

அதுமட்டுமல்லாமல் கிராமத்தில் கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்ஸ் வேண்டும் என்பது பற்றி நேற்று முன்தினம் டெல்லியில் கூட பேசினோம். விலைக்கட்டுப்பாடு செய்யப்பட்டு கன்ஸ்யூமர்ஸ் ஸ்டோர்ஸ் என்று வைத்து சாதாரண விவசாய மக்களுக்கு



10th November 1965] [திரு. எம். பக்தவத்சலம்]

வேண்டிய பொருள்கள் நியாயமான முறையில் கிடைக்க வழி வகை செய்யவேண்டும். அதிலும் கவனம் செலுத்தி வருகிறோம். விவசாயிகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வசதிகளைப் பெருக்க, ஊக்குவிக்க, இன்னும் அவர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்ய இந்த அரசாங்கம் மத்திய சர்க்காருடைய ஒத்துழைப் போடு, மத்திய சர்க்கார் எதிலாகிலும் முன் வரவில்லை என்றால், அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல், இந்த மாநில சர்க்கார் அதில் முழுக்க முழுக்க ஈடுபடுகிறது என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த வகையில் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. நிலம் இல்லாதவர்களும் இருக்கிறார்கள். நிலம் இருப்பவர்களுக்கு இந்தப் பொறுப்பு எல்லாம் இருக்கிறது. குறைந்த நிலம் உள்ளவர்களாக இருந்தாலும், இந்த வரி உயர்வை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று விவசாயப் பெருங்குடி மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மன்றத்தையும் கேட்டுக்கொள்ளுகிறேன். வேறு வேறு வரிகள் இருக்கின்றன. முன்பே குறிப்பிட்டேன். இந்த நெருக்கடி நிலை தீர்ந்த பிறகு 'இதையெல்லாம்' ரேஷனலைஸ் செய்ய வேண்டியிருக்கும். எல்லாவற்றையும் ஆராய்ந்து, விவசாய வருமான வரி ஒன்று இருக்கிறது. இப்பொழுது நில வரி உயர்வு இருக்கிறது, நீர் வரி இருக்கிறது, இதையெல்லாம் பார்த்துச் செய்யவேண்டும். மொத்தத்திலே விவசாயிகளுடைய பொருள்களை வாங்கும் பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. நெருக்கடி நிலையை ஒட்டி, தேவையை ஒட்டி இப்பொழுது கொண்டு வந்திருக்கும் வரி உயர்வை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். நெருக்கடி தீர்ந்த பிறகு எவ்வாறு, எந்த அளவுக்கு, இவற்றையெல்லாம் மாற்றுவது எப்படி இவற்றை ஒரு முகப்படுத்துவது எப்படி 'ரேஷனலைஸ்' செய்வது என்பதையெல்லாம் பரிசீலனை செய்து, எந்த வகையில் நாம் முடிவு எடுக்க வேண்டுமோ அவ்வாறு செய்ய வேண்டிய விஷயம் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

ஆகவே, இந்த மன்றத்தின் காலத்தை அதிகம் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. கனம் உணவு அமைச்சரும் விடை அளிக்க இருக்கிறார்கள். இன்றைய நிலையை உணர்ந்து இந்த வரி உயர்வுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த மன்றத்திலே உள்ளவர்கள் வேறு கருத்தைத் தெரிவித்தாலும், வெளியிலே உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், இந்த வரிவிதிப்பும் எந்த அடிப்படையிலே, எந்தச் சூழ்நிலையிலே, எந்த நோக்கத்தோடு, தேவையை ஒட்டிக் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்து, அந்த விவசாயப் பெருங்குடிமக்களுடைய நல்வாழ்வில் அக்கறையுள்ள சர்க்கார் என்று உணர்ந்து, அவர்கள் எப்பொழுதும் ஒத்துழைத்து வருகிறார்கள், இந்த நெருக்கடியிலும் ஒத்துழைத்து வருகிறார்கள், அவர்கள் இதை ஏற்றுக் கொள்வார்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இந்த நெருக்கடி நிலையைப் பயன்படுத்தும் வகையில் இந்த வரிவிதிப்பைக் கொண்டு வரவில்லை. நிலைமையைச் சமாளிக்கும் வகையில்தான் கொண்டு வரப்படுகிறது. இதுவரையில் விவசாயப் பெருங்குடி மக்கள்

சர்க்காரோடு ஒத்துழைக்கத் தயங்கியதில்லை. ஆகவே, இப்பொழுதும் ஒத்துழைப்பார்கள் என்று நம்பி என் வார்த்தைகளை முடிக்கிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** கனம் சபாநாயகர் அவர்களே, அதிக நேரம் எடுத்துக்கொள்ளாமல், சுருக்கமாக இரண்டொரு முக்கியமான கருத்துக்களுக்குமட்டும் பதில் சொல்ல விரும்புகிறேன். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும், இந்த நெருக்கடி நேரத்திலே, இந்த வரி வருவதைக் குறித்துப் பேசும்போது, பருவ நிலையைக் குறித்து அதிகமாக, அழுத்தமாகப் பேசினார். இன்றைக்கு இருக்கும் பருவ நிலை காரணமாக, இப்பொழுது இந்த வரியைப் போடுவது பாதகம் விளைவிக்கும், தீங்கு வரும் என்று சொன்னார்கள். அதைச் சொல்லும்போது, பருவம் சீர்கெட்டு இருந்தால், அந்தக் காலங்களில் நிலவரி, செஸ் முதலியவை வாங்குவதில் நாம் அனுசரிக்கும் கொள்கையை மறந்து சொல்லியிருப்பார்கள் என்று நினைக்கிறேன். பருவ மழை இல்லாமல் விளைச்சல் சரியாக இல்லாமல் போய்விட்டால், அரசாங்கம் வரிவஜா கொடுக்கிறது. அப்படி எந்தெந்தப் பிராந்தியத்தில் வரிவஜா கொடுக்கிறார்களோ, அங்கெல்லாம் எந்த வரியாலும், மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் இந்த நில வரியினால் ஏற்படக்கூடிய கஷ்டத்தைச் சொல்லுவதற்கு புள்ளிவிவரங்களைக் கொடுத்தார்கள். தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டை தாலூகா பொறுத்தவரையில் ஒரு விவசாயிக்கு ஒரு ஏக்கர் நிலம் இருந்தால், அவன் ரூ. 36 வரை செலுத்தும் நிலைமை ஏற்படும் என்று சொன்னார்கள். அதற்கும் நான் புள்ளி விவரங்கள் கொடுக்க விரும்புகிறேன். இந்த ராஜ்யத்திலே, நீர்ப்பாசனவசதி பெற்ற நன்செய் நிலத்தைவிட புன்செய் நிலம்தான் அதிகம் என்பதைச் சட்ட மன்ற உறுப்பினர்கள் ஒத்துக்கொள்வார்கள். ஆகையினால், நிலவரியை மட்டும் எடுத்துச்சொல்லும்போது, சில விவரங்களைச் சொல்ல விரும்புகிறேன்.

***Rates of Land Revenue Assessment* (*per acre*).**

| *Name of district.* | *Dry.* | | *Wet.* | |
|---|---|---|---|---|
| | *Maximum.* | *Minimum.* | *Maximum.* | *Minimum.* |
| Chingleput .. | 3 6 | 0 4 | 10 0 | 1 8 |
| North Arcot .. | 3 8 | 0 3 | 10 12 | 1 6 |
| South Arcot .. | 4 0 | 0 6 | 11 11 | 3 0 |
| Salem (North) .. | 2 12 | 0 3 | 10 12 | 1 6 |
| Salem (South) .. | 3 12 | 0 4 | 13 15 | 1 9 |
| Tiruchirappalli .. | 5 15 | 0 4 | 14 4 | 1 0 |
| Thanjavur .. | 8 4 | 0 4 | 16 10 | 1 12 |
| Madurai .. .. | 2 12 | 0 4 | 11 14 | 2 0 |
| Ramanathapuram. | 2 13 | 0 3 | 15 0 | 2 4 |
| Tirunelveli .. | 2 13 | 0 3 | 15 0 | 2 4 |
| (திரு. கே. டி. கோசல்ராம் குறுக்கீடு.) | | | | |
| Coimbatore .. | 2 4 | 0 4 | 15 12 | 2 14 |
| Nilgiris .. .. | 2 8 | 1 0 | 3 8 | 0 10 |



கனம் அங்கத்தினர் திரு. கோசல்ராம் அவர்கள், இந்தப் பெரிய ப்ராஜெக்ட் ஏரியாக்களிலே இருக்கக்கூடிய நீர்த் தேக்கத்தைக் குறித்துச் சொன்னார்கள். அதற்கு விசேஷ சட்டங்கள் அந்த அடிப்படையிலே இருக்கின்றன.

**திரு. கோ. சி. மணி :** கனம் சபாநாயகர் அவர்களே, ஒரு விளக்கம் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் இப்பொழுது குறிப்பிட்ட புள்ளி விவரம் எந்த பசலி அல்லது எந்த ஆண்டுக்கான புள்ளி விவரம் என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா :** 1964-ம் வருஷத்திய நான்காவது நிதிக் கமிஷனுக்குக் கொடுத்த புள்ளிவிவரத்தை நான் படித்தேன். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்களும் மற்றவர்களும் எங்கோ இருக்கக்கூடிய உயர்ந்த பட்ச விகிதத்தை மட்டும் எடுத்து, இது தான் சராசரி விகிதம் என்று சொல்லும்போது, இந்தப் புள்ளி விவரத்தையும் மனதிலே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட்டேன். கனம் எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல், எல்லா இடங்களுக்கும் நீர்ப்பாசன வசதி நாம் செய்துவிட்டோமானால், அதுவும் முதல் தர அடிப்படையில் செய்து விட்டோமானால், இராஜ்யத்தில் பிரச்னையே இருக்காது. ஆகையால்தான், விவசாய உற்பத்தியைப் பொறுத்த வரையில், இந்த வரி விகிதத்தை உயர்த்துவதனாலே, உடனே உணவு உற்பத்திக்குத் தீங்கு வந்துவிடும் என்கிற அந்த வாதத்தை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், விவசாயத் துறையிலே, அதுவும் சமீப காலத்திலே போர் ஏற்பட்டதற்குப் பிறகு, அதி வேகமாக ஏராளமான திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று ஆசைப்படுகிறோம். இந்த ஸப்ளிமெண்டரி பட்ஜட்டிலே பார்த்தோமானால் இந்த வருஷம் முடிவதற்குள்ளே கிணறுகளுக்கு மின்சாரம் பொருத்துவது, சிறு பாசனத் திட்டங்கள் முதலியவற்றையெல்லாம் அமைப்பதற்காகவே ஐந்தாறு கோடி ரூபாய் செலவு செய்ய வேண்டும் என்று நமது அரசாங்கம் திட்டம் போட்டிருக்கிறது. அந்த ஸப்ளிமென்டரி பட்ஜெட்டுக்குப் பிறகு கூட, இன்னும் விசேஷ முக்கியத்துவம் காட்டக்கூடிய முறையிலே, மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கங்களை இன்னும் விரிவான திட்டங்களைப் போட்டு அனுப்ப முடியுமா என்ற முறையிலே ஆலோசனை கேட்டிருக்கிறார்கள். அதற்காகக் கூட, டெல்லியில் நடந்த முதல் அமைச்சர்கள் கூட்டத்திலே, நாம் பத்திரிகையில் பார்ப்பது, மத்திய அரசாங்கம் இது போன்று விசேஷ கவனம் காட்டுவதற்காக எல்லா ராஜ்யங்களுக்கும் ஏறத்தாழ 34 கோடி அல்லது 35 கோடி ரூபாய் கொடுக்க வேண்டும் என்று நிதி ஒதுக்கி இருக்கிறார்கள். அதிலேயும் நமக்குப் பங்கு கிடைக்கும். அந்த அடிப்படையில்தான் விவசாயத் துறையிலே அதிக அக்கறை காட்ட முடியும்; உற்பத்திப் பெருக்கத்தைப் பொறுத்தவரையில், அதையெல்லாம்விட விசேஷமானது, கனம் முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போது, இந்த வருஷத்திலே நாம் நிர்ணயம் செய்திருக்கக்கூடிய நெல் விலையைப் பொறுத்த வரையில்

[திரு. வெ. ராமைய்யா] [10th November 1965

மாறுதல் இருக்காது என்று ஊர்ஜிதப்படுத்தியது மட்டுமல்லாமல், அடுத்த வருஷம் இந்த ரகம் பிரிப்பதில் இருக்கும் சிரமங்களை அனுசரித்து அரசாங்கமே தாராளக் கண்ணோட்டத்தோடு பார்த்து விவசாயிகளுக்கு லாபம் ஏற்படக் கூடிய முறையில் இந்த ரகங்களை பிரிக்கப்படும் என்று சொன்னது நிச்சயமாக விவசாயிகளுக்கு ஒரு பெரிய உற்சாகத்தைத் தரும் என்பதிலே என்னைப் பொறுத்த வரையில் சந்தேகம் கிடையாது.

அது மட்டுமல்லாமல், கனம் அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் நேற்று முன்தினம் பேசியபோது, அவருடைய பாணியில் பேசியபோது, "இந்தப் பணம் எதற்கு உதவப் போகிறது? செருப்பு வாங்கி அனுப்ப முடியுமா? சட்டை வாங்கி அனுப்ப முடியுமா?" என்று கேட்டார்கள். என்னுடைய முன்னுரையில் நான் விளக்கியிருக்கிறேன். நாட்டின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் முறையில், இந்த ராஜ்யத்திலே இருக்கக்கூடிய செல்வம், பாரதத்திலே இருக்கக்கூடிய செல்வமெல்லாம், போர் முனையிலிருக்கும் வீரர்களுக்குத் தான் முதல் இடம் என்றாலும், அதே நோத்தில், ஏர் முனையில் இருக்கக் கூடிய உழவர்களுக்கும் உற்சாகம் ஏற்படுத்த வேண்டும் என்ற காரணத்தால், இதிலே கிடைக்கும் அவ்வளவு தொகையையும் கிராமங்களிலே இருக்கக்கூடிய அத்தியாவசியமான வேலைகளைச் செய்து முடிப்பதற்காகவே நாம் செலவு செய்ய இருக்கிறோம். கிராமப் புறத்திலே பொருளாதார வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்றால், இன்றைக்கிருக்கும் பல்வேறு சிறு சிறு தேவைகள் பூர்த்தியாக வேண்டும். விசேஷமாக தஞ்சை ஜில்லாவை எடுத்துக்கொண்டால், கிராமப் புற வேலைகள் விவசாய முன்னேற்றத்திற்கு எவ்வளவு அவசியம் என்பதற்கு ஓரே ஒரு உதாரணம் சொல்லி நான் என்னுடைய கருத்தை விளக்க விரும்புகிறேன். தஞ்சை ஜில்லாவை எடுத்துக் கொண்டால், உட்புற கிராமங்களில் இருக்கும் விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய நெல்லுக்கு அரசாங்கமே நிர்ணயம் செய்து கொடுக்கக்கூடிய விலையைப் பெற முடியாத ஒரு கஷ்டத்தில் இருக்கிறார்கள். காரணம், அவர்களுடைய கிராமங்களிலிருந்து பெரிய நகரத்திற்கு, அரசாங்கம் குறிப்பிட்ட இடத்திற்கு அந்த நெல்லைக் கொண்டுவர வேண்டும் என்றால் சாதாரணமாகக் கடாராம்பப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் கொண்டுவருவதுபோல் அவர்களால் கொண்டு வர முடிவதில்லை. காரணம், இணைப்புச் சாலைகள் இல்லை, பாதைகள் இல்லை. அதனால், அவர்களுக்கு அதிக நஷ்டமும் விரயமும் ஏற்படுகிறது. அது போன்ற நிலையைத் தடுத்தோமானால், நல்ல நீர்ப்பாசன வசதி இருக்கும் பிராந்தியங்களில் உற்பத்தியாகும் நெல் கூட நல்ல விலைக்கு விற்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அதனால் தான் நாம் போர் முனையில் இருக்கக்கூடியவர்களுக்கு எவ்வளவு முக்கியத்துவத்தைக் கொடுத்து ஆதரவளிக்கப் பாடுபடுகிறோமோ அதே போன்று இவர்களுக்கு இருக்கும் சிறு சிறு பிரச்னைகளைத் தீர்க்கப் பாடுபடுகிறோம். சிறு ரோடுகள் போடுவது, பாலம் கட்டுவது, இன்னும் கிராம முன்னேற்றத்திற்கு, விவசாய முன்னேற்றத்திற்கு அத்தியாவசியத் தேவையான காரியங்களெல்லாம் தடைபட்டுவிடக் கூடாது என்பதற்காக இதிலே கிடைக்கக்கூடிய



10th November 1965] [திரு. வெ. ராமைய்யா]

தொகை அவ்வளவையுமே மீண்டும் விவசாயிகளுக்குப் பயன்படக் கூடிய முறையில், கிராம முன்னேற்ற வேலைகளுக்குப் பயன்படக் கூடிய முறையில், நாம் செலவு செய்ய வேண்டும் என்று முடிவு எடுத்திருக்கிறோம்.

மற்றொரு கருத்து வந்தது. அதற்கு மேலும் கொஞ்சம் விவரம் சொல்ல விரும்புகிறேன். கனம் முதல் அமைச்சர் அவர்கள் பேசும்போதும் சொன்னார்கள். நேற்று முன் தினம், சம்யுக்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் ஸ்ரீமான் நல்லசிவம் அவர்கள் பேசும்போது, மிக ஆக்ரோஷமாகவும் உணர்ச்சிவசப்பட்டும் பேசினார்கள் என்று சொன்னால் கூட மிகையாக இருக்காது. அவர்கள் ஏதோ போராட்டம் நடத்தப் போவதாகவும், அதோடு அல்லாமல், "எத்தனை வருஷம் ஜெயிலிலே இருக்க வேண்டும் என்றாலும் அந்தப் போராட்டத்தை நடத்தியே தீருவேன்" என்றும் சொன்னார்கள். ஆவேசமாக ஒரு யோசனையைச் சொல்லுகிறபோது, அதில் இருக்கும் சாதக பாதகங்களை மறந்து சொல்லியிருப்பார் என்று நான் நினைக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் அன்று சட்டசபையில் பேசினபோது, "யுத்த வரி என்ற அடிப்படையிலே ஒரு வரியைப் போட்டு, யுத்தம் முடிந்தவுடனே எடுத்துவிடலாம்" என்ற ஆலோசனையைச் சொன்னார்கள். அதற்குத் தொழில் அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, "எப்படி அத்தகைய வரி போட முடியும்?" என்ற ஒரு கேள்வியை எழுப்பினார்கள். அதற்குப் பதில் சொல்லக் கூடிய முறையில், கொஞ்சம் சீர்திருத்திச் சொல்ல வேண்டும் என்ற அடிப்படையில், ரொம்ப உணர்ச்சி வசப்பட்டுப் பேசின கனம் அங்கத்தினர் திரு. நல்லசிவம் அவர்கள், "வேண்டுமென்றால், நான்கு கோடி பேரில் இரண்டு கோடிபேரைத் தள்ளிவிடுங்கள்; மீதம் இருக்கும் இரண்டு கோடி பேரின் மீது வரி போடுங்கள்" என்று சொன்னார்கள். அவர்கள் சொன்னதை அப்படியே நாம் ஒப்புக்கொண்டோமானால், அந்த இரண்டு கோடி பேர்களில் எத்தனை நிலமுள்ள விவசாயிகள் கட்டுப்பட முடியும் என்று பார்க்க வேண்டும். அதைத் தான் கனம் முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த ராஜ்யத்தில் பட்டாக்களினுடைய எண்ணிக்கையை மட்டும் பார்த்தாலேயே, கடந்த ஜமாபந்தியில் எடுத்த பட்டாக்களின் எண்ணிக்கை அடிப்படையிலே சிறு நிலம் பெரு நிலம் வைத்திருக்கக்கூடியவர்களைப் பொறுத்த வரையில் 6,025,000 பட்டாக்கள் இருக்கின்றன. அந்தப் பட்டாக்களும் ஒருவருக்கு ஒரு பட்டா என்ற வகையில் இருக்காது என்பதையும் கனம் அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். சில பட்டாக்கள் ஐந்தாறு பேர்களுக்கும் சேர்ந்த கூட்டுப் பட்டாக்களாக இருக்கலாம். மொத்தத்தில் பார்த்தால், 60 லட்சம் பட்டாக்கள் என்பது 50 லட்சம் பட்டாக்களாக இருக்கும். கனம் அங்கத்தினர் பேசும் போது, இரண்டு கோடி பேருக்கு அந்த நிரந்தரமாக இருக்கும் வகையில் வரி போடுங்கள் என்று சொன்னார்கள். அறுபது லட்சம் பட்டாதார்களை ஒதுக்கிவிட்டு, மற்றவர்கள் மீது போடுவது என்றால், யார் மீது போடுவது? நிலமில்லாத ஏழைகள் மீது போடவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படும்போது, இவர்கள் மீது

[திரு. வெ. ராமையா] [10th November 1965

போடுவதிலே நிச்சயமாக அவர்கள் ஆட்சேபணை சொல்ல மாட்டார்கள். ஏனென்றால், எவ்வளவு ஆவேசமாகப் பேசினாலும், போராட்டத்தை மட்டும் அவர் மறந்துவிட்டால், நாம் பேசினது ரொம்ப ஆவேசம், ஆனால் நாம் சொன்ன கருத்து சாதாரணமாக விவசாயிகள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள், நிலமுள்ளவர்கள் வரி கொடுப்பதிலே ஆட்சேபணை காட்ட மாட்டார்கள், என்பதை உணருவார்கள். இந்த இரண்டு கோடி பேரிலே 60 லட்சம் பட்டாக்கள் அடங்கும். ஆகவே, அந்த ஆட்சேபணைக்கு இடம் இருக்காது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த நில வரி உயர்வு சம்பந்தமாகக் கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள் காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கைகளை எல்லாம் ரொம்ப ஆராய்ச்சி செய்து அவர்களுடைய உரையில் சொல்ல முயற்சி எடுத்தார்கள். 1938-ம் ஆண்டிலிருந்து காங்கிரஸ் மகாசபையில் நில வரி சம்பந்தமாக எடுத்துப் பேசின கருத்தை யெல்லாம் சொன்னார்கள். அதே நேரத்தில் கனம் அங்கத்தினர் திரு. மாதவன் அவர்கள், நாடு சுதந்திரம் அடைந்ததற்குப் பிறகு, நில வரியைப் பொறுத்த வரையில், நாம் மற்ற வரிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இதில் எந்தவிதமான கணிசமான உயர்வும் இல்லை என்பதை அவர்கள் நிச்சயமாக உணருவார்கள். ஒரு நேரத்தில் நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பு ராஜ்ய
11-00 a.m வருமானத்தில் நிலவரியில் இருந்து மட்டும் 40, 45 சத விகிதம் இருந்தது. இன்றைய நிலைமையில், 1963-ம் வருஷத்தில் நாம் உயர்த்தியிருக்கக் கூடிய அடிஷனல் சர்சார்ஜையும் சேர்த்துப் பார்த்தால், கூட 6, 7 சத விகிதத்திற்கு மேல் உயரவில்லை. இப்படி உயராததால் நாம் செய்தது சரிதான் என்று அவர்கள் திருப்பிச் சொல்ல வேண்டியதில்லை. அவர்களுக்கு நிலத்தில் இருந்து கிடைக்கக்கூடிய வருமானம் உயர்ந்திருக்கிறது. இதெல்லாம் பண வீக்கத்தினால் உயர்ந்தது என்று அவர்கள் சொல்லக் கூடும். அது சரியான காரணம் அல்ல. நமது அரசாங்கம் பெரு முயற்சி செய்து பல காரியங்களைச் செய்து வருவதன் காரணமாக ஒரு காலத்தில் ஏழு அல்லது எட்டு அல்லது பத்து மூட்டைகளுக்கு மேல் ஒரு ஏக்கரில் வேளாண்மை செய்யாதவர்கள் கூட இப்போது 3 டன் உற்பத்தி செய்ய முடியும் என்ற நிலைமைக்கு வந்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய உதவிகளை எல்லாம் செய்து கொடுக்க அரசாங்கம் முன் வந்திருக்கிறது. ஆகையால், இதைப் பார்க்கும் போது ஏதோ திடீரென்று அக்கிரமமாக தவறான முறையில் இந்த வரி விதிப்பு, நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருப்பதாகச் சொல்வது பொருத்தமில்லை என்று சொல்லிக் கொண்டு நெருக்கடி நிலைமையை உத்தேசித்து திரு. நல்லசிவம் போன்றவர்கள்—இதை எதிர்ப்பதற்கு ஆட்சேபணை இல்லை—நன்றாக உணர்ந்து இதை ஏற்றுக் கொள்ள முன்வரவேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.



10th November 1965]

**திரு. எம். தண்டாயுதபாணி:** 1965-66 பிப்ரவரியில் இருந்து இந்த வரி வசூலிக்கப்படுமா? அல்லது 1966-67ல் இந்த ஆண்டுக்கும் சேர்த்து வசூலிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**கனம் திரு. வெ. ராமையா:** ஆர்டரைப் பார்த்தாலே தெரியும். இந்தப் பசலியில் இருந்து ஆரம்பமாகும்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** இங்கே இரண்டு திருத்தப் பிரேரணைகள் இருக்கின்றன, பொது ஜன அபிப்பிராயத்திற்கு விட வேண்டும் என்பதாக ஒன்று. செல்ஸ் டாக்ஸ் போல இதில் பல சிக்கல்கள் இல்லை. இப்போதுள்ள வரியை நேரே 25 சத விகிதம் கூட்ட வேண்டும் என்பதுதான் பிரேரணை. இதற்கு செலக்ட் கமிட்டியும் வேண்டாம். பொதுஜன அபிப்பிராயத்திற்கு விட வேண்டிய அவசியமும் இல்லை. ஆகவே, இரண்டு திருத்தப் பிரேரணைகளையும் ஒப்புக்கொள்வதற்கில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER: The question is—

"That the Madras Land Revenue and Water-Cess (Surcharge) Bill, 1965 (L.A. Bill No. 30 of 1965), be circulated for the purpose of eliciting public opinion thereon".

**The amendment was put and declared lost.**

**A poll was demanded and the House divided thus.**

***Ayes.***

Sri K. R. Nallasivam
,, A. Kunjan Nadar
,, A. Swamidhas
,, V. R. Nedunchezhiyan
,, K. A. Mathialagan
,, Saw. Ganesan
,, T. L. Sasivarna Thevar
,, M. Kalyanasundaram
,, A. P. Dharmalingam
,, Rama Arangannal
,, P. K. Mookiah Thevar
,, V. S. S. Mani
,, Kanchi Manimozhiar
,, KR.RM. Kariamanicka Ambalam
,, A. Perumal
,, K. Cheemaichamy
,, N. Rajangam
,, K. S. Mani
,, N. Chinnamunisamy Chetty
,, S. Madhavan
,, T. P. Alagamuthu
,, S. Mani
,, P. Murugaiyan
,, A. Duraiyarasan
,, V. R. Periannan

Sri P. V. Sriramulu
,, M. Kamalanathan
,, C. G. Viswanathan
,, S. Muthulingam
Pulavar K. Govindan
Sri C. Manickam
,, T. Chinnasamy
,, M. R. Krishnamurthy
,, A. Thangavelu
,, S. Murugaiyan
,, P. U. Shanmugam
Srimathi Jagadambal Velayudham
Sri M. S. Mani
,, K. Thirupathy
,, K. Chinnaraje
,, M. P. Vadivelu
,, N. P. Sengottuvelu
,, M. V. Karivengadam
,, A. G. Balakrishnan
,, R. Narayanan
,, S. Ramaswamy
,, V. Krishnamurthy
,, R. Abdul Khaleel
,, S. J. Ramaswamy
,, R. Sampangi.

*Noes.*

Sri K. Parthasarathy
,, N. P. M. Chinniah Gounder
,, C. M. Ambikapathi
,, L. Anandan
,, S. Angamuthu Naicker
,, K. S. Ardhanareeswara Gounder
,, P. Appavoo
,, A. Appavoo Thevar
,, A. Arumugam
,, R. S. Arumugam
,, V. S. Arunachalam
,, A. B. Balagan
,, A. M. P. S. Balagangadharan
,, V. Bashyam Reddi
,, M. Chelliah
,, S. Chinnakaruppa Thevar
The Hon. Sri M. Bhaktavatsalam
,, P. Kakkan
,, V. Ramaiah
Sri P. Ramachandran
,, R. Krishnaswami Naidu
,, A. S. Dhakshinamoorthy Gounder
,, M Dhandayuthapani
,, V. Ellama Naidu
,, T. P. Elumalai
,, G. Gomathisankara Dikshithar
,, K. S. G. Haja Sheriff
,, P. Jayaraj
,, R. Ponnappa Nadar
,, K. Ponniah
,, S. Ponnusamy
,, R. Rajagopalaswamy Naicker
,, B. Rajagopal Naidu
,, P. Rajagopal
,, G. Rajaram
,, N. Ramachandra Reddi
,, A. L. Ramakrishna Naicker
,, S. Ramalingam
,, V. Ramanathan
,, N. Ramaswamy Udayar
,, A. Rathnavelu Gounder
,, R. Rangaswamy
,, S. Sadasivam
,, B. Parameswaran
,, K. T. Kosalram
Dr. B. Natarajan
Sri S. Sangili
,, R. Jeevarathnam
,, P. Kadambavanasundaram
,, A. K. Kaliappa Gounder
,, M. Kulandaiswamy Gounder
,, T. Manavalan
,, M. Maruthanayagam Pillai
,, J. Matha Gowder
,, K. K. Muthiah
,, M. P. Muthukaruppanaswami Gounder
,, P. K. Muthuvelappa Gounder
,, S. Nanjunda Row
The Hon. Sri G. Bhuvarahan
Srimathi T.N. Anandanayaki
,, A. Suares
,, P. K. R. Lakshmikantham
,, A. S. Ponnammal
,, A. Krishnaveni
,, B. Lakshminarasamma
,, Rajathi Kunchithapatham
,, Parvathi Arjunan
,, N. K. Ranganayaki
Kumari D. Sulochana
Sri K. Narayanaswami Pillai
,, N. Duraipandi
,, K. P. Palanisamy
,, G. D. Perumal Raju
,, D. N. Vadivel
,, V. Sankaran
,, M. S. Selvarajan
,, R. Sengaliappan
,, N. Shanmugasundaram
,, S. Sivasubramaniam
,, N. Sountharapandian
,, O. Sreenivasa Reddiar
,, C. Srinivasan
,, At. A.P. Soundravel Servai
,, A. R. Subbiah Mudaliar
,, R. Subramaniam
,, K. S. Subramania Gounder
,, K. B. Palani
,, P. Urkavalan
,, G. Venkataraman
,, N. V. Venugopalakrishnaswami
,, M. William

***Neutral—Nil.***

*Ayes* —50; *Noes* —91 ; *Neutral*— Nil.

The amendment was lost.

The amendment of Sri T. P. Alagamuthu was put and lost.

MR. SPEAKER : The question is—

'That the Madras Land Revenue and Water-Cess (Surcharge) Bill, 1965 (L.A. Bill No. 30 of 1965) be taken into consideration '

The motion was put and carried and the Bill was taken into consideration.

***Clause 2.***

MR. SPEAKER : The question is—

'That clause 2 do stand part of the Bill'.



SRI S. MADHAVAN : Sir, I move the following amendment :—

'In item (4) of clause 2, for the words "any holder" substitute the words "the owner".

The amendment was duly seconded.

**திரு. செ. மாதவன்** : கனம் தலைவர் அவர்களே, இந்த லாண்ட்ஹோல்டர் என்ற வார்த்தை டிஃபைன் செய்யப்படுவதில் பல சட்டங்களிலே பல மாதிரி டிஃபைன் செய்யப்பட்டிருக்கிறது. 1908-ஆம் ஆண்டின் சட்டத்திலே ஒரு மாதிரி டிஃபைன் செய்யப்பட்டிருக்கிறது. 1948-ம் ஆண்டின் சட்டத்திலே ஒரு மாதிரி டிஃபைன் செய்யப்பட்டிருக்கிறது. அண்மையிலே நிறைவேற்றப்பட்ட 1963-ஆம் ஆண்டுச் சட்டத்திலே ஒரு மாதிரி டிஃபைன் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது செய்யப்பட்டிருக்கிற சட்டத்திலே 'holder of any land' என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாகச் சொன்னால் usufructuary mortgage ஆக இருப்பவர் ஹோல்டராக இருக்கலாம். அல்லது லெஸ்ஸி (டெனன்ட்) ஆனாலும் ஹோல்டராக இருக்கலாம். ஹோல்டர் என்று பொதுவாகப் போட்டிருப்பதால் யார் என்று சந்தேகமாக இருக்கிறது. 1948-ஆம் ஆண்டுச் சட்டத்திலே 'land-holder' means a person owning என்ற வார்த்தை போடப்பட்டிருக்கிறது. ஆனால் இப்பொழுது கொண்டுவரப்படும் சட்டத்திலே ஹோல்டர் என்று போடப்பட்டிருக்கிறது. 'ஹோல்டிங்" என்றால் என்ன என்ற விளக்கம் தரப்படவில்லை. பழைய சட்டத்திலே 'ஹோல்டிங்' என்றால் என்ன என்பதுபற்றி டிஃபன் செய்யப்பட்டிருக்கிறது. 'holding' means a parcel or parcels of land held under a single patta or engagement in a single village என்று. ஆனால் இப்பொழுது நம்முடைய சட்டத்திலே 'ஹோல்டிங்' என்பது விளக்கப்படவில்லை. 1948-ஆம் ஆண்டுச் சட்டத்திலே லாண்ட்ஹோல்டர் யார் என்று டிஃபன் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் இதில் ஹோல்டர் என்றும் சொல்லப்படவில்லை. ஓனர் என்றும் சொல்லப்படவில்லை. சமீபத்திலே கொண்டுவரப்பட்ட 'ஆக்ட் 20 ஆப் 1963' சட்டத்திலே லாண்ட் ஹோல்டர் என்பதை டிஃபன் செய்யும்பொழுது எஸ்டேட் லாண்ட் ஆக்டை ஏற்றுக்கொண்டு அதோடுகூட 'shall mean a person owning' என்ற வார்த்தையும் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தக் குழப்பத்தையெல்லாம் தீர்ப்பதற்கு 'ஹோல்டர்' என்பதற்கு பதிலாக 'ஓனர்' என்று போட்டு விட்டால் சரியாக அமையுமா என்பதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்** : கனம் சபாநாயகர் அவர்களே, 'ஹோல்டர்' என்பதுதான் பொருத்தமானது. 'ஓனர்' என்பது பொருத்தமல்ல. காரணம் என்ன என்றால் 'mortgage with possession' இருப்பாரானால் அவர்தான் இந்த வரியைக் கட்டவேண்டும். ஓனர் என்று போட்டால் அவர் வரியைக் கட்டாமல் தப்பித்துக்கொள்வார். அதனால்தான் 'ஹோல்டர்' என்று விளக்கமாகச் சொல்லியிருக்கிறோம். 'ஓனர்' என்று மாற்றினால் அதிலிருந்து வரிகொடுக்காமல் தப்பித்துக்கொள்ள முடியும்.

The amendment was by leave withdrawn.

Clause 2 was put and carried.

*Clause* 3.

MR. SPEAKER: The question is—

'That clause 3 do stand part of the Bill'.

SRI S. MADHAVAN: Sir, I move the following amendment:—

'In clause 3, for the words "a surcharge at the rate of twenty-five per centum" substitute the words "a surcharge at the rate of fifteen per centum".'

The amendment was duly seconded.

MR. SPEAKER: Now the clause and the amendment are before the House for discussion.

**திரு. செ. மாதவன்:** கனம் தலைவரவர்களே, நிலத்திற்கும், நீருக்கும் வரி விதிப்பது என்று இந்த மன்றம் முடிவு செய்து விட்டது. ஆனால் இந்த வரி விதிக்கப்படக்கூடிய அளவில்லாவது இந்த அரசாங்கம் விவசாயிகள்மீது கருணைகாட்ட வேண்டுமென்ற அடிப்படையில் நான் இந்தத் திருத்தத்தைக் கொடுத்திருக்கிறேன். வாதங்களுக்குப் பதில் சொல்லும்பொழுது, கனம் முதலமைச்சர் அவர்கள் ஒரு வாதத்தைச் சொன்னார்கள். நிலத்தின்மீது நாங்கள் வரியைப் போட்டாலும், அந்த வரியைக் கொடுக்கக்கூடிய விவசாயிகளுக்குத் தான் நன்மை செய்கிறோம் என்று கூறி அதற்காக உதாரணமாக கல்வி வசதியைப்பற்றி நீண்டநேரம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். எங்களுடைய வாதங்களினுடைய அடிப்படை நோக்கம் எல்லாம் இந்த அரசாங்கம் விவசாயம் செய்யும் மக்களுக்கு நன்மை செய்யவில்லை என்பதல்ல, நிலத்தின் மீது இருக்கக்கூடிய பளு ஆண்டுக்கு ஆண்டு கூடிக்கொண்டிருக்கிறது என்பதுதான். இதைப்பற்றி காங்கிரஸ் கட்சிகூட 'கூட்டக் கூடாது' என்ற முறையிலே தீர்மானம் போட்டிருக்கிறது. ஆகவே, நிலத்தின்மீது உள்ள பளு ஆண்டுக்கு ஆண்டு கூடிக் கொண்டிருக்கிறது என்று தான் சொல்கிறோமே தவிர, கல்வி வசதியைப்பற்றியோ அல்லது விவசாயிகளுக்கு நன்மை செய்யவில்லை என்பதைப்பற்றியோ சொல்லவில்லை.

விவசாயிகளின் மீது வரி வரும்போது கனம் முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி எடுத்துச் சொல்லுகிற வாதத்தை இன்றைக்கு உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வெள்ளைக்காரன் காலத்திலே இந்த மாநிலத்தின் வருமானத்திலே 48 சதவிகிதம் நிலவரியிலிருந்து கிடைத்தது. இப்போது அது குறைவாக இருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். இதற்கும் நாங்கள் பதில் சொல்லி இருக்கிறோம். அன்றைக்கு இந்த மாநிலத்தின் மொத்த வருமானம் என்ன? இன்றைக்கு இந்த மாநிலத்தின் மொத்த வருமானம் என்ன? இதைப் பார்த்தால் அந்த சதவிகித



வேற்றுமைக்குக் காரணம் தெரியும். இந்த வாதம் பொருத்தமான வாதம் அல்ல என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். 1944-45-ம் ஆண்டு வெள்ளைக்காரன் ஆண்டபோது இந்த மாநிலத்தோடு ஆந்திர மாநிலமும், மலபார் மாநிலமும் இணைந்து இருந்தன. அந்த மாநிலத்தில் நிலவரியிலிருந்து வந்த மொத்த வருமானம் 9 கோடி 81 லட்சம். நம்முடைய காங்கிரஸ் ஆட்சியில் சுதந்திரத்திற்குப் பின்னால் 1955-56-ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் கணக்குப்படிப் பார்க்கும்போது நிலவரி மூலம் வருமானம் 6 கோடி 46 லட்சம். அதோடு நின்றதா என்றால் 1955-56-க்கு பின்னர் தொடர்ந்து ஏறிக் கொண்டே வந்திருக்கிறது. 1962-63-ல் நிலவரி மூலம் வருமானம் 3 கோடி 40 லட்சம். 1963-64-ல் 10 கோடி; 1964-65-ல் 11 கோடி 11 லட்சம். நிலத்தின் மீது வரிச்சுமை தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது என்பதை எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன். இன்னொரு வாதத்தையும் கனம் உணவு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஏக்கராவிலும் எவ்வளவு இருக்கிறது என்ற புள்ளி விவரத்தைச் சொன்னார்கள். அவர்கள் படித்த புள்ளி விவரம் செட்டில்மெண்ட் அஸெஸ்மெண்ட் என்று கருதுகிறேன். அடிப்படை செட்டில்மெண்ட் அஸெஸ்மெண்டைச் சொல்லியிருக்கிறார்கள். அடிப்படை வரிக்கு மேல் சர்சார்ஜ் எவ்வளவு பர்சன்ட், செஸ் எவ்வளவு பர்சன்ட்? அந்தக் கணக்கை எடுத்துப் பார்த்தால் நிலத்தின் மீது வரிச்சுமை நிச்சயமாக அதிகமாகியிருக்கிறது என்று எடுத்துக் காட்ட ஆசைப்படுகிறேன்.

கனம் முதலமைச்சர் அவர்கள், '60 லட்சம் பட்டாதாரர்கள் தான் இருக்கிறார்கள்; 2 கோடி 40 லட்சம் பேர் மீதி இருக்கிறார்கள். அவர்களுக்காக இந்த 60 லட்சம் பேர் வரிச்சுமையைத் தாங்கிக் கொள்ளக் கூடாதா' என்று கேட்டார்கள். அரசாங்கம் இந்த வாதத்தை உண்மையாகவே சொல்கிறார்களானால் நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன். இன்று நாட்டிலே ஒரு சிலரிடத்திலே கோடிக்கணக்கான ரூபாய் குவிந்திருக்கிறது. அதே சமயத்தில் கோடிக்கணக்கான மக்களிடத்திலே பணமே இல்லாத நிலை இருக்கிறது. இந்த ஏற்றத்தாழ்வை நீக்கி அந்தக் கோடிக்கணக்கான பணத்தை எல்லா மக்களும் சமமாகப் பெறுவதற்கு வழி செய்ய முன் வராமல் தயங்குவதற்குக் காரணம் என்ன? ஆகவே, அமைச்சர் அவர்களுடைய அந்த வாதமும் பொருந்தாது என்று கூற ஆசைப்படுகிறேன்.

இந்த வரி வரும் என்பதை முன் கூட்டியே முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார்கள். நாங்களும் எங்கள் கருத்தை வலியுறுத்தினோம். அதற்காக கிளாஸ் 1-ல் ஒரு திருத்தத்தையும் கொடுத்திருக்கிறேன். அவர்கள் தம்முடைய உரையிலே இந்த வரி நெருக்கடி கால உபரி வரி என்று 'அட்ஜங்டிவ் ஃபாரத் திலே' கொடுத்திருக்கிறார்கள். இது நிரந்தரமான வரி அல்ல என்பதற்காக அதற்கு விளக்கமும் பின்னாலே கொடுத்திருக்கிறார்கள். 'விவசாயப் பெருங்குடி மக்கள் இன்றைய பாதுகாப்பு முயற்சிக்குத் தங்களது சிறு பங்கைச் செலுத்த முன் வர வேண்டும்' என்று இவ்வளவு விளக்கமாகச் சொல்லிவிட்டு அவர்

[திரு. செ. மாதவன்] [10th November 1965

களுடைய கூற்றுக்கு முரணாக இந்தச் சட்டத்தை நிரந்தரமாக்குவது பொருத்தமானதுதானா? இதை, மக்கள் கருத்தறிய அனுப்ப வேண்டும், ஜாயிண்ட் செலக்ட் கமிட்டியின் ஆய்வுக்கு அனுப்ப வேண்டுமென்றெல்லாம் கேட்டோம். இதை இரண்டையும் ஆட்சேபித்து விட்டார்கள். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மகாபாரதத்திலே நம்பிக்கை கொண்டவர்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** 'முதலமைச்சர் அவர்கள் மகாபாரதத்திலே நம்பிக்கை கொண்டவர்கள்' என்று சொல்வது சரியல்ல.

**திரு. செ. மாதவன்:** அவர்கள் பாண்டவர்கள் மீது அன்பு கொண்டவர்கள்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் அவர்களுக்குக் கவுரவர் மீது அன்பு என்று கூறலாம்.

**திரு. செ. மாதவன்:** அரசாங்கம் கவுரவர்களை ஆதரிக்காமல் பாண்டவர்களை ஆதரிக்க வேண்டும். கிருஷ்ண பரமாத்மா பாண்டவர்களுக்காக ஐந்து நாடுகளைக் கேட்டார், பின்னர் ஐந்து ஊர்களைக் கேட்டார்; பின்னர் ஐந்தடி நிலமாவது கொடு என்று கேட்டார். 25 சதவிகித வரியை 15 சதவிகிதமாகக் குறைக்க வேண்டுமென்று கேட்கிறோம். 'கவுரவர்களை ஆதரிக்கவில்லை பாண்டவர்களைத்தான் ஆதரிக்கிறோம்' என்று காங்கிரஸ் கட்சி அரசாங்கம் மக்களுக்குத் தெளிவு படுத்தவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** நானும் என்னுடைய சக அமைச்சர் அவர்களும் பொது விவாதத்திற்கு விடையளிக்கையில் பல விஷயங்களை எடுத்து விரிவாகக் கூறியிருக்கிறோம். அதற்குப் பிறகு கனம் அங்கத்தினர் அவர்களுடைய பேச்சுக்கு விரிவாக விடை அளிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று கருதுகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரிவில் ரூபாய்க்கு 25 பைசா வீதம் நில வரி, தண்ணீர் வரி எல்லாம் சேர்த்து பாகுபாடு இல்லாமல் விதிக்க வேண்டுமென்று கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது மிகவும் அநியாயமானது, அக்கிரமமானது என்பது என்னுடைய அபிப்பிராயம். விகிதாசாரமும் ரொம்ப அதிகம். பாகுபாடு இல்லாமல் நிலம் வைத்திருப்பவர்கள் அனைவருக்கும் இது விதிக்கப்படுகிறது. கனம் முதலமைச்சர் அவர்கள், இந்த வரி விதிக்க வேண்டியதன் அவசியத்தை, காரணங்களை எடுத்துப் பேசியது இந்த வரி நியாயமானது என்பதை எடுத்துக் காட்டுவதற்காக அல்ல. ஏதோ வரி விதிக்க வேண்டுமென்று விதித்து விட்டோம். எப்படிப் பொதுமக்களிடம் இதை எடுத்துச் சொல்வது என்பதற்காக அவர்களுடைய கட்சி அங்கத்தினர்களுக்கு 'டாக்கிங் பாயிண்ட்ஸ்' கொடுப்பதற்காகப் பேசினார்களே தவிர, இந்த வரி எப்படி நியாயமானது என்று திருப்தி செய்ய முடியவில்லை.



10th November 1965]

MR. SPEAKER: Either for the Opposition or for the Government there cannot be two standards. What may be just and convincing when spoken outside, must be so when spoken here inside, the House.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** இந்த வரி அவ்வளவு ஆரம் அக்கிரமமானது. பாதுகாப்புத் தேவைகளுக்கு மக்களிடத்திலிருந்து வசூல் செய்ய வேண்டுமென்ற முயற்சிக்கு என்னுடைய கட்சியில் இருந்து ஆட்சேபனை தெரிவிப்பதாக இதைக் கொண்டு எடுத்துக் கொள்ளக் கூடாது. இது விவசாயம் சம்பந்தப்பட்டது. விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும், விவசாயத்தில் தன்னிறைவு பெற வேண்டும். வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதைப் பற்றிக் கூட லோகசபையில் காரசாரமான விவாதம் நடக்கிறது. மத்திய அரசாங்கத்தினர் இறக்குமதி செய்வதை எந்த அளவுக்குக் கட்டுப்படுத்த வேண்டுமென்று ஆலோசனை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கெல்லாம் தெரியும். இந்த நிலையில் விவசாயிகளுக்கு வரியை அதிகப்படுத்துவது விவேகமாக இருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். விவசாயிகள் மீது பல சுமைகளை ஏற்கனவே சுமத்தியாகிவிட்டது. சாகுபடிச் செலவு அதிகமாகிக் கொண்டிருக்கிறது. அரை ஏக்கரிலிருந்து 500 ஏக்கர், ஆயிரம் ஏக்கர் வரை 25 சதவிகிதம் வரி என்று போட்டிருப்பது நியாயமல்ல என்பது என்னுடைய அபிப்பிராயம். தாங்கக் கூடிய விவசாயிகள் இருக்கிறார்கள். இல்லையென்று சொல்லவில்லை. அவர்களுக்குப் போட்டிருந்தால் ஆட்சேபித்திருக்கமாட்டேன். விவசாய வருமான வரிக்குத் திருத்தம் கொண்டு வந்து அந்த விகிதத்தை அதிகமாக்க வேண்டுமென்று முன் வந்திருந்தால் அது ஓரளவுக்கு நியாயமாக இருந்திருக்கும். அதற்கு ஆதரவு கூடத் தெரிவித்திருப்போம். அதிகமாக நிலம் வைத்திருப்பவர்களைத் தப்பிக்க விட்டு விட்டு எல்லோருக்கும் 25 சதவிகிதம் என்பது சுமையைத் தாங்கக் கூடியவர்களுக்கு இலகுவாகவும், தாங்க முடியாதவர்களுக்கு அதிகமாகவும் இருக்கின்ற முறையில் வரி விதிக்கப்பட்டிருக்கிறது. உச்ச வரம்புச் சட்டத்திலே அவர்களுக்கு அதிக வருமான வரி கட்டுவதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் அனுகூலம் ஏற்பட்டது. அப்போப்பட்டவர்களுக்குச் சௌகரியமான முறையில் இந்த வரி அமைந்திருக்கிறது.

விவசாயத்திற்கு பாதகம் என்பது மட்டுமல்ல. இது அக்கிரமமானதுமாகும். பட்டாதாரர்கள் 60 லட்சம் பேர்கள் இருக் 11-30 a.m.
கிறார்கள் என்று சொன்னார்கள். பட்டாதாரர்களின் எண்ணிக்கை இன்னும் குறைவாகவே கூட இருக்கலாம். உச்சவரம்புச் சட்டம் வருவதற்கு முன்னால் ஒருவரின் பேரில் இருந்த பட்டா இப்போது ஏழுபேர்களின் பேரில் பட்டா இருக்கும். அதைக் கழித்தால் 40 லட்சம் கூட இருக்கலாம். சிறிய நிலச்சொந்தக்காரர்களுக்கும், சிறிய விவசாயிகளுக்கும் இந்த ரூபாய்க்கு 25 பைசா என்று போட்டிருப்பது ரொம்ப அக்கிரமமானது. 20 ரூபாய்க்கு உட்பட்டு நில வரி செலுத்துகிறவர்களுக்காவது இதிலிருந்து விலக்கு

கொடுத்திருந்தால் உணவு உற்பத்திப் பெருக்கில் அனுதாபம் இருக்கிறது என்று எடுத்துக் காட்ட உதவி செய்யும். அதுவும் இல்லை. இந்த வரி விதிப்பு விவசாயிகளுக்குள்ள உற்சாகத்தைக் குறைக்கும். விவசாயிகளின் ஒத்துழைப்பைப் பெற வேண்டிய சமயத்தில், உற்பத்தியைப் பெருக்க அவர்களின் உற்சாகத்தைப் பெருக்க வேண்டிய இந்த நேரத்தில், உணவு தான்யத்தில் தன்னிறைவைப் பெற வேண்டிய இந்த சமயத்தில் இந்த வரிவிதிப்பு நெல் போன்ற தான்யங்களை உற்பத்தி செய்யக் கூடிய சிறிய நிலச்சொந்தக்காரர்களுக்கு ஒரு பளுவாகத்தான் இருக்கும். இது அவர்களின் உற்சாகத்தைக் குறைக்கும். பொதுவாக, அரசாங்கம் பாதுகாப்பு என்ற பெயரால் விவசாயிகளுக்கு பாதகமான நடவடிக்கைகள் எடுக்கிறார்கள் என்ற எண்ணைப் பரவத்தான் செய்யும். வரி விதிப்பிற்கு உட்பட்ட பட்டாதாரர்கள் ஒரு கிராமத்தில் நாலு பேர்கள்தான் இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் பிரசாரம் எப்படி இருக்கும் என்று யோசிக்க வேண்டும். அந்த எண்ணம் தான் மற்றவர்களிடையே வலுப்பெறும். பாதுகாப்பிற்கு ஆதரவு தேட வேண்டுமென்று நினைக்கிற இந்த சமயத்தில் இந்த வரி விதிப்பை கொண்டு வரும் முறையும் சரியானதல்ல, இது நேரமும் அல்ல. விதிவிலக்கு ஓரளவு கொடுத்திருக்கவேண்டும். படிப்படியாக விகிதாசாரத்தை போட முடியாமல் இருக்கலாம். இதை கைவிட்டுவிட்டு, இப்போதும் கூட நேரம் இல்லையா, இந்த மசோதாவையே கைவிட்டு விட்டு விவசாய வருமான வரிக்கு திருத்தங்கள் கொண்டு வாருங்கள். அதை ஆலோசனை செய்யலாம். அதற்கு இந்த சபையும் ஆதரவு கொடுக்கும், எதிர்க்கட்சியினரும் ஆதரவு கொடுப்பார்கள், மறுக்கமாட்டார்கள் என்றுதான் நான் அபிப்பிராயப்படுகிறேன். இதை ஆலோசிக்கவேண்டும். ஆகவே இந்த 25 பைசா வரிவிதிப்பை நான் முழு மனதோடு எதிர்க்கிறேன்.

* **திரு. சா. கணேசன் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வரி எவ்வளவு தீமை பயப்பது என்பதை என் முந்தைய நாள் உரையிலேயே குறிப்பிட்டேன். இப்போது நம்முடைய கனம் முதல் அமைச்சர் அவர்கள் சில சமாதானங்களைச் சொல்ல முயன்று சில கருத்துக்களையும் இங்கு கூறியுள்ளதைப் பார்க்கிறபோது இன்னும் இந்த மசோதா எவ்வளவு தீமையைப் பயக்கக் கூடியது என்பதை நாம் நன்றாக உணர முடியும். 60 லட்சம் பட்டாக்கள் என்று சொன்னால் அதில் என்னதான் குறைத்துக்கொண்டாலும் 40 அல்லது 30 லட்சம் என்று வந்தாலும்—ஒரு பட்டா என்பது ஒரு தனி மனிதன் என்று பொருள் அல்ல, ஒரு பட்டாதாரரையொட்டி வாழ்கிறவர்கள் குறைந்த பட்சம் ஐந்து பேர்கள் என்று வைத்துக் கொண்டாலும்—40 லட்சம் பட்டாதாரர்களை நம்பி வாழ்கிறவர்கள் கிட்டத்தட்ட 1½ கோடி மக்களுக்கு மேல் 2 கோடி வரை இருக்கிறார்கள், இன்றையதினம் என்பதை நாம் கணித நெறியால் படுத்திக் கொள்ள முடியும். புரிந்து கொள்ளமுடியும். விவசாயிகளுக்கு இப்போது கூடுதலாக 25 சதவிகிதம் தண்டமாக நில வரியும் தண்ணீர்த் தீர்வையும் விதிப்பது நியாயம் என்று பலவாறாக சமாதானம் சொல்ல முயன்றார்கள். அப்படிச் சொல்ல முயல்கிற



போது கல்விக்காகச் செலவழிக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். கல்விக்காகச் செலவழிப்பதோ அல்லது அதுபோன்ற பிற துறைகளில் செலவழிப்பதோ அது அரசாங்கத்தின் கடமை. அது தவறு என்று சொல்லவில்லை. இதிலிருந்துதான் அதைச் செலவழிப்பதற்காகப் பெறவேண்டும் என்றும் சொல்லக் கூடாது. அப்படியானால் இவ்வளவு ஆண்டுகளாகச் செலவழிக்கப்பட்டு வந்தது, கல்விக்காகச் செலவழிக்கப்பட்டு வந்தது இந்த 25 சதவிகிதம் கூடுதலோடுதான் நடத்தப்பட்டதா, இல்லையா என்பதைக் கவனிக்கவேண்டும். இந்தக் கல்வியைப் பெறுகிறவர்கள் விவசாயிகள் மட்டும்தானா, விவசாயிகளைப் போல் பல மடங்கு வருமானம் உடையவர்களும், பலவித வாய்ப்புக்கள் பெற்றவர்களும் கல்வி முதலிய சகல வசதிகளையும் பரிபூர்ணமாக அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிட முடியாது. ஆகவே அந்தக் காரணத்திற்காக விவசாயிகள் தலையில் மட்டும் இதைச் சுமத்துவது என்பது நியாயமுமாகாது, தர்மமுமாகாது என்று நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். வரி மேலும் மேலும் குறைந்து போய் விட்டால் விவசாயிகளுக்கு அக்கறையே இருக்காது விவசாயிகள் ஓரளவு போதும் என்ற மனம் உடையவர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அப்படியெல்லாம் சொல்வதின் மூலம் இது சரி என்பது பொருந்தாது என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ட்ராக்டர்கள், கேணிகள் போன்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை, செய்து கொடுக்கிறார்கள். அது இந்த வரி அடிப்படையை வைத்து மட்டுமல்ல. இந்த நேரத்தில், இப்போது தேசத்தில் ஏற்பட்டிருக்கிற நெருக்கடியான, அச்சம் தரக் கூடிய ஒரு சூழ்நிலையில் இந்த மாதிரி வரி போடுவது பொருத்தமாக இருக்குமா, இதனால் நம் முயற்சிக்கு ஆக்கம் கிடைக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டும். மக்களில் பெரும்பான்மைப் பகுதியினரை இந்த வரி தாக்குவதாக அமையக் கூடும். அப்படியானால் அவர்கள் எதிரிகள் மீது, ஆக்கிரமிப்பாளர்கள் மீது கொள்ளக் கூடிய ஆத்திரத்தை, கோபத்தை ஆட்சியின் மீது செலுத்தக் கூடிய ஒரு நிலையை நாமே உண்டாக்குகிறோம். இந்த மாதிரியான அவசர காலத்தில் இது மாதிரியான புதிய நிலைகள் எல்லாம் இல்லாமல் செய்வதுதான் ஆட்சிக்குச் சிறந்த நெறியாக அமையும் என்றும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். ஆனால் அவசர நிலைமை தீர்ந்த பிறகு கூட இது நிவர்த்திக்கப்படமாட்டாது என்பது தொனிக்கும்படியாக—இதை மாற்றியமைப்பதோ அல்லது ஒரு குழு அமைப்பதோ எப்படியோ—சில கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இத்தியாதி குறிப்புக்களை, கருத்துக்களை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது இது நிரந்தரமாகிவிடக் கூடிய ஒன்று தான். இந்த நேரத்தில் இந்தமாதிரியான ஒரு வரி, அதிகப்படியான வரியை அரசாங்கம் கொண்டு வருவது என்பது தரமும் அல்ல, நியாயமும் அல்ல. இதுவரையில் உள்ள உலக வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் எங்கும் ஒரு அபாயகரமான நிலைமையில் இப்படிப்பட்ட ஏற்பாடுகள் நடைபெறவில்லை என்பதைப் புலப்படுத்துவதோடு கூட இது புத்திசாலித்

தனமும் ஆகாது என்று சொல்ல ஆசைப்படுகிறேன். எதிர்க்கட்சிக் காரன் என்ற கண்ணோட்டத்தில் மட்டும் நின்று பேசுவதனால் காங்கிரஸுக்குக் கெட்ட பெயர் வருகிறது என்று சந்தோஷப்படலாம். ஆனால் அந்த எண்ணம் எனக்கு இல்லை. காங்கிரஸ், எதிர்க்கட்சிகள் என்ற எண்ணமே எனக்குக் கிடையாது. என் எண்ணம் தேசத்தைப் பற்றியது, நம் தேசத்தை ஆக்கிரமித்திருக்கும் விரோதியைப் பற்றியது. அந்த விரோதி நம் மீது நம் மக்களுடைய ஒருமுகமான எதிர்ப்பை, ஆத்திரத்தை, கோபத்தை, துவேஷத்தை, வெறுப்பை ஈடுபடுத்த வேண்டிய இந்நேரத்தில் இந்தமாதிரியான ஒரு சுமையை விவசாயிகளின் மீது பெரும்பான்மை மக்களான பாட்டாளிகளின் மீது, திணித்து, அதன் மூலம் தேசத்திற்கு ஏற்பட்டிருக்கிற அபாய நேரத்தில் வேண்டிய வளத்தைப் பெருக்க ஒரு நாட்டில் போதிய வழி வகை இல்லாமல் செய்யக் கூடாது என்று பணிவோடு ஆனால் அழுத்தமாகத் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இறுதியில் ஒன்று மட்டும், இப்படிச் செய்வதின் மூலமாக நிச்சயமாக கொஞ்சம் கொஞ்சமாக விவசாயிகளை உழவுத் தொழிலில் இருந்து விரட்டுவதன்றி வேறு நன்மை ஒன்றையும் காணமுடியாது என்பதை நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். எந்தத் துறையிலும், எந்தத் தொழிலிலும் இருக்கிற எவருக்கும் ஏற்பட்டிருக்கிற வரி அளவை விடப் பல பல மடங்கு அதிகமாக இன்று விவசாயிகளின் தலையில் வரி விகிதாசாரம், வரி அளவு சுமத்தப்பட்டிருக்கிறது. அந்த நிலையில் இதையும் செய்தால் நம்முடைய உணவு நிலைமையில் நிச்சயமாக—ஏதோ வார் ஃபீல்டில் வெற்றிகரமாக நடக்கலாம்—ஹோம் ஃபீல்டில் நாம் செம்மையான காரியங்கள் செய்தவர்கள் ஆகமாட்டோம், இங்கு பரிபூரண தோல்வி அடைவோம் என்று எச்சரித்து இந்த மசோதாவை இப்போதாவது கூட வாபஸ் பெறுவதுதான் நியாயமும், தர்மமும், புத்திசாலித்தனமாகவும் இருக்கும் என்று கூறி அமைகிறேன். ஜெய் ஹிந்த்.

திரு. இரா. நெடுஞ்செழியன்: அவைத் தலைவர் அவர்களே, இன்று இங்கு விவாதத்திற்கு வந்திருக்கிற இந்த மசோதாவின் மிக முக்கியமான பிரிவாக இந்தப் பிரிவு அமைந்திருக்கிறது. இதையொட்டித்தான் கருத்துக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. அரசாங்கத்திற்கு இந்த நெருக்கடி நேரத்தில் நிதி தேவைப்படுகிறது என்பதை எதிர்க்கட்சியினர் அத்தனை பேர்களும் நன்கு உணருகிறார்கள். அந்த நிதியைத் திரட்ட வேண்டிய முயற்சிகளை அரசாங்கம் எடுக்கிறபோது ஓரளவு எதிர்க்கட்சியினரும் ஒத்துழைப்பு நல்கி ஆதரித்து வந்திருக்கிறார்கள். ஆகவே, தேவை இருக்கிறது, அரசாங்கம் செய்யும் திட்டச் செயல்களுக்கு நிதி தேவைப்படுகிறது என்பதை உணருகிறோம். நாம் எடுத்து வற்புறுத்துவதெல்லாம், இம்மாதிரி நிலவரி, நீர்வரி இவைகளை உயர்த்துவதினால் பாதகம் ஏற்படும், இந்த வரிகளிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தை வேறு வழிகளிலிருந்து தேடிக்கொண்டு, இந்த வரிகளை தவிர்ப்பதின் மூலமாக நாட்டிலே நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்த



முடியும் என்ற கருத்தை நாம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். கனம் முதலமைச்சர் அவர்கள், விவசாயிகளுக்கும் கிராமங்களிலுள்ள மக்களுக்கும் அரசாங்கத்தால் காட்டப்படுகின்ற சலுகைகளை எல்லாம் காட்டி அவர்கள் இந்த வரியை கொடுப்பதற்கு தயங்க மாட்டார்கள் என்று எடுத்துச் சொன்னார்கள். இப்படிப்பட்ட சலுகைகள் எல்லாம் தேவை தான் என்பதை நாங்கள் உணருகிறோம். இவ்வசதிகள் எல்லாம் மேலும் பெருகவேண்டும், சலுகைகள் கிடைக்கவேண்டும் என்பதைப்பற்றி அடிக்கடி இந்த மன்றத்திலுள்ள உறுப்பினர்களே தங்கள் கருத்துக்களை எடுத்து வைக்கிறார்கள். அந்த அடிப்படையை யொட்டித்தான் ஆண்டுக்காண்டு நிதி நிலைமை வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதையும் நம்மால் காண முடிகிறது. ஆனால் இங்கு கூறப்படுவதெல்லாம் இந்த வரியின் மூலம் கிடைக்கின்ற வருமானத்தை வேறு வரிகளின் மூலமாக பெருக்கிக்கொள்வதற்கான முயற்சியை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ளலாம், இல்லையென்றால் விவசாய மக்கள் மிகவும் பாதிக்கப்படுபவர்களாக அமைவார்கள். எல்லா வகையிலும் வளரக்கூடிய நிலைமையில், வளருவதற்கு வழியற்ற நிலைமையில் முன்னேறுவதற்கு எந்தவிதமான வாய்ப்பும் வசதியும் இல்லாமல் இருக்கின்ற நிலைமையில் வாழ்க்கை நடத்தி வருகின்ற விவசாய மக்கள் மீது வரி விதிப்பதைத் தவிர்க்கவேண்டும் என்பதைத்தான் மிகவும் வலியுறுத்தி எடுத்துச்சொல்லி வருகிறோம். அது மட்டுமல்ல, இப்போதுள்ள நிலையில் கூட, அவர்கள் இருக்கின்ற நிலவரி, நீர்வரி இவைகளை தவறாமல் கொடுக்கக்கூடிய நிலையில் இருந்து வருகிறார்களா என்றால் அதுவுமில்லை என்பதையும் நாம் காண்கிறோம். பல இடங்களில் வரி வஜா செய்து தர வேண்டும் என்று ஆண்டுக்காண்டு விண்ணப்பம் செய்து கொள்கின்ற நிலைமை இருந்து வருவதையும் நாம் பார்க்கிறோம். ஆண்டுக்காண்டு இருக்கின்ற வரிகளைக் கூட சரியானபடி வசூலிக்க முடியாத நிலையில் ஆண்டுக்காண்டு கஷ்டப்படுகிற நிலைமையில் கணக்குகள் இருப்பதையும் நாம் பார்க்கின்றோம். இதற்காக ஆண்டுக்காண்டு வஜா செய்து கொடுக்கப்படவேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் விவசாயப் பெருங்குடி மக்கள் விண்ணப்பங்கள் தருவதையும் நாம் பார்க்கின்றோம். அந்த அளவுக்கு வேறு எந்தத் துறையிலும் இல்லாத அளவிற்கு இந்தத் துறையில் ‘அரியர்ஸ்’ பாக்கிகள் பின்தங்கி கிடப்பதையும், அவற்றை வஜா செய்து தரவேண்டும் என்று சொல்லப்படுவதையும், அதற்கான முயற்சியில் அரசினர் ஈடுபடுவதையும் நாம் இன்றையதினம் காண்கிறோம்.

எந்த முறையில் மாநில அரசுகள் வரிகளை விதிக்கலாம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அந்த யோசனைகளின் அடிப்படையில் பார்த்தாலும் கூட, தென் பிராந்தியத்தில் இருக்கின்ற நம்முடைய மாநிலம் பெரும்பாலும் விவசாயிகளைக் கொண்ட மாநிலமாக இருக்கின்றது, அகில இந்திய அளவில் பார்த்தால்—இதிலுள்ள விகிதாசாரத்தை எடுத்துப் பார்த்தால் நாம் இரண்டு மடங்கு அதிகமாகக் கொண்டிருக்கிறோம். அகில இந்திய அளவு 300 சில்லரை என்றால்

[திரு. இரா. நெடுஞ்செழியன்] [10th November 1965

தமிழகத்தைப் பொறுத்தவரையில் 600 சில்லரை என்ற அளவுக்கு விவசாயிகள் நிரம்பிய மாநிலமாக நம்முடைய தமிழகம் இருக்கிறது. விவசாய உற்பத்தியை எடுத்துக் கொண்டுப் பார்த்தால் அகில இந்திய அளவு 1.18 என்றால் நம்முடைய தமிழகம் .71 என்ற அளவுக்கு பின்தங்கிய நிலையில் தான் இருந்து வருகிறது. கிராமத்திலுள்ள மக்கள் எந்த அளவுக்கு சம்பாதிக்கிறார்கள் என்கின்ற அளவைப் பார்த்தால், அகில இந்திய அளவு 44 சத விகிதம் என்றால், தமிழகம் 30 சதவிகிதம் தான் சம்பாதிக்கின்ற நிலைமையில் இருக்கிறது. மேலும் அகில இந்திய அளவில், விவசாயத் துறையில் தனி நபருடைய வருமானத்தை எடுத்துக்கொண்டால் அது 113 ரூபாய் என்றால் தமிழகத்தில் தனி நபருடைய வருமானம் 94 ரூபாய் என்ற அளவில் தான் இருக்கிறது. ஆகவே, இந்த வகையில் இருப்பவர்களுக்கு வரியை விதிக்காமல் வேறு வகையில் வரியை விதிப்பதற்கு வழி செய்யவேண்டும் என்பதைத் தான் நாம் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். ஏற்கனவே இந்த நாட்டிலுள்ள விவசாயிகள் அதிகப்படியான வரி கொடுக்கிறார்கள். அவர்கள் தாங்க முடியாத நிலையில் இன்றைய தினம் வரிச்சுமையை சுமந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைக் குறைக்க வேண்டும், ஏற்கெனவே இந்த மன்றத்தில் எடுத்து தெரிவித்திருப்பதுபோல்—தேசீய உற்பத்திக்கணக்காய்வுக் குழுவின் தலைவர் டாக்டர் லோகநாதன் அவர்கள் எடுத்துக் கூறுகிற பொழுது . . .

"with such a low *per caipta* income, farmer's savings and, therefore, investments in improvement of land as well as fixed capital are quite naturally minimal."

என்று, மிக, மிக குறைந்த அளவில் இந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு வரிச்சுமை இருக்கக்கூடிய வகையில் அமைக்கப்படவேண்டும் என்று எடுத்துரைத்திருக்கின்றார். அந்த அளவில், ஐந்து ஏக்கர்களுக்கு மேற்பட்டு இருக்கின்றவர்களிடமிருந்து விகிதாசார அளவில் வருமானத்திற்கு ஏற்ற அளவில்—வளர்ச்சிக்கு ஏற்ற அளவில்—வரிவிகிதத்தை அமைக்கவேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம். அந்த முறையில் பல்வேறு வழிகளிலும் விவசாயிகளுக்கு தொல்லை கொடுக்கின்ற, இந்தச் சட்டத்தை வாபஸ் பெறுவதுதான் சிறந்ததாக இருக்கும். இதை செலக்ட் கமிட்டிக்கு விட்டிருந்தால் இதிலுள்ள குறைகளைப்பற்றியும் வரி விகிதங்களைப் பற்றியும் மாற்றி அமைக்க முடிவு செய்திருக்கலாம். கனம் முதலமைச்சர் அவர்கள், நேற்றையதினம் சொல்லியிருப்பதைப் பார்த்தால், விவசாயிகளுக்கு வசதிகளை செய்து கொடுக்க முயற்சி எடுத்துவருகிறோம் என்று சொன்னதாக செய்தித்தாளில் செய்தி வந்திருந்தது. இதைப்பார்த்தால், இந்தச் சட்டத்தை வாபஸ் பெறப் போகிறார்கள் என்று எண்ணினேன். அவ்விதம் கொடுக்கப்படும் என்று சொல்லப்பட்ட வசதிகள் எந்த அளவில் அமையும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். இந்த நேரத்தில் இப்போதிருக்கின்ற இக்கட்டான காலத்தில் இந்த இனத்தின் மீது வரி போடாமல் வேறு வகையில் இதற்கான வழியை கண்டுபிடிக்க



10th November 1965] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

வேண்டும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். நெருக்கடி காலத்தில் ஏற்படுகின்ற செலவினங்களுக்காக தனியாக போர் காலத்திற்கு மட்டும் 'வார் டாக்ஸ்' என்ற முறையில் 'போர்க் கால வரி' என்று போர்க்கால நெருக்கடியை சமாளிப்பதற்கு மட்டும் போட்டுக்கொள்ளலாம். அதாவது போர் நெருக்கடி தீரும் வரையில் அந்த வரி இருக்கும். அந்த நெருக்கடி காலம் முடிந்துவிட்ட பின்னால் இதை எடுத்துவிடுவது என்பது தான் இதிலுள்ள கொள்கை. இதை எப்படிப் போடுவது என்று தொழில் அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். எப்படிப் போடுவது என்று நான் திடீரென்று சொல்லிவிட முடியாது. இன்னின்ன வருமானம் உடையவர் எந்தெந்த விகிதத்தில் 'வார் டாக்ஸ்' கொடுக்கலாம், அதை எந்த அளவிற்கு தாங்க முடியுமோ அந்த அளவுக்கு போடலாம். சாதாரண வரியைத் தாங்க முடியாதவர்களின் மீது எப்படியெல்லாம் வரிகளை போடலாம் என்பதற்கு வழி கூறுபவர்கள் நிச்சயமாக இதற்கும் வழி கூறுவார்கள். அதை நாம் ஓரளவுக்கு பாதுகாப்பு உணர்ச்சியின் பெயரால் நெருக்கடி காலத்தில் கொடுப்பதற்கு வழிகாண முடியும். அதல்லாமல் நிரந்தரமான வகையில் அமையக்கூடிய இந்த மசோதாவை இந்தச் சந்தர்ப்பத்திலாவது கைவிட வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*** கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, நான் ஆரம்பத்தில் விரிவாக பல விஷயங்களைக் குறிப்பிட்டேன். எல்லா விபரங்களைப்பற்றியும் விரிவாகச் சொன்னேன். ஆதலால், இந்த விவாதத்திற்கு நான் விரிவாக விடை அளிக்கவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். அதோடு, மேலும் இந்த மன்றத்தின் நேரத்தை நான் எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. இந்தத் திருத்தத்தை கொடுத்த கனம் உறுப்பினர் அவர்கள் எவ்வாறெல்லாம் நில வரி மேலும், மேலும் உயர்ந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டார்கள். முன்பு ஆறு கோடி சில்லரை இருந்தது. இப்போது 12 கோடி சில்லரை என்று நானே என் பேச்சில் குறிப்பிட்டேன். மொத்தம் வருமானம் 170 கோடியாக இருக்கிறது. அதில் முன்னால் 6 கோடியாக இருந்தது இப்போது 12 கோடியாக உயர்ந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் என்ன என்பதை நாம் உணர்ந்து கொள்ளவேண்டும். சாகுபடிக்குக் கொண்டுவரப்படாத நிலங்கள் எல்லாம் இப்போது சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. முன்னால் புஞ்சை நிலமாக இருந்தவையெல்லாம் இப்போது நஞ்சை நிலமாக ஆக்கப்பட்டிருக்கின்றன. நீர் வசதி இல்லாதிருந்த நிலங்கள் எல்லாம் இப்போது நல்ல நீர் வசதி பெற்றிருக்கின்றன. இப்படிப்பட்ட வளர்ச்சிகள் வந்ததினால்தான் நிலவரியும் ஓரளவுக்கு உயர்ந்திருக்கிறது. இப்போது 12½ கோடி சில்லரை ரூபாய் அளவுக்குத்தான் ஏறியிருக்கிறது. இதைத்தான் நான் முன்பு குறிப்பிட்டேன்.

கிராமங்களிலுள்ள சிறு விவசாயிகள்தான் நிலவரி அதிகமாக கொடுக்கவேண்டியிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இப்போது கொண்டுவரப்படும் மசோதாவின் பிரகாரம் இப்போது

ஐந்து ரூபாய் கொடுக்கின்றவர்கள் கூடுதலாக 1¼ ரூபாய் கொடுக்க வேண்டும். இரண்டு ரூபாய்க்கு ½ ரூபாய் கூடுதலாகக் கொடுக்க வேண்டும். 300 ரூபாய்க்கு 75 ரூபாய் அதிகமாக கொடுக்கவேண்டும். 100-க்கு 25 என்ற முறையில் கொடுக்கவேண்டியிருக்கும். அந்த வகையில் ஒரே மட்டமாக இருக்கவேண்டும் என்ற அளவில் தான் இப்போது 25 சத விகிதம் என்று போட்டிருக்கிறோம். இதைத் தான் நான் முன்பு குறிப்பிட்டேன். இதுவும் நெருக்கடி நிலைமையை பொட்டித்தான் போடப்பட்டிருக்கிறது. இதை வேறு விதத்தில் ஆலோசிக்கக்கூடாது, அதற்கு இடமும் இல்லை. ஆனால், இந்த நெருக்கடி நிலை தீர்ந்த பிறகு எவ்வாறு இதை ராஷனலைஸ் பண்ணுவது, எந்த விதத்தில் இதைச் சீராக்கலாம் என்பது பற்றி நன்றாக பரிசீலனை செய்து முடிவு செய்யலாம் என்று தான் நான் குறிப்பிட்டேன். விவசாய வருமான வரியை எடுத்துவிடுவதா, அல்லது வேறு எந்த விதத்தில் மாற்றி அமைப்பது, நிலவரியைப் பொறுத்த அளவில் எந்தவிதத்தில் மாற்றி அமைப்பது, ஒரேயடியாக எடுத்துவிடலாமா, அல்லது ஓரளவுக்கு மட்டும் எடுத்துவிடுவதா, அல்லது எந்தவிதத்தில் மாற்றி அமைப்பது, என்பதைப் பற்றி யெல்லாம் ஆலோசிக்கவேண்டும். மொத்தத்தில் வருமானம் பெறுகின்றவர்கள், நிலம் உள்ளவர்கள், தங்களுக்கும் இந்த நாட்டைப் பற்றிய பொறுப்பு இருக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும். இதிலுள்ள பொறுப்பை ஓரளவுக்கு ஏற்றுக் கொள்வது என்பது ஒரு கொள்கையாகக் கொள்ளவேண்டும் என்பதை நான் குறிப்பிட்டேன். இப்போது கொண்டு வந்து நிறைவேற்றக் கூடிய மசோதாவின்படி வரியை உயர்த்தினால்கூட, அது கொடுக்க வேண்டியவர்கள் மீது தாங்க முடியாத சுமையாக ஏற்படாது என்று அரசாங்கம் நிச்சயமாக நம்புகிறது.

கனம் சுதந்திராக் கட்சித் தலைவர் அரசாங்க நிமித்தமாக, அரசாங்கத்தைச் சேர்ந்தவர்கள் நிமித்தமாக, புத்திமதி எல்லாம் சொன்னார்கள். அதற்காக அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசாங்கத்திற்கும் தெரிகிறது. இந்த அரசாங்கமும் விவசாயம் செய்கிற பெருங்குடி மக்களுடைய நிலவரத்தை உணர்ந்திருக்கிறது. விவசாயம் செய்கிறவர்கள், நீர்ப்பாசன வசதியோடு செய்கிறவர்கள், ஒரு போகம் செய்கிறவர்கள், இரண்டு போகம் செய்கிறவர்கள், மூன்று போகம் செய்கிறவர்கள், இப்போது இருக்கிற நெல் விலை, எல்லாவற்றையும் வைத்துக் கொண்டு பார்த்தால், தங்களை விட வறுமை நிலையில் இருக்கிறவர்களுடைய வசதியைப் பெருக்கும் வகையிலே ஓரளவு அவர்கள் அதிகமாக வரியாகக் கொடுக்கவேண்டும் என்பது அவர்களுக்குத் தாங்க முடியாத சுமையாக இருக்காது. இதை அவர்கள் கொடுக்கக் கூடும். இதனால் விவசாயிகளின் ஊக்கம் குறையும் என்பதை நாங்கள் நம்பவில்லை, நான் நம்பவில்லை. விவசாயிகளுடைய ஊக்கம் குறையும் முறையில் அரசாங்கம் எதையும் செய்யாது. இப்போது அவசியம் ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவுக்கு அவர்களால் கொடுக்க முடியும் என்று உணர்ந்து தான் கொண்டு வந்திருக்கிறோம். திருத்தத்தில் 25 சதவீதத்தை 15 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மொத்தத்தில் எல்லா

VAN. 31 N6



N65.32-7



வற்றுக்கும் 25 சதவீதம் என்று போட்டிருக்கிறது. பின்னால் 15 ஆக இருப்பதா, 10 ஆக இருப்பதா, அல்லது இல்லாமல் இருப்பதா என்பதெல்லாம், நான் முன்பு குறிப்பிட்டது போல, நெருக்கடி நிலை தீர்ந்த பிறகு பரிசீலிக்கவேண்டிய விஷயம். இப்போது போடுவது, பிறகு எடுத்துவிடுவது என்று சொன்னால், 2 ஆண்டுக்கு அல்லது 3 ஆண்டுக்கு என்று கூட போட்டிருக்கலாம். ஆனால், எல்லாவற்றையும் வைத்து பின்னால் ராஷனலைஸ் செய்து மாற்றி அமைப்பது என்று இருக்கட்டும் என்று நான் முன்பே சொன்னேன், மறுபடியும் சொல்லுகிறேன்; நெருக்கடி நிலை தீர்ந்த பிறகு, எவ்வாறு ராஷனலைஸ் செய்வது என்று எடுத்துக்கொண்டு முடிவு செய்யலாம், இந்த மன்றம் முடிவு செய்ய முடியும். ஆகையால் தான் இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று சொல்லி முடித்துக்கொள்ளுகிறேன்.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** கனம் முதல் அமைச்சர் கூறுகிற போது, இது நெருக்கடி நிலைக்கு மட்டும் தான் என்று கூறினார்கள். அப்படியானால் முதல் பிரிவில் " it shall remain in force for a period of one year or two years " என்று போடுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம்:** கனம் அங்கத்தினர் நான் சொன்னபோது கவனிக்கவில்லை. வேறு ஏதோ பேசிக் கொண்டிருந்தார் என்று நினைக்கிறேன். அப்படிப் போட முடியாது. அப்படி போடுவதாக இல்லை. இப்போது போடுவது 25 சதவீதம். இந்த 25 சதவீதத்தை எடுத்துவிடுவது அல்ல அரசாங்கத்தின் எண்ணம். மறுபடியும் யோசித்து எவ்வளவு தாங்குவார்கள், எவ்வளவுக்கு வசதிகளைப் பெருக்கவேண்டியிருக்கிறது, விவசாயிகளிடம் எவ்வளவு வாங்குவது என்பதைப் பார்த்து ராஷனலைஸ் செய்வது பற்றி நெருக்கடி தீர்ந்த பிறகு யோசிக்கலாம். ஆகையால் தான் தாற்காலிக வரி என்று போடவில்லை என்று சொன்னேன்.

64927

**திரு. இரா. நெடுஞ்செழியன்:** கனம் அவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சியினர் எவ்வளவோ வேண்டுகோள் விடுத்தும், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற முறையிலே பிடிவாதமாக இருக்கிற காரணத்தினால், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் பங்கு கொள்ளுவதிலிருந்து விலகி, நாங்கள் எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்க வெளிநடப்பு செய்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த தேசத்திலே தற்போது நிலவுகிற அவசர நிலைமையிலும், மாநிலத்திலே உள்ள பருவ நிலைக் கோளாறு, ஏற்கெனவே விவசாயிகளுக்கு உள்ள வரிச்சுமை இவற்றையெல்லாம் கவனித்துப் பார்க்கும்போது இப்போது கொண்டுவரப்பட்டுள்ள நிலவரித் தண்டம், தண்ணீர்த் தீர்வைத் தண்டம் ஆகியவை நியாயமற்றவை, பொருந்தாதவை, தேசத்தின் தற்கால முயற்சிகளுக்குத் தீமை பயப்பவை என்று மனப்பூர்வமாக நாங்கள் நம்புவதால்—"செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க செய்யாமை யானுங் கெடும்"—என்று

[திரு. சா. கணேசன்] [10th November 1965

வள்ளுவர் வாக்குப்படி, இதை நிறைவேற்றும்போது இங்கு இருப்பது கூடப் பாபம் என்று நினைக்கின்ற காரணத்தினால் நாங்களும் வெளியேறுகிறோம்.

**திரு. மீ. கலியாணசுந்தரம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மசோதாவின் நிலையைப்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். ஆகையால்தான் இந்த மசோதா சட்டம் ஆகக் கூடிய சமயத்தில் கலந்து கொள்ளுவது கூடத் தவறு என்று கருதி இந்தச் சபையை விட்டு நாங்கள் வெளியேறுகிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழகம், சுதந்திரா, கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேறினார்கள்.)

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** கனம் எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறிவிட்டு நடப்பது போல அதே மாதிரி எங்களுக்கும் பேசத் தெரியும். எங்கள் கட்சி சார்பாகவும் பேசலாம். எதிர்க் கட்சிகள் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள் என்று பேசலாம், கண்டிக்கலாம். எங்களுக்குப் பண்பாடு இருக்கிறது. அந்தப் பண்பாட்டையொட்டி நாங்கள் ஒன்றும் கூறவில்லை என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Since the mover of the amendment is not in his seat, the amendment is deemed to have been withdrawn.

Clause 3 was put and carried.

Clauses 4 to 17 were put and carried.

Clause 1, the Enacting Formula and the Long Title were put and carried.

THE HON. SRI V. RAMAIAH : Sir, I move—

"That the Madras Land Revenue and Water-cess (Surcharge) Bill, 1965 (L.A. Bill No. 30 of 1965) be passed".

The motion was put and carried and the Bill was passed.

## V—VOTING ON DEMANDS FOR GRANTS FOR EXCESS EXPENDITURE IN 1962–63

### DEMAND NO. II—MOTOR VEHICLES ACTS—ADMINISTRATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 21,034 under Demand No. II—Motor Vehicles Acts—Administration".

The Demand was put and carried and the Grant was made.



10th November 1965]

### DEMAND NO. X—ADMINISTRATION OF JUSTICE.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 38,111 under Demand No. X—Administration of Justice".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND NO. XI—JAILS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 6,99,885 under Demand No. XI—Jails".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND NO. XIV—MEDICAL.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 12,09,907 under Demand No. XIV—Medical".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND NO. XXII—KHADI.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 7,780 under Demand No. XXII—Khadi".

The Demand was put and carried and the Grant was made.

### DEMAND NO. XXIII—COMMUNITY DEVELOPMENT PROJECTS, ETC.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 10,32,894 under Demand No. XXIII—Community Development Projects, etc."

The Demand was put and carried and the Grant was made.

[10th November 1965

DEMAND NO. XXVI—IRRIGATION.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 17,28,622 under Demand No. XXVI—Irrigation".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXVII—PUBLIC WORKS—WORKS.

12-00 noon THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 45,11,513 under Demand No. XXVII—Public Works—Works".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXVIII—PUBLIC WORKS—ESTABLISHMENT AND TOOLS AND PLANT.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 2,53,539 under Demand No. XXVIII—Public Works—Establishment and Tools and Plant".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXX—ROAD TRANSPORT SCHEMES.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 2,45,838 under Demand No. XXX—Road Transport Schemes".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXXII—PENSIONS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 2,00,587 under Demand No. XXXII—Pensions".

The Demand was put and carried and the Grant was made.



10th November 1965]

DEMAND NO. XXXVI—OTHER MISCELLANEOUS CONTRIBUTIONS AND ASSIGNMENTS.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 4,23,942 under Demand No. XXXVI—Other Miscellaneous Contributions and Assignments".

The Demand was put and carried and the Grant was made.

DEMAND NO. XXXVIII—CAPITAL OUTLAY ON PUBLIC HEALTH.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Sir, on the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted an additional sum of Rs. 2,28,526 under Demand No. XXXVIII—Capital Outlay on Public Health".

The Demand was put and carried and the Grant was made.

**VI.—SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1965-66—GENERAL DISCUSSION.**

MR. SPEAKER: We have got one hour more. Nine Members have given their names to speak on this item. I do not know whether there will be any reduction in the number of speakers.

***திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கைகளின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லுவதற்கு நான் ஆசைப்படுகிறேன். சுமார் ரூ. 7 கோடி 50 லட்சம் அதிகச் செலவு சம்பந்தமாக இந்த துணை மானியக் கோரிக்கைகளின் அவசியத்தையும், நாட்டிலே ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமை காரணமாக இந்தச் செலவை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பதையும் பற்றி சபையின் முதல்வர் அவர்கள் தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். நாட்டிலே ஏற்பட்டிருக்கிற நெருக்கடி நிலைமையைப் பற்றியும், நாம் சமாளிக்கவேண்டிய சூழ்நிலையைப் பற்றியும் எந்தக் கட்சிக்கும் எந்தவிதமான அபிப்பிராய பேதமும் இருப்பதற்கில்லை. நாள் ஒன்றுக்கு ரூ. 2½ கோடிக்கு மேல் நாம் இந்தியாவின் போர் பாதுகாப்புக்காக செலவழிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். அதனுடைய முக்கியத்துவத்தை எதிர்க் கட்சியினராகிய நாங்கள் நன்றாக உணர்ந்திருக்கிறோம். இன்றைய தினம் இந்திய துணைக் கண்டம் பன்னெடுங் காலத்திற்குப் பிறகுதான் சமாளிக்க வேண்டிய, எதிர் நோக்க வேண்டிய ஒரு புதிய கட்டம் உருவாகியிருக்கிறது. 18 ஆண்டுகளாக ஆட்சி நடத்துகிற காங்கிரஸ் அரசாங்கமும் அவர்கள் வாழ்நாட்களில் சமாளித்திராத ஒரு நெருக்கடியான சூழ்நிலையை இன்றைக்கு சமாளிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். ஆனால், கொண்டுவந்திருக்கக்கூடிய வரிகளுடைய தன்மையைப் பற்றி எதிர்க்கட்சியின் சார்பில் நாங்கள் எங்களுடைய அதிருப்தியை தெரிவித்திருக்கிறோம். பணம் அதிகமாக தேவைப்

படுகிறது, பணம் இருந்தால்தான் நம்முடைய காரியங்களை நடத்த முடியும், நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு மத்திய சர்க்காரின் நிதி உதவி அதிகமாக கிடைப்பதற்கில்லை, அதற்கான சூழ்நிலை இல்லை என்றாலும், நிதிக் கமிஷனின் அறிக்கையின்படி நம்முடைய தமிழக சர்க்காருக்கு இன்னும் கூடுதலான வருமானம் இருப்பதற்கான நிலைமை தென்படுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையிலே ரூ. 7 கோடி சொச்சத்திற்கு அதிக செலவுக்கான துணை மான்யக் கோரிக்கைகளின் மீது நாம் விவாதிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். கடந்த வரவு-செலவு திட்டத்தை நாம் தயாரித்த பொழுது சுமார் ரூ. 8 கோடி துண்டு விழுகிறது என்று நாம் அறிவிக்கப்பட்டோம். இன்னும் இரண்டு, மூன்று மாதங்களில் நாம் அடுத்தாண்டிற்குரிய வரவு-செலவு திட்டத்தை தயாரித்து அளிக்கின்ற நிலைமையில், இன்றைய தினம் ரூ. 8 கோடிக்கு செலவு அதிகம் என்று கோரப்பட்டிருக்கிற துணை மான்யக் கோரிக்கைகளின் மீது நாம் விவாதிக்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். கொஞ்ச நேரத்திற்கு முன்பு தான் விவசாயிகளின் மீது போடப்படுகிற வரி விதிப்பு மசோதாவின் மீது விவாதம் நடைபெற்றது.

(கனம் உதவி சபாநாயகர் தலைமை)

இந்த நெருக்கடியான நேரத்தில் பலவிதமான முயற்சிகள் செய்து, நாட்டினுடைய பாதுகாப்பை நாம் பலப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். நாட்டினுடைய பாதுகாப்பை வலியுறுத்த வேண்டிய தருணத்தில், உள் நாட்டில் இருக்கிற அத்தனை பேர்களாலும் பாதுகாப்பு முயற்சிக்கு முக்கியமான மற்றொரு உதவி என்று கருதப்பட வேண்டியது வேளாண்மைத் துறையில் உற்பத்தியை பெருக்கவேண்டுமென்பதுதான். வேளாண்மைத் துறையில் பல பிரச்னைகளை நாம் எதிர்நோக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அமெரிக்காவிலிருந்து வந்துகொண்டிருந்த உணவுப் பொருள்கள் நமக்குக் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. வெளி நாடுகளை எதிர்பார்த்துத்தான், வெளி நாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்துதான் நம்முடைய நாட்டில் இருப்பவர்கள் வாழவேண்டும் என்ற நிலைமை இனிமேலும் நீடிப்பதற்கில்லை. நாமே கஷ்டப்பட்டு நம்முடைய வயிற்றையும், வாயையும் கட்டி நம்முடைய நாட்டிலுள்ள பிரச்னையை சமாளித்துக் கொண்டிருக்கிறோம். நம்முடைய அரசு திங்கள் கிழமைகளிலே மாலையிலே உணவு அருந்துவதை விட்டுவிட வேண்டும், விரதம் இருக்கவேண்டும் என்ற ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டிருக்கிறது. அதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். நம்முடைய தேவையைச் சுருக்கிக் கொள்வதன் மூலம், நம்முடைய உற்பத்தியைப் பெருக்கிக் கொள்வதன் மூலம், உள்நாட்டில் உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்கு மிகுந்த கவனம், தீவிர கவனம் செலுத்த வேண்டியவர்களாக இருக்கிறோம். உணவு உற்பத்தியைப் பெருக்குவது என்பது ஒரு கட்சியினுடைய பிரச்னை அல்ல. சில அதிகாரிகளுடைய பிரச்னை மட்டுமல்ல. எல்லா கட்சிகளும் சேர்ந்து, எல்லா இலாகாக்களும் சேர்ந்து, எல்லோரும் சேர்ந்து காட்டுகிற உத்-





வேகம், உணர்ச்சி புது ஒளி உருவாக்கப்படவேண்டும். 16,000 கிணறுகள் வெட்ட இருக்கிறோம், அடுத்த ஆண்டில் 20,000 கிணறுகள் அதிகமாக வெட்ட இருக்கிறோம், பம்பு செட்டுகளை அதிகமாக வழங்க இருக்கிறோம் என்று நடைமுறை விவரங்களைச் சொல்லி, துணை மான்யம் கோரப்படுகிறது. அவைகளையெல்லாம் நாம் செய்வது சரிதான். அது மட்டும் போதாது. தஞ்சை மாவட்டத்தில் அதிகமாக ஒரு போக சாகுபடிதான் செய்துகொண்டிருக்கிறார்கள், சம்பா சாகுபடிதான் செய்துகொண்டிருக்கிறார்கள். யாரோ ஒருசிலர் தான் குறுவை சாகுபடி செய்கிற கட்டத்தில் இருக்கிறார்கள். இந்த நிலைமை மாறி, மூன்று போகம் சாகுபடி செய்யக்கூடிய நிலைமை எல்லா நேரங்களிலும் விவசாயம் செய்கின்ற சூழ்நிலை ஏற்படுத்தப்படவேண்டும். மூன்று போக சாகுபடி செய்வதற்கான சூழ்நிலை தஞ்சாவூர் ஜில்லாவில் இல்லாமல் இருப்பதற்கு காரணம், மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் விட்டால், காவேரியின் கிளை வாய்க்கால்கள் வழியாக தண்ணீர் வந்தால்தான், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ளவர்கள் விவசாயத்தைத் தொடங்க முடியும். இந்த நேரத்திலே அவர்கள் சம்பா சாகுபடிதான் செய்கிறார்கள். இடையிலே நான்கு மாத காலம் அவர்களுக்கு ஓய்வு இருக்கிறது. தண்ணீர் இல்லாத காலத்தில் ஆற்றுப் படுகைகளிலும், மற்ற இடங்களிலும் தண்ணீர் கிடைக்க வேண்டிய முயற்சிகளைச் செய்ய வேண்டும். இன்றைக்கு கிணறுகள் வெட்டிக் கொடுக்கிறோம். என்றாலும், அவைகளெல்லாம் சீக்கிரமாகச் செயல்படுத்தப்பட வேண்டும்.

உணவு உற்பத்தியைப் பொறுத்தவரையில், அதிலே எல்லாக் கட்சிக்காரர்களும் ஈடுபடவேண்டும். அது எல்லாக் கட்சிக்காரர்களும் சேர்ந்து செய்யும் முயற்சியாக இருக்கவேண்டும். ஒவ்வொரு இடத்திலும், டெவலப்மெண்ட் ஆபீசர்கள் இருக்கிறார்கள், உயர் நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இருக்கிறார்கள், எலிமெண்டரி ஸ்கூல் ஆசிரியர்கள் இருக்கிறார்கள், இவர்கள் எல்லாம் சேர்ந்து உணவு உற்பத்தியைப் பெருக்க வழிவகை செய்யப்பட வேண்டும். இவர்களிடம் எல்லாம், ஒரு பரபரப்பையும், ஊக்கத்தையும் உண்டு பண்ணவேண்டும்.

இன்றைக்கு செய்தி இலாகா பிரசுரங்களை வெளியிடுகிறது. அவர்கள் விவசாயிகள் முப்போகச்சாகுபடியை எப்படிச் செய்ய வேண்டும், விவசாயத்தை எப்படிப் பெருக்கவேண்டும், எப்படியெல்லாம் தண்ணியைப் பெறமுடியும், எந்த அதிகாரியை அணுகினால், எந்த உதவி கிடைக்கும், எந்தக் காரியத்திற்கு யாரை அணுகவேண்டும் என்பவை பற்றியெல்லாம் நல்ல முறையில் எடுத்துச் சொல்லும் வகையில், பிரசாரம் செய்யும் வகையில், செய்தித் துறை பணியாற்றவேண்டும். அதில் எல்லா எதிர்க் கட்சிக்காரர்களும், ஆளும் கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும், எல்லோரும் சேர்ந்து உழைத்து வேளாண்மைப் பெருக்கத்தில் வெற்றிகாண வழி வகுக்கவேண்டும்.

சபையின் முதல்வர், அறிக்கையில் விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கும் சூழ்நிலையை உத்தேசித்து, இன்றைக்கு நமது கொள்கைகள் அனைத்திலுமே சிக்கனமும், ஆடம்பர

[திரு. இராம. அரங்கண்ணல்] [10th November 1965

மின்மையுமே முக்கிய அம்சமாகவிருக்கவேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மேலும், திட்டத்திற்கோ அல்லது பாதுகாப்பு முயற்சிக்கோ தொடர்பற்ற எந்த வேலைக்கும் கூடுதல் பணியாளர்களை நியமிக்கக் கூடாது என்று இப்போது தடை விதித்திருக்கிறோம், எதிர்பாராச் செலவுகளையும், பயணப்படி செலவுகளையும் குறைக்கும்படி பணித்திருக்கின்றோம், என்றும் சொல்லியிருக்கிறார்கள். செலவுகளைக் குறைத்துக்கொண்டும், அதிகமாகச் செலவுகள் வராத வகையில் ஒருவிதமான கொள்கையை நாம் கடைபிடிக்கவேண்டும். (மணி அடிக்கப்பட்டது) துணைமானியக் கோரிக்கை பொருத்து, சில விவரங்களை மட்டும் குறிப்பிட்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

'மாநில ஆட்சி தலைவர், அமைச்சர்கள்' என்ற தலைப்பின் கீழ், ஒரு உயர்மட்ட சிக்கன சீரமைப்புக்குழு அமைத்திருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அடுத்தபடியாக, 'மாவட்ட நிர்வாகம்' என்ற தலைப்பின் கீழ், தாசில்தார்களுக்கு 19 ஜீப்புக்கள் வாங்கி வழங்க 5 லட்சம் ரூபாய் அனுமதி கோரப்படுகிறது. இதே நிர்வாகத் தலைப்பின் கீழே, வாட்டர் சர்சார்ஜ் சட்டத்தை அமுல் நடத்த 1-¾ லட்சம் செலவு கூடுதல் ஆகியது. அதில் இந்த ஆண்டு ஒரு லட்சம் அனுமதி கோரப்படுகிறது. 'போலீஸ்' தலைப்பின் கீழ், கண்ணீர் புகைக்காக என்று ரூபாய் 3,25,400 கோரப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில், ஊர்க்காவல் படைக்கு ரூபாய் 4,03,500 தான். இங்கே கண்ணீர் புகைக்கு இவ்வளவு தொகை கோரப்பட்டிருக்கிறது. வேளாண்மை என்கிற தலைப்பின் கீழ், 15 நகராட்சிப்பகுதிகளில், உழவனுக்குத் தொழில் முறை ஆலோசனை நல்க என்று பணியாளர்கள் நியமிக்க இந்த ஆண்டுக்கு ரூ. 16,000. விலங்கின வளர்ப்பு என்கிற தலைப்பின் கீழ், மாதவரத்தில் ஒரு லட்ச ரூபாய்க்கு ஒரு மீட்புப்பண்ணை வைக்க தொகை கோரப்படுகிறது. இந்த நெருக்கடி நேரத்திலே, மாதவரத்தில் எதற்காக இன்னும் ஒரு பண்ணை என்பதுதான் விளங்கவில்லை, அதே போலவே, பிரிக்கப்பட்டிருக்கிற, தர்மபுரி மாவட்டத்திற்கு ரூபாய் 10.44 லட்சமும், நாகர்கோவிலில் ரிசர்வ் போலீசாருக்கு வீடுகள் கட்ட என்று ரூபாய் 20.50 லட்சமும், திருச்சி எஞ்ஜினியரிங் கல்லூரி வெளி அமைப்புக்காக, அதாவது, காம்பௌண்ட், நிலத்தை ஆர்ஜிதம் செய்தல் போன்ற வகைகளுக்காக ரூபாய் 35.98 லட்சமும் கோரப்பட்டிருக்கிறது. நான் இந்த விவரங்களைக் கொடுப்பதன் நோக்கம் என்னவென்றால், நாம் சிக்கன சீரமைப்புக் குழுவைப் போட்டு காரியங்களைச் செய்ய முற்படும்போது, நிர்வாகச் செலவுகளையும் அதிகமாக்காமல் பார்த்துக் கொண்டு நாட்டினுடைய முக்கியமான தேவைகளை மட்டும் செய்து, நாட்டின் பாதுகாப்பிற்கான முயற்சிகளில் ஈடுபட்டு, அதற்குமட்டும் முதலிடம் கொடுக்கவேண்டும், வேளாண்மை வளர்ச்சிக்கு எல்லா ஊக்கங்களையும் அளிக்கவேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

**MR. DEPUTY SPEAKER**: I fix five minutes for each hon. Member. Srimathi Ananthanayaki will now speak.



10th November 1965]

***திருமதி டி. என். அனந்தநாயகி**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடி நிலைமையில் டாக்டர்களுக்கு ரூபாய் 250 அலவன்ஸ் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். ஹோம் கார்ட்ஸ் சம்பந்தமாகவும் நல்ல முறையில் தீவிரமாக செயல்பட வேண்டும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு டாக்டர்கள் மட்டுந்தான் போர் முனைக்கு போகிறார்கள் என்பது அல்ல. எஞ்ஜினியர்களும் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கும், எந்தச் சலுகை டாக்டர்களுக்குக் கொடுக்கிறோமோ, அதே சலுகையை ஆர்மிக்கு செல்லும் எஞ்ஜினியர்களுக்கும் கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும், அதையும் கனம் முதல் அமைச்சர் கவனிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

குறிப்பாக, மெடிகல் துறையை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு மெடிகல் படிப்புக்கே மாணவர்கள் இடம் கிடைத்து வருவதற்கு கஷ்டமாக இருக்கிறது. அதில் ஒரு கமிட்டி போட்டு, தேர்வு செய்யவேண்டும் என்று கூறியிருக்கிறோம். அது உண்மையிலேயே நல்ல மார்க்குகள் வாங்கிய பையன்கள் ஏமாற்றம் அடைந்து போகும் நிலைமைதான் இருக்கிறது. ஃபார்வர்ட் கம்யூனிடிகள், பாக்வர்ட் கம்யூனிடிகள், ஷெட்யூல்ட் காஸ்ட் என்றெல்லாம் வைத்திருக்கிறோம். இருந்தும், அதே கம்யூனிடியில் புத்திசாலிகளுக்குக் கிடைத்தால் நலமாக இருக்கும். அப்படியில்லாமல், ஒரே கம்யூனிடியில் அதிக மார்க்கு வாங்கியவனுக்கு கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை என்றால், ஏமாற்றம் தான் அடைகிறான். ஆகையினால், ஒரு பர்சென்ட் என்று போட்டாலும் கூட, புத்திசாலி மாணவனுக்கு இடம் கிடைக்காமல் போவது வருந்தத்தக்கதாக இருக்கிறது. அதே போலத்தான், ஒரு மாவட்டத்திற்கு இத்தனை ஸீட்டு என்று போட்டிருக்கிறோம் அதுவும் சரியாக இல்லை. பிற்பட்ட சமூகப் பையன்கள் இருந்தால் அதிகமாகக் கொடுக்க வேண்டும் என்பதுதான் சாலச் சிறந்தது என்று குறிப்பிட விரும்புகிறேன். தேர்வில் பர்சனலிடி டெஸ்ட் என்று வைத்து, மெடிகலி அன்ஃபிட், வேலைக்கே லாயக்கில்லை, உடல்கூறு சரியில்லை என்று இருப்பது, அந்த முறையில் மாணவனை நீக்குவது இருப்பதால், நல்ல மார்க்குகள் வாங்கிய பையன் மனம் ஒடிந்து, 'எதிர்வீட்டுப் பையனுக்கு கிடைத்துவிட்டது, எனக்கு கிடைக்கவில்லை', என்று எண்ணி, எண்ணி, மனம் ஒடிந்து போகிறான். இந்தக் கமிட்டி நடந்து கொள்வது சரியாக இல்லை, என்பதைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது அவசர நிலைக்காக 100 பேர்களை எடுத்தார்கள். முன்பே போட்ட லிஸ்டுபடிக் கொடுத்து, வராத நாலு ஸீட்டுகளுக்கு, பி.எஸ்.ஸி.களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். புத்திசாலிகள் எடுக்கப்படவில்லை. ஆகையினால் இந்த தேர்வில் முதல் அமைச்சர் கவனம் செலுத்தி, மெடிகல் காலேஜ், இஞ்ஜினியரிங் காலேஜ் இந்த படிப்புக்களுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதில் இந்தக் கமிட்டிகள் தலையிடாத வகையில், உண்மையிலேயே புத்திசாலிகளுக்கு இடம் கிடைக்க,

[திருமதி டி. என். அனந்தநாயகி] [10th November 1965

அதே நேரத்திலே பிற்பட்ட, ஷெட்யூல்ட் வகுப்பு மாணவர்களுக்கும் இடம் கிடைக்க, அவர்கள் பாதிக்கப்படாத முறையில், ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்தால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்து, ஹோம் கார்ட்ஸ்ஸைப் பொறுத்த வரையில், எஸ்.எஸ்.எல்.ஸி. படித்தவர்களைத் தான் அதில் எடுத்துக் கொள்ளுகிறார்கள். எங்கள் தொகுதியில் எத்தனையோ பேர் படிக்காதவர்களாக இருந்தும், ஹோம் கார்ட்ஸில் சேர ஆர்வமுள்ளவர்களாக இருக்கிறார்கள். படிக்காதவர்களுக்குள்ள ஆர்வம் படித்தவர்களுக்குக் கூட இல்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு படிக்காதவர்கள் இதில் சேர முன்வருகிறார்கள். "தேசப் பாதுகாப்புக்காக எதுவும் செய்ய முடியாமல் நாங்கள் இருக்கிறோமே, எங்களை எதிலும் சேர்த்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்களே" என்று ஏராளமான பேர்கள் மிகவும் வருத்தப்பட்டுக் கொள்ளுகிறார்கள். இத்தகைய படையில் படித்தவர்களாக இருப்பவர்களுக்குச் சில பயிற்சிகள் கொடுக்க வேண்டியது அவசியமாக இருக்கலாம். என்றாலும், படிக்காதவர்களையும் இத்தகைய படையில் பயன்படுத்திக்கொள்ள முடியுமா என்று ஆலோசித்துப் பார்த்து, இவர்களையும் ஹோம் கார்ட்ஸில் சேர்த்துக்கொள்வது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். படிக்காதவர்களாக இருந்தும் கூட, தேசத்தின் மீது பற்று உடையவர்களாக இருப்பார்களானால், அவர்களையும் ஏதாவது பயிற்சி கொடுத்து எடுத்துக்கொள்ள முடியுமா என்று பார்க்கவேண்டும். உள்நாட்டுப் பாதுகாப்பு, இரவில் ரோந்து சுற்றி வருவது போன்ற வேலைகளையாவது அவர்களுக்குக் கொடுக்கலாமா என்று யோசித்துப் பார்த்து அதையும் செய்வார்களானால் சாலச் சிறந்ததாக இருக்கும்.

அடுத்து, எக்ஸ்-ஸர்விஸ்மென்னுக்கு ஹோம் கார்ட்ஸில் சேர முதல் ப்ரிஃபரன்ஸ் கொடுக்கவேண்டும். ஏற்கனவே பயிற்சி பெற்றிருக்கக்கூடிய அத்தகையவர்களை ஹோம்கார்ட்ஸில் சேர்த்துக் கொள்வதனால் இன்னும் நன்மை அதிகரிக்கும் என்று சொல்லி, நேரம் இல்லாத காரணத்தால், இதோடு நிறுத்திக்கொள்ள விரும்புகிறேன். ஹோம் கார்ட்ஸில் படிக்காதவர்களுக்கும் ஏதாவது வாய்ப்பு தரக்கூடிய வகையில் கனம் முதல் அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்தால், இன்னும் அதிகமான பேர்கள் இந்தப் பணியில் பங்கு கொள்ள வாய்ப்பு இருக்கும் என்று கூறி என்னுடைய வார்த்தையை முடிக்கின்றேன்.

*** திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, நம்முடைய முதல் அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் இந்த உபமானியக் கோரிக்கையை ஆதரித்து இரண்டொரு வார்த்தைகள் நான் கூறஆசைப்படுகிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும், இந்த நாட்டைப் பாதுகாக்கவேண்டும் என்ற அடிப்படையில் எவ்வளவு செலவானாலும் கூட அதையெல்லாம் சரிக்கட்டக் கூடிய நிலைமையில் நாம் வரி போட்டு நாட்டினுடைய நிலைமையைச் சமாளிக்க



10th November 1965] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் இந்த உபமானியக் கோரிக்கை சபை முன் வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், எதிர்க் கட்சியைச் சார்ந்த கனம் அங்கத்தினர்கள் இங்கே பேசும்போது, "வரி வேண்டாம்", "வரி வேண்டாம்" என்று விதண்டா வாதம் இங்கே பேசிக்கொண்டு, "நல்ல எண்ணத்தில் அரசாங்கம் என்ன கூறுகிறதோ அதைச் செய்வதற்குத் தயாராய் இருக்கின்றது, எங்களுடைய குறைகளைக் கவனித்தால் போதும்" என்று சொல்லிக் கொண்டு அரசாங்கத்திற்குப் பக்க பலமாக இருக்கும் விவசாயிகளைத் தூண்டிவிடக் கூடிய அளவிலே பொறுப்புள்ள கனம் அங்கத்தினர்கள் இந்த மன்றத்தில் பேசிக்கொண்டிருப்பார்களானால், அது இந்த நாட்டுக்கோ, பேசுகின்ற அங்கத்தினருக்கோ, அந்தப் பகுதி மக்களுக்கோ நல்லதல்ல என்பதைத் தான் இந்தச் சமயத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே சமயத்தில், விவசாயிகளைப் பொறுத்த வரையில், அவர்களுக்கு உதவி செய்யக் கூடிய பல துறைகள் இருக்கின்றன. உர விநியோகம் செய்யப்படுகிறது. உரத்தைக் குறைந்த விலையில் கொடுக்க வேண்டும். அடுத்து, கிணறு வெட்டக் கடன் கொடுக்கின்றோம். மூன்று ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கிறவர்கள் கிணறு வெட்ட முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படிப்பட்ட சிறு நிலச்சுவாந்தார்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். இதைப்பற்றி நான் பலமுறை இந்தமன்றத்தில் சொல்லியிருக்கிறேன். கனம் விவசாய அமைச்சர், ரெவின்யூ அமைச்சர், முதல் அமைச்சர் ஆகிய மூன்று பேர்களும் இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தயவு செய்து இதை நல்ல முறையில் பரிசிலனை செய்து, இருபது ஏக்கர், முப்பது ஏக்கருக்கு ஒரு பெரிய, பொதுக் கிணறு வெட்டிக் கொடுக்க வகை செய்யவேண்டும். இருபது முப்பது ஏக்கருக்குப் பாசன வசதி உண்டு பண்ணுகிற போது, அதற்காக எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை என்ற கருத்தில், அரசாங்கமே பொதுக் கிணறு வெட்டிக் கொடுத்தால், தண்ணீர்த் தீர்வை கொடுக்க விவசாயிகள் மறுக்கமாட்டார்கள் என்பதை இந்தச் சபையில் நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**கனம் திரு. பூ. கக்கன்** : காலையிலே கூட ஒரு கேள்விக்கு நான் பதில் சொன்னேன். எங்கெல்லாம் பெரிய கிணறு வெட்டக் கிராம மகாஜனங்கள் கூட்டுறவு முறையிலோ அல்லது பஞ்சாயத்து மூலமாகவோ முன்வருகிறார்களோ, அங்கெல்லாம் இத்தகைய கிணறு வெட்டி விவசாயத்திற்கு தண்ணீர் கொடுக்க வசதி செய்யலாம் என்று சொல்லியிருக்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : கூட்டுறவு முறையில் கிணறு வெட்டுவதைப் பற்றியும், பஞ்சாயத்தின் மூலமாகச் செய்வதைப் பற்றியும் கனம் அமைச்சர் அவர்கள் அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார்கள். நான் சொல்வது, தனிப்பட்ட விவசாயிகளை ஒன்றாக இணைத்து, அவர்களுடைய நிலங்களையெல்லாம் ஒரு பெரிய

கிணற்றுப் பாசனத்தின் கீழ் கொண்டுவரலாம் என்றுதான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அதைப் பரிசிலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது ஏராளமான பம்ப் செட் வைக்கவேண்டும் என்று சொல்கிறார்கள். கிணறு வெட்டுவதற்கு நாலில் ஒரு பங்கு மானியமாகக் கொடுப்பது போன்று, பம்ப் செட் வைப்பதற்கும் ஒரு தொகையை மானியமாகக் கொடுத்தால் ஏழை விவசாயிகளுக்கு நன்மையாக இருக்கும். அதற்காகச் சற்றுப் பணத்தை ஒதுக்கி வைப்பது நலமாக இருக்கும். நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் மனது வைத்தால், அந்தக் காரியமும் ஏழை விவசாய மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய வகையில் நல்ல முறையில் நடக்க ஏதுவாக இருக்கும்.

ட்ராக்டர் கொடுப்பதற்காக இரண்டு லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக அறிகிறேன். ட்ராக்டர் கொடுப்பதிலும் நாம் சற்று அதிக கவனத்தைச் செலுத்தி, எத்தனை ட்ராக்டர்கள் வேண்டும் என்று விவசாயிகள் கேட்டாலும், அதைத் தாராள மனதோடு கொடுக்கவேண்டும் என்று விவசாயிகளின் சார்பாக நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் பல சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் கூட சர்க்காரிலே வந்து ஓராண்டு, ஈராண்டு, மூன்று ஆண்டுகளாகியும் பெண்டிங்காக இருக்கின்றன. குறிப்பாக, என்னுடைய பகுதியில் பழனியாண்டவர் ஓடைத் திட்டம், மஞ்சள் மலை ஓடைத் திட்டம் இன்னும் சாங்ஷன் ஆகாமல் இருக்கின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எஸ்டிமேட் போட்டு அனுப்பி வைக்கப்பட்டும் இன்னும் கவனிக்கப்படாமலிருக்கின்றன. இவற்றிலும் சற்று கவனம் செலுத்தி, சாங்ஷன் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கூட நாம் விதியைத் தளர்த்தியிருக்கிறோம் என்று தொழிலமைச்சர் அவர்கள் காலையில் சொன்னார்கள். இருந்தாலும், தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்களோ அவர்கள் அத்தனை பேருக்கும் ஏதாவது தொழில் நடத்த வழி வகை செய்து கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கின்றேன்.

*** திரு. வி. எஸ். எஸ். மணி:** சட்டமன்றத் துணைத்தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் பேரில் ஒரு சில வார்த்தைகள் நான் சொல்ல ஆசைப்படுகிறேன். சிக்கனத்தைக் கையாளும் முறையிலே 'ஹை பவர் கமிட்டி ஆன் இக்கானமி' நிர்வாக சிக்கன சீரமைப்பு உயர் மட்டக்குழு என்று ஒரு குழு ஏற்பட்டிருக்கிறது. அந்தக் குழுவிற்காக ஆண்டுதோறும் செலவழிக்கப்படுகிற தொகை ரூபாய் 57,400 என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிக்கனத்தைக் கையாளுவதற்காக ஒரு குழு ஏற்படுத்துவதிலேயே ஆண்டுதோறும் ரூபாய் 57,400



செலவிடுவது என்று சொன்னால், வேலியே பயிரை மேய்வதாகத்தான் ஆகிறது. சிக்கனத்திற்காக அமைக்கப்படும் அந்தக் குழுவிற்கு இவ்வளவு செலவு செய்வது முறையா என்பது என்னுடைய முதல் கேள்வியாகும்.

அடுத்து, நெருக்கடி காலத்தில் இராணுவத்தில் சேவை செய்யக் கூடிய டாக்டர்களுக்காக, அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களுடைய குடும்பத்தாருக்கு மாதந்தோறும் ரூபாய் 250 அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்ற ஒரு விதி வைத்திருக்கிறார்கள். ரூபாய் 250 வீதம் இந்த வகையில் இந்த ஆண்டில் ரூபாய் 20,000 செலவிடவேண்டிய நிலை இருக்கிறது. இந்தத் தொகையை நாம் ஏன் செலவழிக்க வேண்டும்? மத்திய சர்க்காரிடம் முறையிட்டு, அவர்களிடம் வற்புறுத்தி அந்தத் தொகையை நாம் ஏன் வாங்கக் கூடாது என்பது என்னுடைய இரண்டாவது கேள்வியாகும்.

மூன்றாவதாக, ஊர்க்காவல் படைக்காக (ஹோம் கார்ட்ஸ்) ஐந்து லட்ச ரூபாய் செலவு செய்யப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது பாராட்டுக்குரியதுதான். அதே நேரத்தில், போரிலே உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தாருக்கு மானியமாக ஒரு லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை மாவட்ட வாரியாகப் பிரித்துக் கொடுக்கப்படும் என்றும் சொல்லப்படுகிறது. இப்படி மாவட்டவாரியாக பிரித்துக் கொடுக்கப்படும் இந்தத் தொகை எந்த அடிப்படையிலே பிரித்துக் கொடுக்கப்படும் என்ற விவரம் காணப்படவில்லை. எந்த எந்த மாவட்டத்தில் எத்தனை எத்தனை வீரர்கள் படையில் சேர்ந்திருக்கிறார்கள், அவர்களில் எத்தனை பேர்கள் இறந்தார்கள் என்ற விவரம் இல்லை. இறந்த வீரர்களின் குடும்பத்தாருக்கு மானியம் கொடுப்பது மட்டும் போதாது. அவர்களுக்கு அதிகமான சலுகைகள் கொடுக்க வேண்டும். உயிரிழந்த வீரர்களின் குடும்பத்தாருக்கு ஆதரவளிக்கும் வகையில் அதிகமான சலுகைகள் அளிக்கப்படவேண்டும். குறிப்பாக, புறம்போக்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்து அவர்களுக்கு வழங்கலாம். இன்னும் மற்றச் சலுகைகள் அளிக்கலாம். இதையெல்லாம் சர்க்கார் கவனித்து ஊக்கம் அளிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதல் அமைச்சர் அவர்கள் நில வரியின் மீது சர்ச்சார்ஜ் விதிக்கும் மசோதாவின் பேரில் நடந்த விவாதத்திற்குப் பதிலளிக்கும்போது, நம்முடைய மாநிலத்தில் 60 லட்சம் பட்டாக்கள்தான் இருக்கின்றன என்றும், மக்கள் தொகை மூன்று கோடி என்றும், மூன்று கோடியில் 60 லட்சம் போக, மிஞ்சியுள்ளது இரண்டு கோடியே நாற்பது லட்சம் என்றும் சொன்னார்கள். ஒரு பட்டா என்றால், அதில் ஒரு நபர் மட்டும்தான் இருப்பார் என்பது அல்ல. 60 லட்சம் பட்டாக்கள் என்றால் 60 லட்சம் நபர்கள்தான் என்பது அல்ல. ஒரே பட்டாவில் உள்ள நிலம் பலருக்குப் பாத்தியதை உள்ளதாக இருக்கும். ஐந்தாறு பேர்கள் கொண்ட கூட்டுக் குடும்பமாக இருந்தால், ஒரு பட்டாவில்

12-3 p.m.

உள்ள அந்த நிலம் அவர்களுக்கெல்லாம் உரியதாக இருக்கும். ஆக, 60 லட்சம் பேர்கள்தான் என்று சொல்வது சரியல்ல என்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, மருத்துவக் கல்லூரிகளுக்கு இப்போது மாணவர்களைச் சேர்க்கும் முறையை மாற்றியாக வேண்டும். இப்போது ஒரு தேர்வுக் குழு (Selection Committee) ஏற்படுத்தியிருக்கிறார்கள். அந்தக் குழுவிற்கு மாசு கற்பிக்கப்படுகிறது. தகுதியைச் சரியான முறையில் கண்டுபிடிக்க முடியவில்லை. தகுதியுள்ளவர்களைக் காட்டிலும் தகுதியில்லாதவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். செலக்ஷன் கமிட்டி தேர்ந்து எடுக்கப்பட்ட மாணவர்களின் பட்டியல் வெளியிடும்பொழுது அவர்கள் பெற்றுள்ள கிரேடுகளையும், தேர்ந்து எடுக்கப்படாதவர்களின் கிரேடுகளையும் வெளியிட வேண்டும். அப்பொழுது சந்தேகம் நிவர்த்திக்கப்படும். எனவே, தேர்வு முறையை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

* SRI A. KUNJAN NADAR: Mr. Deputy Speaker, Sir, I wish to speak a few words with particular reference to the Kanyakumari district. The ryots of the Kanyakumari district especially the paddy cultivators are facing a crisis. They are not able to raise their crops or do proper manuring because of the failure of the last crop. Unless some relief is given to them immediately, it is going to vitally affect the paddy cultivation in the next crop also. Sir, I welcome the slogans 'Jai Jawan' and 'Jai Kisan' but I wish to point out one thing. The jawans come from the agricultural families. They are the sons of agriculturists. Taxing the agriculturists means taxing the jawans. So, I request the Government to reconsider their attitude towards the measure already passed. Sir, instead of taxing the agriculturists, can we not raise—as far as I am concerned I am prepared to give a blank cheque to the Government regarding defence efforts and the defence fund—a few crores of rupees by stopping our wastage in the various spheres of the Government administration? Can we not save a few crores of rupees by practising austerity? We only preach austerity. In this connection, I may cite one or two small examples of austerity! On the 5th of last month, our Hon. Chief Minister came to Nagercoil to preside over the Solidarity Conference. The young wife of one of the two war heroes who lost their lives in the war, a lady of 19 years with a small child, got financial assistance to the tune of Rs. 101 (one hundred and one) from the hands of our Hon. Chief Minister. Sir, I was noticing her feelings before that event. She was weeping with the child by the side of the platform. Sir, it is not politicians or any political party which have saved our honour and our freedom but it is our jawans. Sir, can we cite any politician who has gone to the war front before the cease-fire? Now everybody rushes there and takes photographs and also is keen in publishing them. So, it is the agriculturist's son who has saved our honour, our freedom and everything. Sir, on the same day there was another function at Nagercoil and that was the opening of the newly-built



Ozhukanaseri Bridge. Sir, there was a pandal erected at a cost of about Rs. 5,000 with all sorts of decorations, festoons, etc. Whose money is it? It is the Government money. We say that electricity should not be used. But, high power lights were burning in the pandal and on either side of the bridge throughout the day. Sir, should not our Hon. Ministers say that they do not want these things till the emergency is over? By doing that, we are not disrespecting our Chief Minister. Our esteem for him will be higher. Where is this money to come from? The sum of Rs. 5,000 is spent by the contractor. The concerned Engineer asks the contractor to do it. When the contractor's bill is written, this amount is also added to the contractor's bill. Thus it is the Government's money thtat is wasted. Also, when Hon. Ministers come, arches are erected. By whom? I can understand if they are erected by the Congressmen or other people but they are erected by the village officers, Tahsildars, Forest department personnel and other Government servants. Sir, are they not doing these things by spending the Government money? I request the Government to issue a circular that no Hon. Ministers should even be garlanded till the emergency is over.

Then, I wish to refer to one or two matters. . . .

MR. DEPUTY SPEAKER: The hon. Member's time is up. Now the hon. Member Sri Dharmalingam will speak.

* திரு. அ. பெ. தர்மலிங்கம்: மதிப்பிற்குரிய துணைத்தலைவர் அவர்களே, நாட்டுப் பாதுகாப்புக்காக போர் முனையில் நம் வீரர்கள் எல்லையிலே போராடிக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் தான் நாட்டு மக்களுடைய பாதுகாப்புக்காக ஏர் முனையில் விவசாயிகள் போராடிக் கொண்டிருக்கிறார்கள். நாட்டில் பஞ்சம், பட்டினி ஏற்படாத நிலை இருக்க வேண்டும் என்பதற்காக போராடிக் கொண்டிருக்கிற விவசாய மக்களுடைய சேவையை நாம் எந்த வகையிலும் அலட்சியப்படுத்த முடியாது. நாட்டைப் பாதுகாப்பதற்காக பாடுபடுகிற வீரர்களுக்கு நாம் எந்த எந்த வகைகளில் எல்லாம் துணை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோமோ அதே வகையில் நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக பாடுபடுகிற விவசாய மக்களுக்கும் துணை செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில்தான் விவசாய மக்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக பெரிய அளவில் பாதிக்கக் கூடிய முறையில் நிலவரி. நீர்வரியை 25 சதவிகிதம் உயர்த்த இன்று காலை மசோதாவை எடுத்துக்கொண்டபோது நாங்கள் வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது முதல் அமைச்சர் அவர்கள் நாங்கள் ஏதோ பண்பாடு குறைந்து வெளிநடப்புச் செய்வதாகக் குறிப்பிட்டார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அவர்கள் பண்பாடு குறைந்து விட்டதாகச் சொல்லவில்லை. எங்களுக்குப் பண்பாடு இருக்கிறது, நாங்கள் பேசவில்லை என்றுதான் சொன்னேன்.

[10th November 1965

**திரு. அ. பெ. தர்மலிங்கம்** : நன்றி. இந்த நாட்டைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் எதிர்க்கட்சியில் உள்ள எங்களுக்கும் மிகுந்த அக்கறை இருக்கிறது என்பதை செயலாலும், பேச்சாலும், எழுத்தாலும் எடுத்துக்காட்டி வருகிறோம். அப்படி இருக்கிற நேரத்தில் எனக்கு முன்னால் பேசிய திருமதி பொன்னம்மாள் கூட எங்களைக் குற்றம் சாட்டுவதுபோலப் பேசினாலும் தம்முடைய பகுதியில் இருக்கக் கூடிய குறைபாடுகளை எடுத்துச் சொன்னார்கள். பத்திரிகைகளில் வரவேண்டும் என்பதற்காகச் சொல்லியிருக்கலாம். தாம் அப்படிச் சொல்லியிருப்பது தம் தொகுதி மக்களுக்குத் தெரியவேண்டும் என்பதற்காகச் சொல்லியிருக்கலாம். உண்மையில் அவர்கள் குறிப்பிட்டதுபோல இந்த நாட்டில் இருக்கக் கூடிய விவசாயிகளுக்கு இருக்கும்படியான தொல்லைகள் மிக அதிகம். இருந்தும் இந்த நெருக்கடியான நேரத்தில் அவர்களுக்கு வரிச் சுமையையும் உயர்த்த வந்திருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். என்னுடைய மாவட்டத்தையும், தஞ்சை மாவட்டத்தையும் எடுத்துக் கொண்டால் தற்சமயம் தண்ணீரே இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வரப்போகிற போகம் விளையுமா, விளையாதா என்ற நிலைமை இருக்கிறது. அதன் காரணமாக உடனடியாக நமது அண்டை மாநிலமான மைசூருடன் பேசி தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்தாலன்றி சாகுபடி செய்வதற்கு வழியில்லை. அண்மையில் 9 அடித் தண்ணீர் வருவதாகச் சொன்னார்கள். நிச்சயமாக அது வந்தாலும் வயல்களில் பாய்வதற்கு வழியில்லை. ஆகவே உடனடியாக வரப்போகிற போகத்திற்கு வேண்டிய தண்ணீரை விடுவதற்கு அமைச்சரவை தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, எங்கள் பகுதியில் காவேரியில் ஊற்று நீரை கொரம்பு கட்டித் தண்ணீர் பாய்ச்சினால்தான் ஒரு பகுதியில் விவசாயம் செய்ய முடியும். ஆனால் அதிகாரிகள் அவ்வாறு கொரம்பு கட்டித் தண்ணீர் பாய்ச்சக் கூடாது என்று கெடுபிடி செய்கிறார்கள். அந்தப் பகுதியில் ஊறும் தண்ணீர் எப்படி இருந்தாலும் தஞ்சைப் பகுதிக்குப் போய்ச் சேராது. அது ஊற்று நீர். அந்த நீரைக் கொரம்பு கட்டிப் பாய்ச்சுவதுதான் அந்தப் பகுதியில் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆகவே, உடனடியாக அதற்கு அனுமதி அளிக்க வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, இப்போது போடப்பட்டிருக்கிற திட்டங்களினால் விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம் உயரவில்லை என்பதை நமது முதலமைச்சர் இந்தச் சபைமுன்பு வைத்துள்ள நான்காவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். விவசாயிகளுடைய நிலைமை மோசமாக இருக்கிறது. முன்னேற்றம் அடையவில்லை என்ற காரணத்தினால் பேசுகின்றோமே தவிர, அவர்களிடத்தில் பேசிவிட்டோம் என்று சொல்வதற்காக அல்ல என்று குறிப்பிட விரும்புகிறேன். இப்போது நிலவரி, நீர்வரி மூலமாக



10th November 1965] [அ. பெ. தர்மலிங்கம்]

உயர்த்தியிருப்பது மிகக் குறைந்ததுதான் என்று குறிப்பிடுகிறார்கள். இந்த 25 சதவிகிதம் உயர்வு என்பது உடனடியாக வரும் என்றும் சொல்லிவிட்டார்கள். பெட்ரோலுக்கு ஒன்றிரண்டு நயா பைசாதான் உயர்வு என்றாலும் அது 1-12-1965-இல் இருந்துதான் அமுலுக்கு வரும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் பஸ் கட்டணத்தை இந்த மாதம் 15-ஆம் தேதியிலிருந்து உயர்த்த இருக்கிறார்கள். இந்த வரி 1 பைசா, 2 பைசா என்ற அளவில் அதிகமாகின்ற காரணத்தால் மொத்தத்தில் 1 ரூபாய் 2 ரூபாய்தான் அதிகமாகும். ஆனால் நிலவரி, நீர் வரி இவைகளை எடுத்துக் கொண்டால் 25 சதவிகிதம் அதிகமாக்கப்படுவதால் கூடுதலான தொகையை உடனடியாகச் செலுத்த வேண்டியிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.)

* **திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையில் 10,000 கிணறுகள் வெட்டுவதற்கு மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு 20,000 கிணறுகள் அடுத்த வருஷத்திற்குள் வெட்டுவதற்காகவும் மானியம் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இப்பொழுது இருக்கின்ற நிலையில் பழைய கிணறுகளைத் தணிப்பது மிகவும் அவசியமாக இருக்கிறது. ஏனென்றால் மழையில்லாத காரணத்தால் வாட்டர் டேபிள்கள் இறங்கிவிட்டது. ஆகவே பழைய கிணறுகளையெல்லாம் தணிக்கவேண்டும். அப்படித் தணிக்கின்ற பொழுது பல தவறுகள் நடக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே அந்தத் தவறுகள் நடக்காமல் இருப்பதற்காக இந்த வேலையை பி. டபிள்யூ. டி. யிடம் கொடுத்தால் நல்லது. இதை ரெவின்யூ பீபிள் செய்வதால் அவர்களுக்கு இது சம்பந்தமான உயரம், மண் போன்றவைகள் மெஷர்மெண்ட்கள் எடுக்க தெரியவில்லை. ஆகவே, மெஷர்மெண்ட், செக் மெஷர்மெண்ட் இவைகள் எல்லாம் செய்வதற்காக இதை பி.டபிள்யூ.டி. யிடம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். புதிய கிணறுகள் வெட்டுவதோடு, பழைய கிணறுகளைத் தணிப்பதன் மூலம் அதிக அளவில் தண்ணீர் பெற முடியும். ஏனென்றால் மழையில்லாமல் இருக்கிறது, எலக்ட்ரிசிட்டி பம்ப் செட்டுகள் மூலமும் தண்ணீர் பாய்ச்சுவதற்கு முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, இந்த நேரத்தில் பழைய கிணறுகளைத் தணிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும். அதோடு இந்த பிளாஸ்டிங் செட்ஸ் நமக்கு இப்பொழுது அதிகமாகத் தேவைப்படுகிறது. இதை அன்னிய நாட்டிலிருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டியது இல்லை. நம்முடைய நாட்டிலேயே தயார் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தால் மிகவும் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த பிளாஸ்டிங் செட்ஸ்களுக்கு உபயோகப்படுத்துகிற பௌடர் கிடைப்பதும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அந்தப் பௌடர் கிடைப்பதற்கும் வசதி செய்து கொடுக்கவேண்டும். நீர்ப்பாசனம் சம்பந்தமாக, கால்வாய்களைத் துப்புரவு செய்வதற்கு மூலதனம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில்தான் இந்தக் கால்வாய் துப்புரவு வேலை நடைபெறுகிறது. திருநெல்வேலி ஜில்லாவை எடுத்துக்கொண்டால், தாமிரபரணியிலிருந்து வரக்கூடிய

கால்வாய்களை எல்லாம் தூர்ப்புரவு செய்ய திட்டமிருக்கிறது. ஜமீன் வரியாக்களில் உள்ள கால்வாய்களிலும் தூர்ப்புரவு வேலைகள் நடைபெறவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட பாசன கால்வாய்களைத் தூர்ப்புரவு செய்வதற்காகவும் பணம் ஒதுக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர்:** கனம் துணைச் சபாநாயகரவர்களே, தேசிய நெருக்கடியான இந்த நேரத்தில் உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற காரணத்தால் இன்று காலையில் இந்த நிலவரி, நீர் வரிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் அந்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கான காரணங்களைப்பற்றி குறிப்பிடும்போது, விவசாயிகள் இந்த வரியால் அதிகமாகப் பலன் பெறுகிறார்கள் என்று சொல்லப்பட்டது. இன்னும் பள்ளிக்கூடங்கள், ரோடுகள் இவைகள் அமைப்பதற்கும் பயன்படுகிறது என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த அளவிலே விவசாயிகளுக்கு உண்மையாகவே நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தோடு செய்து அப்படிச் செய்வதால் அந்த நன்மைகள் விவசாயிகளுக்குப் போய்ச் சேருவதாக இருந்தால் பரவாயில்லை. ஆனால் ஏதோ ஒரு காரணத்தைக் காட்டி விட்டு விவசாயிகள்மீது வரிப் போட்டால்—ஏற்கனவே பலவித மான வரிகள் போடப்பட்டிருப்பதால் விவசாயிகள் பிரேதம் போல் இருக்கிறார்கள்—அப்படிப் பிரேதம் போல் இருக்கின்ற விவசாயிகள்மீதுதான் இந்த வரி போடப்படுகிறது. பிரேதங்களின் மீது போடப்படுகின்ற வரியாகத்தான் இது காட்சியளிக்கிறதே தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை நான் தாழ்மையுடன் தெரிவித் துக்கொள்கிறேன். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகக் கிணறுகளை வெட்டவேண்டுமென்று மத்திய அரசாங்கம் உத்தரவு போட்டிருக்கிறது. சமீபத்தில் முதலமைச்சர் அவர்கள் கூட இதைப்பற்றி பேசிவிட்டு வந்திருக்கிறார்கள். 1948-ஆம் வருஷத்தி லிருந்து கிணறு வெட்டவேண்டுமென்று சொல்லப்பட்டு அதன்படி ஆயிரக்கணக்கான கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், வெட்டப்பட்ட கிணறுகள் பல ஆண்டுகளாக அப்படியே கிடந்து கொண்டிருக்கின்றன. பூராவாக வெட்டிக் கணக்கைக் கொடுக் காமல், விவசாயிகள் கணக்கைக் கொடுத்திருந்தாலும் அதிகாரிகள் சரிவரக் கவனிக்காத காரணத்தால் நூற்றுக்கணக்கான கிணறுகள் ஏற்கனவே ஏலத்திற்கு வந்து விட்டன. ஏலம் போட்டால் அதை ஒரு அணுவுக்குக் கூட எடுப்பதற்கு அங்கே ஆள் இல்லை. வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன், ஏலத்தில் எடுப்பதற்கு ஆளே கிடையாது; இந்த நிலைமை மதுரை ஜில்லாவில் ஏற்பட்டு இருக்கிறது என்பதைச் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கிணறு வெட்டுவதற்குக் கடன் கொடுக்க வேண்டுமென்றால் செக்யூரிட்டி கேட்கிறோம். இந்த நாட்டில் பிறந்த விவசாய மக்கள் அத்தனை பேருக்கும் எந்தவிதமான செக்யூரிட்டியும் தேவையில்லை என்ற நிலைமை இருந்தால்தான் இந்த நேரத்திலே உண்மையிலேயே தேசப் பாதுகாப்புக்காக பாடு படுகிறோம் என்று நிலைமை ஏற்படும். செக்யூரிட்டி கேட்கின்ற காரணத்தால் கிணற்றினுடைய மதிப்பும் அதிகமாகிவிடுகிறது.





ஏற்கனவே பரம்பரை, பரம்பரையாக கடனாளிகளாக இருக்கிறார் கள், பல வரிகளைக் கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். யுத்த நிதிக்காக என்று பலவிதமான வரிகளையும் கொடுக்கிறார்கள். ஆகவே, இவ்வளவும் கொடுத்துவிட்டால் கிணறு வெட்டுவதற்குப் பணம் மிஞ்சுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஆகவே இந்த வில்லங்க சர்டிபிகேட், ஸ்மான் சேவிங்ஸ் இவைகளையெல்லாம் நிறுத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதுதான் இந்த வேலைகளையெல்லாம் 10 அல்லது 15 நாட்களுக்குள் செய்து முடிக்க முடியும். குறிப்பிட்டு இருக்கின்ற படி அடுத்த மார்ச் மாதத்திற்குள் எல்லாவற்றையும் முடிக்க முடியும். இந்த நேரத்தில் எதிர்க்கட்சிகள் எல்லாம் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்று சொன்னார்கள். எல்லா எதிர்க்கட்சிகளும் நல்ல ஒத்துழைப்பைக் கொடுத்துக் கொண்டு வருகின்றன. ஆனால், காங்கிரஸ்காரர்கள்—காங்கிரஸ்காரர்கள் என்று சொல்வதால் காங்கிரஸ்காரர்கள் வருத்தப்படக் கூடாது—என்னுடைய தொகுதியிலே தண்ணீர் விடவில்லை, மழையில்லாத காரணத்தால் தண்ணீர் இல்லை என்று சொல்லி பசியினாலும், பட்டினியாலும் வாடி அலைந்து கொண்டிருக்கின்ற மக்கள் தண்ணீர் விடவேண்டு மென்று கேட்டால், தேர்தலில் யாருக்கு ஓட்டுப் போட்டீர்கள்? என்று கேட்கிறார்கள். ஆகவே, இந்த மாதிரியான தேர்தல் புத்தி இப்பொழுது இருக்கக்கூடாது, தேசிய புத்திதான் இருக்க வேண்டும். இந்த நேரத்திலே, எல்லோரும் ஒரு நாய் வயிற்றில் பிறந்தவர்கள் என்ற உணர்ச்சி ஏற்படவேண்டும்.

அடுத்தபடியாக, மதுரை ஜில்லாவில் மெயின் கால்வாயில் ஜுன் மாதத்திலேயே தண்ணீர் திறந்துவிட்டிருக்கவேண்டும், ஆனால் என்ன காரணத்தாலோ இன்னும் திறந்துவிடவில்லை. பெரியாற்றி லிருந்துதான் கிரடிட் மூலமாக அந்தத் தண்ணீர் கொடுக்கப்படும். ஆனால், மழையில்லாத காரணத்தால் தண்ணீர் கொடுக்கப்பட வில்லையா அல்லது பெரியாற்றிலே கரன்ட் உற்பத்தி செய்யப்படு கிறதா என்பதெல்லாம் அமைச்சர் அவர்களுக்குத்தான் தெரியும். 10,000 ஏக்கர் நிலத்தில் மூன்று முறை நடவு நட்டு, ஏற்கனவே கொஞ்சம் மழையும் பெய்த காரணத்தால் பயிர் இருக்கிறது. ஆனால், இந்தத் தண்ணீர் இப்பொழுது வந்தால்தான் பயிர் வளரும். இன்னும் 10, 15 நாட்களுக்காவது இந்தத் தண்ணீரைத் திறந்து விட வேண்டும். தயவுசெய்து இரண்டு லட்சம் மூட்டைகள் விளைய கூடிய இந்த நிலங்களுக்கு 10, 15 நாட்களுக்குத் தண்ணீர் கொடுத் தால்தான் நல்ல முறையிலே விவசாயம் செய்யமுடியும்.

இந்த நெருக்கடி நிலைமையிலே, திரு. குஞ்சன் நாடார் அவர்கள் சொன்னதுபோல் எல்லோரும் ஆடம்பரச் செலவுகளைக் குறைக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது.) ஒவ்வொரு நாளும் மீட்டிங், மீட்டிங் என்று சொல்லி அதற்காக 50 ஜீப்கள், 100 ஜீப்கள் சென்று கொண்டிருக்கின்றன. அதேமாதிரி ஜவான்களைப் பொறுத்தவரை யிலும் . . . .(மணியடிக்கப்பட்டது.)

**திரு. க. ர. நல்லசிவம்:** கனம் துணைச் சபாநாயகரவர்களே, நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையிலே அதிகமாக மழையில்லாத காரணத்தாலே தண்ணீர் கிடையாது, தண்ணீர் இல்லாத காரணத்

[திரு. க. ர. நல்லசிவம்] [10th November 1965

தால் வேளாண்மை கிடையாது, ஆகவே வேளாண்மை இல்லாத இடங்களிலே உள்ள விவசாயிகள்மீது இந்த வரியை விதிக்கக் கூடாது, அவர்களுக்கு வரி வஜா செய்யவேண்டும். அது மாத்திர மல்ல, அவர்களிடமிருந்து வரவேண்டிய கடன் தொகைகளைக்கூட இப்பொழுது வசூல் செய்யாமல் நிறுத்தி வைக்க வேண்டும். கீழ் பவானியைப் பொறுத்தவரையில், தண்ணீர் வருமென்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால் தண்ணீர் வரவில்லை, மழையும் வர வில்லை. இதுவும் கெட்டு அதுவும் கெட்டு அவர்கள் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள்மீது போட்டிருக்கக் கூடிய வரியை வஜா செய்யவேண்டும். இந்தத் தண்ணீரைப் பொறுத்தவரைக்கும் காவிரிக்குத் கொடுத்துக்கொண்டே இருக் கிறார்கள். அப்படிக் கொடுக்காமல் கொஞ்ச நாட்களுக்குத் தேக்கி வைத்தால் அந்தத் தண்ணீரை வைத்து நாம் 50,000 ஏக்கர் அல்லது ஒரு லட்சம் ஏக்கர் வரை பாசனம் செய்து கொள்ளலாம். மூன்று மாதங்கள்கூட தேக்கி வைக்க வேண்டியதில்லை. செப்டம்பர் 20-ம் தேதியிலிருந்து அக்டோபர் 30-ஆம் தேதி வரை இடையேயுள்ள 30-40 நாட்களுக்கு மட்டும் தேக்கிவைத்திருந்தால் அந்தத் தண்ணீரை வைத்து நாம் ஒருபோகம் சாகுபடி செய்யலாம். ஆனால் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. அது பெரிய ப்ராஜக்ட் தான், ஒத்துக்கொள்கிறேன். அதற்காக எங்களுடைய வயிற்றைக் காயவிட்டுவிட்டு அவர்களுக்குக் கொடுப்பதில் பிரயோசனமில்லை. ஒன்று டிசம்பரில் தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் அல்லது பிப்ரவரியிலாவது தண்ணீர் விடுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பாதுகாப்பு நிதியைப் பொறுத்தவரை நாங்கள் எதுவும் வசூல் செய்யவில்லை. சில அரசியல் கட்சிகள் லட்சம் லட்சமாக வசூல் செய்திருக்கின்றன. அந்த நிதியெல்லாம் இன்னும் கொடுக்கப்பட வில்லை என்றால் உடனடியாக அவற்றைப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

நம்முடைய ராஜ்யத்தைப் பொறுத்தவரை 'டிபென்ஸ் ஆப் இந்தியா' விதிகளின்கீழ் முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்கள், ஆதித்தனார் போன்றவர்களைக் கைது செய்து வைத்திருக்கிறது நம்முடைய சர்க்கார் . . .

